எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# சாகாக்கல்வி



இறைவன் திருவடிகளே நம் கண்கள்!




ஞானசற்குரு சிவ செல்வராஜ்

தங்க ஜோதி ஞானசபை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.

உ

# சாகாக்கல்வி

சாகாக்கலை
அதுவே
வாழுங்கலை
அதுவே
பிறவா பெருநிலை
அதுவே
இறவா பெருநிலை
அதுவே
மரணமிலா பெருவாழ்வு
அதுவே
பேரின்பப் பெருவாழ்வு



ஆதிகுரு



ஞானகுரு



சற்குரு

ஞானசற்குரு **சிவ செல்வராஜ்**
தங்கஜோதி ஞான சபை
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
கன்னியாகுமரி

# சாகாக் கல்வி

## ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியம்



**உலக மக்கள் அனைவரும்**

**ஞானம் பெற வழிகாட்டும் உண்மை**

**மெய்ஞ்ஞான இரகசியம்**

ௐ

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தங்க ஜோதி ஞானசபை
# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

17-49/P, தங்கஜோதி, மாதவபுரம், கன்னியாகுமரி - 629 702

## உங்கள் பொற்பாதங்களில்

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம்! நன்றி! நலமே நிலவுக!

சிரஞ்சீவியாக வாழ்க! சாதி, மதம், மொழி, இனம், நாடு முதலிய எந்த பாகுபாடுமின்றி உலக மக்கள் அனைவருக்கும் அடியேனின் பணிவான வணக்கங்கள்! உலக மக்களுக்காக, உண்மை ஞானத்தை எவ்வித இரகசியமுமின்றி, வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தி எல்லோரும் சத்தியத்தை உணர ஞானிகள் ஆசியால் அடியேன் எழுதி வெளியிடுவதே இந்நூலாகும்!

அடியேன் இதுவரை 23 நூற்கள் அன்பர்கள் உதவியால் வெளியிட்டுள்ளேன்! ஞானிகள் அருளாசியால் தான் அடியேனால் எழுதி வெளியிட முடிந்தது! குமரிமாவட்டம் தக்கலையில் அறிதுயில் கொண்டிருக்கும் அல்லாவின் குழந்தை பீர்முகம்மது ஓர் ஞானக்கடல்! அவர் உரைத்த ஞானமோ ஈடு இணையற்றது! அருட்பா உரைத்த வள்ளல் இராமலிங்கரும் அதைத்தான் ஆமோதித்தார்! பீரப்பா உரைத்த மெய்ஞ்ஞானத்தை அவர் அருளாலே அடியேன் உரை எழுதி வெளியிட்டு பாக்கியம் பெற்றேன்!

பைபிள் கூறும் ஞானத்தை படித்து உணர, பிதாவின் சுதன் இயேசுபிரான் அருள் புரிந்தார். அருள்வாய் இயேசுவே என பணிந்தேன், கருணைக்கடல் ஈசா நபி அருள்மழை பொழிந்தார்! “பாரப்பா பலவேத நூலும் பாரு!பாரு!” என அகஸ்திய மகரிஷி உரைத்தபடி எல்லா வேதமும் கண்ணுறும் பாக்கியம் கிட்டியது! கண்ணியனானேன்! இயேசு பிரான் அருளிய ஞானமும் அடியேனின் நூற்களில் வெளியிட அவர் அருளே காரணமாயிற்று!

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பாடி அருளியது, எல்லாம் வல்ல இறைவன் அருளால் அந்த பரம்பொருளுக்கே சூட்டப்பட்ட பாமாலைகள் தாம்!, என சுட்டிக்காட்டி சமரச பாவனையோடு வாழ்ந்த பெரியவர், உன்னதமான சன்மார்க்க சீலர் சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாகர்கோவில் ஊரில் பிறந்தவன் அடியேன்! மதங்கடந்து போனாலே!, மனம் கடந்து போனாலே!, கடவுளை, உள்கடந்து போய் காணலாம்! காணமுடியும்! என்பதற்கு இலக்கணமாக திகழ்ந்தவர்தான் சதாவதானி செய்குதம்பி பாவலர்! இந்த கத்துக்குட்டிக்கு அவர் ஆசியும் கிட்டியது!

குமரி மாவட்டம் பேயோடு எனும் ஊரில் அறிதுயில் கொண்டிருக்கும் செந்திலாண்டவன் அடியவர் குரு தவசி ஐயா அருளால் கடைத்தேறினேன்! பாடினேன் அவர் பாதம் பணிந்து!

குமரிமாவட்டம் தோட்டியோடு எனும் ஊரில் அறிதுயில் கொண்டிருக்கும் ஸ்ரீமௌன சுவாமிகள் அருள்பாலித்தார்! பாட வைத்தார்! பக்குவமும் தந்தார்!

குமரிமாவட்டம் தம்மத்துக்கோணம் எனும் ஊரில், அறிதுயில் கொண்ட அறுகம்புல் சித்தர் நடராஜசுவாமிகளை சமாதி வைக்கும் பெரும்பேறு அடியேனுக்கு கிட்டியது! 6 சென்று நிலம் காணிக்கையாக கொடுத்து புண்ணியம் தேடிக் கொண்டேன்! அறுகம்புல் சித்தர் பெருமகனாரோடு பலகாலமாக பழகும் பாக்கியம் கிட்டியதால் ஞானநிலைகள் பல அறியும் பேறு கிட்டியது! அடியேனுக்கு பீரப்பா பற்றி கூறி அருளியதும் அருகம்புல் சித்தரே! பாடினேன் அவர் மகிமையை! பார்த்து அருளினார் அடியேனை!

அடியேனுக்கு குருஸ்தானம் தந்த எம் தீட்சா குருநாதர் ஞானசித்தர் ஜோதி இராமசாமி தேசிகர்தான், எமக்கு ஆன்மீக பாதையை சுட்டிக் காட்டி உணர்த்திய மகான்! 1980-ல் திருவடி தீட்சை பெற்றது முதல் சாதனைக்கு துணை நின்று என்னை வளர்த்தி ஆளாக்கிய குரு! அவர் உள்ளவரை பணிந்து பணிவிடை செய்து பரிபக்குவம் பெற்றேன்! அன்னார் சமாதியாகுமுன்பு அடியேனை திருச்சிக்கு வரவழைத்து குரு பீடத்தை எமக்கு முழுமனதோடு தந்து ஆசீர்வதித்தார்! எங்குரு ஜோதி இராமசாமி தேசிகரை சமாதி வைக்கும் பாக்கியமும் அவரே எமக்கு தந்தருளினார்! அடியேன் செய்த பூர்வ ஜன்ம புண்ணியமே!

குமரிமாவட்டம் தேரூர் எனும் ஊரில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்த ஊரில், அருள்மிகு அழகிய மணவாள

விநாயகர், அருள்மிகு ஸ்ரீவித்யா ஹனுமன் கோயில் கொண்டுள்ள மடத்தில் ஆன்மீக பணிபுரிந்து வரும் குருமகாதேவ் அவர்களை சந்திக்கும் பாக்கியம் பெற்றேன். ஒரு வருடம் அவர் அருளுரைகள் கேட்டு அறிவு பெற்றேன்! அடியேன் சிரஞ்சீவி ஆஞ்சநேயர் அருள் பெற குரு மகாதேவ் அவர்களே காரணமானார்! சந்தித்த ஒரே வருடத்தில் அவருக்கும் அடியேனுக்கு ஏற்பட்ட பழக்கம் அன்பு அளப்பரியது! குருமகாதேவ் அவர்களையும் சமாதி வைக்கும் பெரும்பாக்கியம் அடியேனுக்கு கிட்டியது! பெரும் புண்ணியம் கிட்டியது!

மூன்று பெரும் மகான்களுக்கு சமாதி வைக்கும் பாக்கியம் பெற்ற அடியேன், புட்டபர்த்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவை வணங்கி அவர் பார்த்தருளும் புண்ணியம் பெற்றேன்! வள்ளிக்காவு அம்மா ஸ்ரீ அமிர்தானந்தமாயி அருளாசி பெற்று ஆனந்தம் அடைந்தேன்! வெள்ளியங்கிரி ஈசாவான ஜக்கி வாசுதேவ் அன்புக்கு பாத்திரனாகி அவர் அருளாசியும் பெற்றேன்! இப்படி பலப்பல பெரியவர்களை பார்த்து ஆசி பெற்றேன்!

திருச்செந்தூர் செந்திலாண்டவனும் சுசீந்திரம் ஆஞ்சநேயரும் கன்னியாகுமரி பகவதியம்மனும் உயிர் காத்து உன்னத நிலை தந்து குருவாக்கி குவலயம் வணங்க வைத்தனர்! பிறந்த பயனைப் பெற்றேன்!

வலிந்து எம்மை ஆட்க்கொண்டார் வள்ளல் இராமலிங்கர்! அறிவிலா சிறு பருவத்தே எம்மை உடனிருந்து காத்த ஒளியான ஞானி! இன்று அடியேனை பரிபூரணமாக ஆட்க்கொண்டு சற்குருவாக அமர்த்தி, ஞான உபதேசம் திருவடிதீட்சை கொடுக்க அருள்புரிந்து வருகிறார் வள்ளல் பெருமான்! நான் உரைக்கும் வார்த்தையெலாம் வள்ளல் பெருமான் எம் உள்ளத்திலிருந்து வெளிப்படுத்துவதே! எம்மை, எம் குடும்பத்தை, எம் சீடர்களை காத்து அருள்வதும் மெய்ஞ்ஞான சற்குருவள்ளல் பெருமானே!

இதுவரை அடியேனை 23 நூற்கள் எழுதி வெளியிட வைத்த வள்ளல் பெருமான், இப்போது அடியேன் மனைவி தங்கம் மகன் சுயம்ஜோதி கல்வி மூலமாக இந்த “சாகா” நூலையும் எழுதி வெளியிட தூண்டியுள்ளார்! எழுது என்கிறார்! வெளியிடு என்கிறார்! உள்ளிருந்து உரைக்கிறார்! உலகம் உய்ய, மரணமிலா பெருவாழ்வு பெற வள்ளல் பெருமான் வழி நடத்துகிறார்! அவர் அடிபணிந்து இட்ட பணியை செய்வனே, அவரருளால் செய்வதே

எமது வேலை!

அடியேன் இதுவரை எழுதிய 23 நூற்களும், இந்த நூலும் முதலில் அட்டையிலிருந்துதான் எழுத ஆரம்பித்தேன்! ஆரம்பத்தி லிருந்து கடைசிவரை உடனிருந்து, உள்ளிருந்து வழிகாட்டி, ஒளியூட்டி நடத்துபவர் வள்ளல் பெருமானே! அடியேன் கைதான் எழுதும்!

“சாகாக்கல்வி” - சாகாத நிலை பெற்றவர்கள் உபதேசித்தது! ஞானிகள் என்பர்! சித்தர்கள் என்பர்! சராசரி மனிதர் அடைய முடியுமா? ஆம், முடியும்! சாவா நிலைபெற்ற சிரஞ்சீவியானவர்கள் நம் மீது கருணை கொண்டு உபதேசித்துள்ளார்கள்!

இதுவரை இவ்வுலகில் தோன்றிய எல்லா மகான்களும், எல்லாம்வல்ல இறைவனைப் பற்றியே, அவரை ஜீவர்கள் எங்ஙனம் அடைவது என்பது பற்றியே பகர்ந்துள்ளார்கள்! இதையெல்லாம் தொகுத்து கோர்த்து மாலையாக்கி கண்மணி மாலையாக உங்கள் பொற்பாதங்களில் படைப்பதே அடியேனின் தலையாய பணியாகும்!

சாகாமல் இருக்க முடியும்!? முடியுமா? முடியும்! முயன்றால் முடியாதது ஒன்றுண்டா?

“முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்”!

“முயற்சி திருவினையாக்கும்”!

காலங்காலமாக பலரும் இரகசியம் என மறைத்து வைத்திருந்த ஞானத்தை இந்நூல் வெளிப்படுகிறது! அடியேனின் நூற்கள் எல்லாமே ஞான பரசிய நூற்கள் தாம்!

வாருங்கள் உங்களுக்கும் ஞானம் கிட்டும் எட்டும்!

இந்த ஞானத்தை உபதேசித்தும், தீட்சை கொடுத்தும் தங்க ஜோதி ஞான சபை கன்னியாகுமரியில் நடத்தியும் வருகிறேன்! சீடர்கள் காணிக்கையால் தான் வாழ்கிறேன்! வள்ளல் பெருமான் வளமோடு வாழ்வாங்கு வாழ வைத்துள்ளார்!

உலகம் ஒன்றுபட வேண்டும்!

ஏக இறைவனை உணரவேண்டும்!

சாகா நிலை பெற்று ஜீவர்கள் வாழவேண்டும்!

# சிவசெல்வராஜ் எழுதிய "கண்மணிமாலை" யை வாழ்த்திய வள்ளல் பெருமான்!

1992-ல் வள்ளல் பெருமான் அடியேனை "கண்மணிமாலை" என்னும் ஞான நூலை எழுத வைத்தார்! காலங்காலமாக எல்லோராலும் மறைத்து இரகசியமாக கருதப்பட்ட ஞானத்தை கண்மணிமாலையில் வெட்ட வெளிச்சமாக எழுதி வெளியிட வைத்தார் வள்ளல் பெருமான்! இது ஓர் ஆன்மீக புரட்சி என்றே கூறுவேன்! இன்றும் எம்மைப் போன்று வெளிப்படையாக சொல்வார் யாருமில்லை! வள்ளலார் கொடுத்த ஊக்கம் அடியேனுக்கு!

150 ஆண்டுக்கு பிறகு "கண்மணிமாலை" என்றொரு நூல்வரும் என கருதி வள்ளல் பெருமான் அன்றே திருவருட்பாவில் ஒரு கவி பாடியுள்ளார்! இது யான் பெற்ற பெரும் பாக்கியம்! இந்த பிறவியே புனிதம் அடைந்ததாக கருதுகிறேன்!

"கண்மணிமாலை"யின் பெருமையை வள்ளல் பெருமானே போற்றுகின்றாரெனில் அதை எழுதத் தூண்டி - எமக்கு அருள் புரிந்த அருள் வள்ளல் ஞானவள்ளல் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்! அவர் செய்த பணியை எம்மை செய்ய வைத்துள்ளார்! அவர் இட்டபணியை செய்வதேயாம் செய்யும் காட்டும் நன்றியாக கருதுகிறேன்!

திருவருட்பா இரண்டாம் திருமுறை - திருச்சாதனத் தெய்வத்திறம் - 2வது பாடல்

கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
**கண்மணிமா லைக்**கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய்.

வேணும் சுபம்

## ஞானசற்குரு

## ஸ்ரீசிவஸ்ரீ சிவசெல்வராஜ் அவர்களின் பொன்விழாவின் போது அன்பர்கள் வழங்கிய வாழ்த்துப்பா!

பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின்
புகழ்விளங்க வந்த அய்யனே
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப்
புதையலான ஞான மெய்யனே
மாரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை
மானுடர்க் களிக்க எண்ணியே
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த
**மாகுரு சிவசெல்வ ராஜரே**
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே
கருமணியுள் கனலு மாகியே
கருவரையும் கல்லரையும் காத்தருளும் கடவுளெனக்
கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும்
ஆஃத்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானமீயும்
அற்புத மெய்ஞ்ஞான குருபரா!

# உள்ளே எட்டு
# எட்டவேண்டும் உங்களுக்கு

க உயிர்

உ பிறப்பு இறப்பு

ங மெய்ப்பொருள்

ச மெய்

ரு தானம் தவம்

சா ஆதிகுரு

எ இராமலிங்க சுவாமிகள்

அ சாகாக் கல்வி

# க. E«ôó

மனிதன்! உயிர் இருந்தால் தான்? இல்லையேல் பிணம்!

மனிதர்களாகிய நம் உடலினுள் உயிர் இருந்தால் தான் நாம் சிவம்! இல்லையேல் நாம் சவம்!

உயிர் இருந்தால் தான் வாழ்வு! உயிர் உடலைவிட்டு போய்விட்டால்? சாவுதான்!

உடலும் உயிரும் சேர்ந்திருந்தாலே பிரயோஜனம்! பிரிந்திருந்தால் இயக்கம் இல்லை! உடலோடு உயிர் இருந்தாலே இயக்கம்!

உடலைவிட உயிரே முக்கியமானது!

உயிர் உடலுடன் இருக்கும்போது ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறான் மனிதன்!

இப்படி “தலை கால்” தெரியாமல் ஆடுபவனெல்லாம் அடிமுட்டாள்களே!

ஒருவன் எப்படி பிறக்கிறான்?

பிறப்பு என்றால் என்ன? ஏன் பிறக்கிறான்?

இதுதான் “தேவஇரகசியம்”. பிறப்பின் இரகசியம்.

ஆணும் பெண்ணும் சேர்ந்தால் குழந்தை பிறந்து விடுமா? நடக்காது!?

இன்றைக்கும் குழந்தையில்லாத தம்பதிகள் எத்தனையோ பேர் இருக்கின்றார்களே?

விஞ்ஞான வளர்ச்சி, டெஸ்ட்டியூப் குழந்தை உருவானது. ஆயிரம் பல்லாயிரம் முயற்சி செய்தால் ஒன்று உருவாகிறது! எல்லாம் ஜனிப்பதில்லை! எல்லோராலும் முடியாது!

விஞ்ஞானம் ஒரு வரையரைக்கு உட்பட்டதே! இன்றைய உலக வளர்ச்சி விஞ்ஞானத்தின் பரிமாணம் தான் மறுக்க முடியாது!

பஞ்சபூதங்களை அப்படி இப்படி, எதையாவது செய்து ஏதோதோ கண்டுபிடித்து சுகபோகமாக வாழ வழி கண்டனர் பலர்!

எல்லோரும் இந்த பூமியில் உள்ளவர்கள் தானே! இந்த பூமியில்தானே பிறந்தார்கள். இந்த பூமியில் தானே, எப்படியெப்படியோ வாழ்ந்து மடிந்தார்கள்!

இந்த மனிதர்கள் எங்கிருந்து பிறந்தார்கள்? பூமியில் கொஞ் சகாலம் வாழ்ந்தார்கள்! எல்லோரும் - பெரும்பாலானவர்கள் இறந்துபோயினர்! இறந்து அவர்கள் போனது எங்கே?!

பிறந்தவர்கள் எங்கிருந்து பிறந்தார்கள்? இறந்தவர்கள் எங்கு போனார்கள்? பிறந்தபோது வந்த உடல், இறந்தபோதும் இருக்கின்றதே?!

அப்படியானால் பிறப்பு இறப்பு உடலுக்கு இல்லையே?! பின் எதற்கு? உயிர்கொண்டு உடல் வந்தாலே பிரயோஜனம்! உயிர் இன்றி உடல் இருந்தால் மண்தான்!

உயிர்தான் பிரதானம்! உயிர்தான் பிறக்கிறது உடல் கொண்டு! உடலைவிட்டு உயிர் பிரிவதே மரணம்! பிறப்பும், இறப்பும் உயிர் வருவதும் போவதும் தான்!

நம்மை ஈன்ற தாய் நமக்கு கொடுத்தது உடல் மட்டுமே! அன்னையின் உடலிலிருந்து மாதந்தோறும் வெளியேறும் உதிரமே - தூமையே, அன்னை தந்தையின் சுரோணித சுக்கில சேர்க்கையால் உருண்டு திரண்டு கருவாகி பிண்டம் உருவாகிறது!

தீட்டு என்கிறோமே - நம் உடலே தீட்டுதான்! என் தாயின் தீட்டு தான் நான்! மனிதன் மட்டுமல்ல எல்லா ஜீவராசிகளும் இப்படியே!

ஆணின் உயிர் சக்தி சுக்கிலம், பெண்ணின் உயிர் சக்தி சுரோணிதம் இரண்டும் சேர்ந்தால்தான் புதிய உயிர் தோன்றுவதற்கு அஸ்திவாரம்!

ஆணும் பெண்ணும், சிவமும் சக்தியும், பாஸிட்டிவ் நெகட்டிவ் சேர்ந்தாலே - இணைந்தாலே சக்தி பிறக்கும் - இயக்கம் ஆரம்பமாகும்!

தாயின் கருவிலே வயிற்றிலே உருவாகிறது பிண்டம். மூன்று மாதத்திற்கு பிறகு தான் உயிர் வருகிறது! இதுவே அற்புதம்!! கருவுக்கு உயிர் எப்படி வந்தது?

இங்கேதான் ஆரம்பிக்கிறது நமது மெய்ஞ்ஞானம்! தாயின் வயிற்றிலே குழந்தையின் உடல்தான் உருவாகிறது! உயிர் எல்லாம் வல்ல இறைவன் அருளால் வந்து சேர்கிறது!!

இன்னாருக்கு இன்னார் வந்து பிறக்க வேண்டும் என்ற நியதி

- விதி - கணக்கு எல்லாம் வல்லவன் வகுத்து வைத்தது!! அவன் அருள் ஆக்ஞைபடியே உயிர் தாய் கருவிலே வருகிறது!

இதுவே தேவஇரகசியம்! எப்படி வருகிறது? யாரும் இதுவரை அறிந்திராத ஒன்று! இந்த காலத்தில் வருகிறது - வந்தது என்று அறியலாமே தவிர எப்படி வந்தது என அறிவார் இல்லை?!

“உயிர்” என்றால் என்ன? உயிர் எங்கிருந்தது? எப்படி உடலினுள் பிரவேசித்தது? உடலில் எங்கு இருக்கிறது? எந்த வடிவில் தன்மையில் இருக்கின்றது? இதையெல்லாம் அறிந்தவனே ஞானி!! அவனே சித்தன்!!

ஒரு சிசு தாயின் கருவிலே 10 மாதம் வளர்ந்து பூரணமாகிறது. ஒரு மாதம் என்பது 27 நாட்களே! 27 நட்சத்திரங்களே1 மாதம். 10 மாதம் என்றால் 270 நாட்களே.

பிரசவ வலியே சிசுவின் பிரவேசத்திற்கு அறிகுறி! கன்னிக்குடத்திலே - குளத்திலே மிதந்து கொண்டு, ‘ஸ்டிரா’ மூலம் குளிர்பானம் அருந்துவது போல, தொப்புள் கொடி மூலம் வேண்டிய உணவை தாயிடமிருந்து உறிஞ்சும் சிசு!

படைக்கும் பரமாத்மா உயிர்களை படைக்கும் ஆற்றல் இருக்கிறதே, அப்பப்பா அதிசயம்! அற்புதம்! எண்ணிப் பார்க்க இயலாத ஒப்பற்ற அதிஉன்னத செயலாகும்!

படைத்த பரமன் காக்க மாட்டானா? இறைவன் தான் நம்மை காப்பாற்றுகிறான்!! தாயின் கருவிலிருந்து எப்போதும் துணையாக இருந்து காப்பவன் இறைவன் மட்டுமே! கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் படியளப்பவன் காப்பவன் இறைவன் ஒருவனே!

நம்மை படைத்து காப்பவன் நம்மிடமிருந்து, நான் யார்? ஏன் பிறந்தேன்? எப்படி பிறந்தேன்? இதுபோன்ற எல்லாவற்றையும் மறைத்து ஒன்றுமறியா குழந்தையாக்கி உலகில் விட்டுவிடுகிறான்! என்னே! அவனின் திருவிளையாடல்!

பிறப்பிக்க வைத்த அந்த இறைவனே எல்லா உயிர்களுக்கும் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் தன்னை வெளிப்படுத்திக் காட்டு கின்றான்! ஆனால் அறிவோர் உணர்வோர் வெகுசிலரே! எல்லாம் வல்ல அந்த இறைவன் கருணையே உருவானவன்! அருட்கடல்! எல்லா உயிர்களும் தன்னை அடைய அருள்மழை பொழிகிறான்! மனிதனாக பிறக்கும் அனைவருக்கும் இறைவன் அருளும் அரிய சந்தர்ப்பம் இது!

மனிதனை படைத்து காத்து மறைத்து அருளும் எல்லாம் வல்ல பரம்பொருளே அவரவர் வினைக்கு ஏற்ப வாழ்வை முடித்தும் வைக்கிறான்! அதாவது உடலை அழித்து அல்லது மாற்றி அவரவர் பரிபக்குவத்திற்க்கேற்ற நிலையை தந்தருள்கிறார்!

எல்லாம் வல்ல இறைவன் ஒருவரே!
அவரே படைக்கிறார் அப்போது அவர் பிரம்மா!
அவரே காக்கிறார் அப்போது அவர் விஷ்ணு!
அவரே மறைக்கிறார் அப்போது அவர் மகேஸ்வரன்!
அவரே அருள்கிறார் அப்போது அவர் சதாசிவன்!
அவரே அழிக்கிறார் அப்போது அவரே ருத்திரன்!
ஆக ஏக இறைவனே எல்லாம் புரிகிறார்!
எல்லாமே அவன் செயலே!
அவனன்றி ஓர் அணுவும் அசையாது!

அணுவுக்கும் அணுவாக இருந்து எல்லாம் புரிந்து ஆள்வதும் அருள்வதும் அவன் திருவிளையாடல்களே! அற்புதங்களே!

அணுவுக்கு அணுவானவன், எல்லாம் ஆனவனே, எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவனே, அண்ட பகிரண்டமெங்கும் ஒளியாக ஒளிர்பவனே, நம் உயிராகவும் உள்ளான்!?

அணுவுக்கு அணுவாக ஒளிர்பவன் மனித உடலினுள் பலகோடி அணுத்துகள்கள் உள்ளதில் இல்லாமல் போவானா?! எங்கும் இருக்கும் இறைவன், தூணிலும் துரும்பிலும் இருக்கும் இறைவன் நம் உடலினுள்ளும் இருக்கிறான் “உயிராக”!!

இதுவே ஆதிகாலம் தொட்டு நமது ஞானிகள் எல்லோரும் உரைத்த உண்மை! வேதங்களில் சொல்லப்பட்ட இறை இரகசியம்! “அகம் பிரம்மாஸ்மி”.

இறைவன் பரமாத்மா பரம்பொருள் பெரும்ஜோதி ஆண்டவன் தானே சிறுஜோதியாக தன்னை குறுக்கிக் கொண்டு ஜீவாத்மாவாக உயிராக பிராணனாக நம்முள் இருக்கிறார்! நம் உள் மனம் கடந்த நிலையில் இருப்பதால் தான், உள்கடந்து இருப்பதால் தான் ஆன்றோர் கடவுள் என்றனர்!

கட உள்ளே, கடத்தினுள்ளே, உன் உடலினுள்ளே என்றுதான் இதற்கு பொருள்! கடவுளே என்று உலகத்திலே தேடுபவன் காண்பது அரிது! கடவுளே என்று உடலிலே தேடுபவன் காண்பான் கண்களினாலேயே! வெளியிலே தேடுவது பக்தி! உடலுள்ளே தேடுவது ஞானம்!

இறைவன் கூப்பிடுதூரத்தில் உள்ளான் கைக்கெட்டின இடத்தில் இருக்கிறான் என்பர் பெரியோர்கள்! நம் உடலே இறைவன் வாழும் ஆலயம்! ஜீவர்களே நடமாடும் சிவம்!

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே”

திருமந்திரம் கூறும் சத்தியம் இதுவே! தமிழ் மறையான இதுவே நாம் அறிந்து கொள்ள வேண்டிய மிகப்பெரிய உண்மை ஞானம்! இறை இரகசியம்!

நம் உடலாகிய கோயிலில் உயிராக தானே வீற்றிருக்கிறான் எல்லாம் வல்ல இறைவன்! இறைவன் பெருஞ்ஜோதியானவன் எங்கும் நிறைந்தவன்! இறைவனே ஜீவனாக சிறு ஜோதியாக நம் உடலில் உறைந்துள்ளான்! என்ன விந்தை இது?! அவனே படைத்து, காத்து, அழித்து, எதற்கு இந்த நாடகம்?! ஏனிந்த திருவிளையாடல்!?

இன்றுவரை இந்த உலகில் தோன்றிய மதங்களும், மார்க்கங்களும், மகான்கள் அனைவரும் சொன்னதும் ஒப்புக்கொண்டதும் இந்த உண்மை ஒன்றையே! இறைவன் ஒருவரே! அவர் ஜோதி ஸ்வரூபம்! நம் உடலில் உயிராக இருப்பதும் அவரே! அவனன்றி ஓர் அணுவும் அசையாது! இதை மறுப்பவர் யாருமில்லை! எம்மதமும் இந்த உண்மைகளை மறுத்ததில்லை! உலகர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரே உண்மை இது ஒன்றே!!

**எல்லாம் வல்ல இறைவன் பெருஞ்ஜோதிமயமானவன் என்றும் அவனே சிறுஜோதியாக நம் உடலில் உயிராக இருக்கின்றான் என்பதும் தான் மனிதனாக பிறந்த நாம் அறிய வேண்டிய மாபெரும் இரகசியம்!**

இதை அறிந்தவன், தகுந்த குருமூலம் உணர்ந்தவன் தான் ஞானம் பெறுவான்! அறிந்தால் மட்டும் போதாது! குருமூலம் தீட்சை மூலம் உணரவும் வேண்டும்! தவம் செய்யவும் வேண்டும்! அப்போதுதான் ஞானம் கிட்டும்! இறையருள் பெறலாம்!

இந்த ஞான இரகசியத்தை அறியாமல் இந்த உலகில் நீங்கள் வேறு எதை செய்தாலும் ஞானம் கிட்டாது!?

தன் உயிரை அறிவதே, உணர்வதே இறைவனை அறிவதும் உணர்வதுமாகும்! தன்னை அறிவதே கடவுளை அறிவதாகும்! ஒரு

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

உயிர் நம் உடலில் எங்கிருக்கிறது? என தெரிந்தால் தானே! எப்படி இருக்கிறது என்று தெரிந்தால் தானே தவம் செய்ய முடியும்?!

கடோபநிஷத்தில் எமதர்மனிடம் நசிகேதன் உயிர் பற்றி, கடவுள் பற்றி கேட்க அவர் கூறுகிறார், "இறைவன் மனிததேகத்தில் சின்முத்திரை அளவான இடத்தில் புகையில்லாத ஜோதியாக விளங்குகிறான்". என்று!? இதில் உடனே நாம் இரு விசயங்களை தெரிந்துகொள்ளலாம். ஒன்று இறைவன் மனித தேகத்திலுள் உள்ளார் என்பது! மற்றொன்று புகையில்லாத ஜோதியாக உள்ளார் என்பது!

மனித தேகத்தில் உள்ளார் சரி!? நாம் வெளியே பார்க்கும் ஜோதி - தீ புகையுள்ளது இறைவன் பெருஞ்ஜோதியானவன் - தீ வண்ணன் புகையில்லாத ஜோதிஸ்வரூபம் இதுவும் சரி!? நம் உடலில் எங்கிருக்கிறது? அந்த ஜோதி - உயிர் - இறைவன்? சின்முத்திரை அளவான இடம்! இதுதான் மாபெரும் இரகசியம்! குருஉபதேசம் மூலம் அறிய வேண்டியது! அடியேன் இங்கே எழுதுகிறேன்!

நன்றாக கவனமாக பாருங்கள்! மனித தேகத்தில் சின்முத்திரை அளவான இடத்தில் உள்ளார்! சின்முத்திரை பிடித்துக் கொண்டு உட்கார சொல்லவில்லை! சின்முத்திரை பிடித்தால் அதாவது நமது கை பெருவிரலும் ஆள்காட்டி விரலும் தொட்டுக் கொண்டநிலை அல்ல! ஆள்காட்டி விரலை மடக்கி பெருவிரலின் மத்தியிலுள்ள கோடை தொட்ட நிலையில் மற்ற மூன்று விரலும் நீட்டியபடி இருப்பதே "சின்முத்திரை"!

இப்படி சின்முத்திரை பிடித்தநிலையில் கை பெருவிரல் மத்தியிலுள்ள கோடு வரை உள்ள இடமே நம் கண் அளவு! வைத்துப் பாருங்கள்! சின்முத்திரை பிடித்தநிலையில் திருப்பிப் பார்த்தோமானால் சின்முத்திரை - கண்போல தோன்றும்! அதாவது, **இறைவன் மனித தேகத்தில் கண்ணில் ஜோதியாக துலங்குகிறான் என்பதே மாபெரும் ஞான இரகசியமாம்!**

இதை எவ்வளவு அற்புதமாக, பரிபாஷையாக, சூட்சுமமாக சொல்லி நம்மை சிந்திக்க வைத்திருக்கிறார்கள் நம் ஞானிகள்! என்னே அவர்களின் ஞானம்! ஞானம் எனப்படுவது பரிபூரண அறிவு! ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்! அறிவு விருத்தியாக வேண்டும் என்பதற்காகவே இங்ஙனம் பரிபாஷையாக சொல்லி வைத்தனர் ஞானிகளும்! சித்தர்களுமே!

“தேவன் ஒளியாக இருக்கிறார்! நீங்களும் ஒளியிலே நடந்தால் தேவனை தரிசிக்கலாம்! கண்ணே சரீரத்தின் விளக்காயிருக்கின்றது! உன் கண் ஒளி உள்ளதாக இருந்தால்! உன் சரீரம் முழுவதும் ஒளியுள்ளதாக விளங்கும்!” பைபிள் கூறும் ஞானம்! “ஒளியான தேவனை அடைய கண் ஒளியை பெருக்கு என்பதே”!

இயேசு கிறிஸ்து மட்டுமல்ல முகமது நபியும் புத்தரும் குருநானக்கும் மற்றும் உலகிலுள்ள எல்லா ஞானிகளும் உபதேசித்த உண்மை இதுவே!

**“உயிரே கடவுள்!” உண்மை இதுவே! ஞானம் இதுவே! இதை அறிவதே குரு உபதேசம்! இதை உணர்வதே தீட்சை! இதை அறிந்து உணர்ந்து தவம் செய்பவனே! அடைவான் இறைவனை!**

ஒருவன் ஞானம் பெற்றவனாயிருந்தால் இதை உபதேசித் திருப்பான்! தன்னை உணர்ந்து, தனக்குள் அந்த பரமாத்மாவே தன் உயிராக இருப்பதை அறிந்து, உணர்ந்து தவம் செய்பவனே பெறுவான் ஞானம்! அப்படி உணர்ந்தவன், கடவுளை போல எல்லோரிடமும் எல்லா உயிர்களிடமும் அன்பு பாராட்டுவான்! அவனே ஞானி!

வாடிய பயிரைக் கண்டு வாடியவர் வள்ளல் இராமலிங்கர்! தன்னகத்தே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை கண்டதால் தான் அவரிடம் மிளிர்ந்தது ஆன்மநேய ஒருமைப்பாடு!

“காளத்தியான் அவன் என் கண்ணில் உள்ளான் காண்” என திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியுள்ளார்கள்! இறைவன், மனிதர்களின் கண்ணில் ஒளியாக துலங்குகிறான்!

நம் கண் ஒளியாக - பார்வையின் ஆற்றலாக விளங்குவது நம் உயிர் சக்தியே! நம் கண்ணால் உலகையே பார்க்கிறோம்! கண்ணை பார்க்க முடியாதே! இறைவன் நம்முள் மறைந்திருக்கிறான்! சூட்சமமாக உள்ளே துலங்குகிறான்! ஊனக்கண் தவம் செய்து செய்து ஞானக் கண்ணாக மிளிரவேண்டும்! ஒளிர வேண்டும்! அப்போது உள் விளங்கும் ஜோதியை காணலாம் நம் கண்களை நாம் காணலாம்!

இன்னுமொரு விஷயம்! மனித உடலில் கண்ணில் ஒளியாக துலங்குகிறான் இறைவன்! அப்படியானால் குருடர்களுக்கு உயிர் இல்லையா? இருக்கிறதே! “அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது”. எக்குறையும் இன்றி நாம் பிறந்தது நாம் செய்த புண்ணிய பலத்தால்தான்!

**மனித தேகத்தில் தலையில், உள்ளே, மத்தியில் நம் உயிர் இருக்கின்றது! அது துலங்குவது இரு கண்களில்!**

திருமூலநாயனார் தமிழ் மறையான திருமந்திரத்தில் அப்பட்டமாக இந்த ஞான இரகசியத்தை கூறியருள்கிறார்! நமது சிரசிலிருந்து உச்சியிலிருந்து ஒரு நாடி கீழே இறங்குகிறது! அது நமது கண் காது மூக்கு உள்ளே சேரும் மத்தியில், வாயின் உள் அண்ணாக்குவின் சற்று மேல் வந்து நிலைகொண்டு, அங்கிருந்து இருநாடியாக பிரிந்து இரு கண்களில் வந்து சேர்கிறது! ஞான இரகசியம் இது!

நாம், தாயின் கருவில் உருவாகும் போது, சுக்கில சுரோணித கலப்பால் முதலில் உருவாவது ஒரு கண்! பின் அது இரண்டாக பிரிந்து அங்குள்ள உஷ்ணத்தால் வெதுப்பி வெதுப்பி பிண்ட உற்பத்தியாகிறது! இதை “அங்கமதில் முதன்முதலாய் தோன்றிய தலம் எது? சொல்ல வல்லார் உண்டானால் குரு என பணியலாமே” என சித்தர்கள் கூறுவர்! தாயின் கருவில் முதன்முதலில் உருவாகும் உறுப்பு கண்ணே!

இறைவன் அருளால் உயிர் வந்து சேரும்! ஒவ்வொரு மனிதனும் அவனவன் செய்த வினைகளுக்கு ஒப்ப உடல் எடுக்கிறான்! அதை தீர்மானிப்பது இறைவனே! எக்குறையுமின்றி பிறப்பவன் புண்ணியம் மிக்கவன்! அங்கஹீனமாக குறைகளுடன் பிறப்பவன் பாவாத்மா! இது அப்பா அம்மா மூதாதையர் செய்த பாவமல்ல! அவரவர் செய்த பாவ புண்ணியம் அவரவர்க்கே! “தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுதான்”!

இதில் மிகப்பெரிய பாவம் குருடனாக பிறப்பதே! பார்வை ஆற்றல் இல்லையெனில் உலகில் அவன் நடமாடும் பிணம்தானே! இதில் இன்னும் மிகப்பெரிய துரதிஷ்டம் தவம் செய்ய - கண் ஒளி கண்டு, உணர்ந்து தவம் செய்ய இயலாமல் போகின்றதே!

குருடன் ஞானம் பெறமுடியும்?! “உயிர்” இருகண்ணும் உள்ளே சேரும் இடத்தில் வாயினுள் அண்ணாக்கின்மேல் உச்சிக்குகீழே தானே இருக்கிறது?! அதை எண்ணி எண்ணி இறையருளால் தவம் செய்து ஞானம் பெறலாம்! எல்லோருக்கும் இறைவன் அருள்வார்!

கண் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் அவர்கள் தேவனை காண்பர்! தேடுகிறவர்கள் கண்டடைவர்! பரமபிதா குடியிருக்கும் உடலில் கோயிலை தேடுகிறவர்கள் கண்டடைவர்! அதை தட்டுங்கள் உணர்வால்! திறந்து அருள்வார் பரம்பொருள்! நீங்கள் கேளுங்கள் உங்களுக்கு எல்லாம் கொடுக்கப்படும்! நீங்கள் தவம் செய்து இறைமகனானால் பிறகென்ன?! ஒன்றும் வேண்டாமே?!

மனிதனாக எக்குறையுமின்றி பிறந்து ஞான சற்குரு ஒருவரை பணிந்து ஞானஉபதேசம், திருவடி தீட்சை பெற்று தவம் செய்து தன் உயிராக இறைவனே இருப்பதை உணர்ந்து, ஊனே ஒளி உடலாக மாறப் பெறலாம்! ஞானம் பெறலாம்! மனிதனாக பிறந்தது இதற்க்காகவே! தன் உயிரை - தன்னை உணரவே! ஒளி ஆகவே!

மனித உடலில் உயிர் இறைவனே என்றும் அது துலங்குவது கண்களிலே தான் என்றும் குரு உபதேசம் மூலம் அறிந்து உணர்பவனே பாக்கியவான்!

உயிரானது ஒரே அளவில், அதாவது ஊசிமுனை அளவான நெருப்பு - தீ - ஜோதியே! உலக மக்கள் அனைவருக்குமே!

உயிர் துலங்கும் கண் உலக மக்கள் அனைவருக்கும் ஒரே அளவில்தான் உள்ளது! அதாவது “கண்மணி”!! தாயின் கருவில் முதலில் உருவாகும் உறுப்பு கண்! பிறந்ததிலிருந்து 100 வயதானாலும் வளர்ச்சியோ முதிர்ச்சியோ அடையாத ஒரே உறுப்பு கண்! நம் உடலில் இருந்தாலும் எந்த பிடிப்பும் இன்றி, உடலோடு ஒட்டாமல் அந்தரத்தில் இருப்பது கண்மணி! “அந்தரத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே” என வள்ளலார் பாடியது இதையே!

“பிராண நீரானதில் உருண்டு திரண்டதை கண்டு அறிந்திடு நீ” என்கிறார் சித்தர்கள்!! நமது கண் எப்படி இருக்கிறது தெரியுமா? வெள்ளை விழி அடுத்து கருவிழி அதற்கும் மத்தியில் கண்மணி! கண்மணி எதையும் தொடாமல் இருக்கும்! இலேசாக சுழன்று கொண்டும் இருக்கும்? கருவிழிக்குள் பிராணநீர் உள்ளது அதில்தான் கண்மணி மிதந்து கொண்டிருக்கும்!

கண்மணி - கிருஷ்ணமணி - பாப்பா தனித்து தான் இருக்கும்! இருக்க முடியும்? ஏன் தெரியுமா? அது சுழன்று கொண்டிருக்கிற தல்லவா?! சுழலும் பொருள் அந்தரத்தில் தானே இருக்கும்! கண்மணியின் மத்தியில் ஊசிமுனையளவு துவாரம் இருக்கின்றது! அதனுள் ஊசிமுனையளவு நெருப்பு உள்ளது! ஊசிமுனை துவாரம் மெல்லிய ஜவ்வால் அடைபட்டிருக்கும்! இதுவே கண்மணி நிலை!

முதலில் கண்மணி ஊசிமுனை துவாரத்தின் உள் உள்ள ஊசிமுனை அளவு ஜோதியை நாம் காணவேண்டும்! அதற்கு தடையாக இருப்பது கண்மணி. ஊசிமுனை துவாரத்தை அடைத்துக் கொண்டிருக்கும் மெல்லிய ஜவ்வே! இதைத்தான் வள்ளலார் திரை என்றார்! உள்ளே ஆத்மஜோதி பிரகாசிக்கின்றது அதை மறைத்துக் கொண்டிருக்கும் திரையே, ஜவ்வே நம் மும்மலத்திரை! வடலூரில் சத்திய ஞான சபையில் ஜோதி தரிசனம் காட்டும்

தத்துவம் இதுவே! "சத்திய ஞான சபையை என்னுள் கண்டனன்" என்றல்லவா வள்ளலார் கூறுகிறார்! இன்னொரு சித்தர் ஊசிமுனை காட்டுக்குள் உலாவியே இருக்கலாம் வாரீர் என்கிறார்! கண்மணி ஊசிமுனை வாசலுக்குள் பிரவேசித்தால் அது பெருங்காடாமே!! என்ன விந்தை இது!

இப்படி "உயிர்" இருக்கும் இடம் போக ஞானிகள் வழி கூறியிருக்கிறார்கள்!

மனித உடலில் உள்ளே இருக்கும் உயிரை அறிய - உணர - உள்புகுந்து காண போகவேண்டிய வழியின் வாசல் நமது விழிகளே! கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பர்! கோ ஆகிய இறைவன் உள்ளே இருக்கிறார்! புறத்திலே வாசலிலே கோபுரம் இருக்கும் புறத்தே வாசல் நமக்கு கண்களல்லவா? கோபுரம் என விளங்கும் இறைவன் இருக்கும் கோயிலின் வாசல் நமது கண்ணே! தரிசித்தால் நமக்கு புண்ணியம் கோடி தரும் என்பதாகும்!

கண்தானம் செய்கிறோமல்லவா? யார் கண்ணையும் யாருக்கும் கொடுக்கலாம்! உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒன்று போல் இருக்கும் ஒரே உறுப்பு கண்தான்! கண்ணில் எந்த பேதமும் இல்லை! கண்ணிலே குடியிருக்கும் கடவுளிடமும் எந்த பேதமுமில்லை!

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

இந்த ஒரு குறளுக்கு பொருள் தெரிந்தாலே போதும் அவனுக்கு ஞானம் கிட்டும்! இந்த உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் ஒத்து இருப்பது ஒரே போல் இருப்பது கண்மணி என்பதை அறிபவன் உயிர்வாழ்வான்! சாகமாட்டான்! மற்றவர்கள் செத்துப் போவார்கள்! இதுவே நம் மெய்யாகிய உடலில் உள்ள பொருள். அதனால்தான் ஆன்றோர்கள் கண்ணை மெய்ப்பொருள் என்றனர்.

மெய்யான - சத்தியமான ஒளியான கடவுள் தங்கிய பொருள் என்பதாலும் கண்ணை மெய்ப்பொருள் என்பர்!

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை. அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை" என்பர் செல்வம் இல்லாமல் இந்த உலகில் வாழ முடியாது! அருள் இல்லாமல் மேலுலகம் கிட்டாது என்பர். மெய்ப்பொருள் -கண் இல்லார்க்கு-குருடருக்கு இவ்வுலகில்லை! மெய்ப் பொருளான கண்ணை அறியாதவர்களுக்கும் இவ்வுலகம் சோபிப்பதில்லை! மெய்ப்பொருளை அறிந்து தவம் செய்து இறைவன்

# உ. ©\lx C\lx

மனிதனின் அறியாமை, பிறப்பு - இறப்பு எனும் வாழ்க்கை சக்கரத்தில் சுழல்கிறான்! இறைவனின் திருவிளையாடல் சம்சார சாகரத்திலிருந்து மனிதனை கரையேற்றுவது!

“உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு”

திருவள்ளுவர் எவ்வளவு எளிமையாக கூறிவிட்டார் பாருங்கள்! உயிர் தங்கிய உடல் தான் அழிகிறது உயிர் அழிவதில்லை! உடலில் உள்ள உயிர் ஒரேயடியாக தூங்கிவிட்டால், ஆழ்ந்த நித்திரையில் இருந்து விடுவது தான் மரணம் என்றும், பின் உறக்கத்திலிருந்து விழிப்பது தான் மீண்டும் உடலெடுத்து பிறப்பது என்று ஞானத்தை கூறிவிட்டார்.

இப்படி தூங்குவதும் விழிப்பதுமாக இறப்பதும் மீண்டும் பிறப்பதுமாக இருந்தால் இதற்கு என்னதான் முடிவு?

சித்தர் பெருமக்கள் தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம் என்கின்றனர்! தூங்குவது மரணத்திற்கு ஒப்பானது. மனிதா தூங்காதே! விழி! எழு! உழை! ஓயாது உழைப்பாயாக! இலட்சியத்தை அடையும் வரை உழை! நமது இலட்சியம் சாகாமலிருப்பது!

உயிர் உடலில் வந்து சேர்வதே பிறப்பு! பிறந்து வாழும் மனிதனின் உடலில் உயிர் நிலை பெற செய்வதே ஞானம்! மரணம் ஏற்படாமல் அதாவது உடலைவிட்டு உயிர் பிரியாமல் எப்போதும் இந்த உடலிலேயே இந்த உயிரை நிரந்தரமாக தங்க வைப்பதே! மரணம் இல்லாத பெருவாழ்வு! சாவாநிலை! செத்தால் தானே உயிர் மீண்டும் பிறக்கும்? சாவை தவிர்த்தால் இனி பிறப்பையும் தவிர்க்கலாமே!

சாவு ஏன் வருகிறது? அது தெரிந்தால் தடுக்கலாமே! சாவு கட்டாயமல்ல! வாழத் தெரியவில்லை - சாகிறான்! எப்படி வாழ்வது? நமது ஞானிகள், காலையில் எழுந்திருப்பது தொடங்கி இரவு தூங்கப் போவது வரை அன்றாடம் நாம் செய்ய வேண்டிய நித்திய கரும விதிகளை சொல்லி வழிகாட்டியுள்ளனர்.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்”

ஒரு மனிதனுக்கு மேன்மை தருவது நல்லொழுக்கமே! நாம் நம் உயிரை விடவும் மேலாக ஒழுக்கத்தை கருதி கடைபிடிக்க வேண்டும்! திருவள்ளுவர், கூறுவது யாதெனின், ஒருவன் உயிரை விட மேலாக ஒழுக்கத்தை கடைபிடிப்பானாகில் அந்த உயிரை - இறைவனை உணரும் அடையும் நற்பேறு பெறுவான்! எல்லாவற்றிலும் ஒழுக்கமே சிறந்தது!

இந்த ஒழுக்கம் உடல் ஒழுக்கம், உயிர் ஒழுக்கம் என இருவகைப்படும்! உடலும் உயிரும் சம்பந்தப்பட்டதல்லவா? உடலும் உயிரும் என்றைக்கும் சம்பந்தப்பட்டே இருக்க ஒழுக்கம் அவசியமாகிறது! உயிர் ஒழுக்கத்தை வள்ளல் பெருமான் ஜீவகாருண்ய ஒழுக்கம் என விரிவாக தெளிவாக உபதேசித்துள்ளார்கள்! எல்லாமே அதில் அடங்கிவிட்டது!

உடல் ஒழுக்கம் அதில் கூறப்பட்டுவிட்டது. நல் ஒழுக்கம் எது என்பதை விட, தீய ஒழுக்கம் எல்லாவற்றையும் தவிர் என்றால் சுலபமல்லவா? உடலைக் கெடுக்கும், உடலிலிருந்து உயிரை விரைந்து வெளியேற்ற துணைபுரியும் பஞ்சமா பாதகங்கள் செய்யாதே! பொய், கொலை, களவு, கள், காமம் என்ற இந்த ஐந்தும் நம் வாழ்வில் வராது கவனமாக மிக மிக கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்!

அறிவை மயக்குபவை, கெடுப்பவை, உடலை கெடுப்பவை, மனதை மயக்குபவை எதுவாயினும் தொடாதே - நெருங்காதே! மனதாலும் எண்ணாதே! இவை கொண்ட தீயவர்களோடும் சேராதே! “துஷ்டனை கண்டால் தூர விலகு!”

உணவு உடலுக்கு இன்றியமையாதது. உயிர் வாழ உணவு நீர் காற்று அவசியமல்லவா? நீரை நன்றாக காய்ச்சியே குடிக்க வேண்டும்! நாம் இருக்கும் வீட்டைச் சுற்றி அந்த பகுதிகளில் நிறைய மரங்களை நட்டு தூய்மையான காற்று கிடைக்க வழி ஏற்படுத்துங்கள். உணவு சுத்தசைவ உணவையே உட்கொள்ளவேண்டும்!

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்”

எவ்வுயிரையும் கொல்லாதவன்! எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாதிருப்பவன்! புலால் உணவு உண்ணாதவன் தான் மனிதன்! அவனை இவ்வுலக உயிர்கள் அனைத்தும் கைகூப்பித் தொழும்! எல்லா உயிரும் கும்பிட வேண்டாம் குறைசொல்லும் படி நாம்

நடக்க வேண்டாமே!

எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி ஒழுகும் உத்தம சீலரே உண்மையான நல்ல ஆன்மீகவாதி! ஆன்மநேய ஒருமைப்பாடு உடையவராவார்! உயிர் இறைவனல்லவா? எல்லா உயிரும் இறைவன் தானே! அப்படியாயின் எவ்வுயிரும் வணக்கத்திற்க்குரியது தானே! இந்த உண்மையை உணர்ந்தவனே ஞானி! சித்தன்!

ஆத்திச்சூடியில் ஔவையார் உரைத்த வாழ்க்கைநெறியை கடைபிடித்தால் நாமும் மனிதனாகலாம்!

“நெய் உருக்கி நீர் கருக்கி மோர் பெருக்கி உண்பவர் தம் பேர் உரைக்கில் போமே பிணி” என தேரையர் சித்தர் கூறுகிறார்! நெய்யை நன்றாக உருக்கியே உபயோகிக்கணும். தண்ணீரை நன்றாக கொதிக்கவைத்தே பருகணும். தயிர் சாப்பிடக்கூடாது. தயிரில் எவ்வளவு அதிகமாக வேண்டுமானாலும் தண்ணீர் சேர்த்து மோர் ஆக்கி சாப்பிட சுகம் கிடைக்கும்.

வாழ்க்கை வாழ்வதற்கே! நாம் பிறந்தது சிறப்பாக வாழவே! சாவதற்கல்ல! நல்லபடியாக வாழ்வதற்கே! நாடு போற்ற வாழ வேண்டும்! உற்றார் பெற்றார் கற்றார் நாட்டார் போற்ற வாழ வேண்டும்! அப்படிப்பட்ட வாழ்வே மரணத்தைப் போக்கும்!

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது முட்டாள்களின் வாதம்! இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே ஆன்றோர் அறிவுரை! ஆன்றோர் காட்டிய வழிதான் ஆண்டவனை காட்டும்!

பிறந்த நாம் எப்படி வாழ வேண்டும் என ஞானிகள் உபதேசித்தபடி வாழ்வை நெறிப்படுத்திக் கொண்டு, என்றும் வாழ அவர்கள் சுட்டிக் காட்டிய குருமார்க்கமாக சென்றுமெய்ப்பொருள் உணர்ந்து தவம் செய்ய வேண்டும்.

உண்டு உறங்கி வாழ்வதல்ல வாழ்வு! உண்டுவளந்தான் என்ற பெயரே மிஞ்சும்! தூக்கம் தொலைத்தால் ஆயுள் விருத்தியாகும்! ஒருவன் ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் தூங்கி பழகுவானானால் அவன் ஆயிரம் வருடம் ஜீவித்திருப்பான்! என்று வள்ளலார் உரைத்துள்ளார். நாமெல்லாம் பல மணி நேரம் தூங்குகிறோம் ஏன்?

நம் ஆகாரம் ஒழுக்கநிலை, உழைப்பு இவற்றையெல்லாம் பொறுத்து உடல் சோர்வடைகிறது. அப்போது உடல் உள் உறுப்புகளுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. தூங்கிவிடுகிறோம். தூங்கி எழுந்ததும் உற்சாகம் வந்து விடுகிறதல்லவா? கடுமையான தூக்கம் வந்தால் கண்ணை கட்டுகிறது என சொல்வோமல்லவா? ஏன்?

உயிர் கண்ணில் உள்ளதால் அது தூக்கம் என்று நிலைகொள்ள வேண்டியிருப்பதால் அந்நிலை!

தூங்கும்போது நம் உயிர் ஒடுங்கி விடுகிறது! உயிர் ஒடுங்கிவிட்டால் நாம் செயலிழந்து விடுகிறோம்!

பல மகான்கள் தங்கள் உயிரை ஆதாரத்தில் ஒடுங்கச் செய்து விடுவதால் புறச்செயல் அற்று சமாதியில் ஆழ்ந்து விடுகின்றனர்! இப்படி சமாதி கூடி அறிதுயில் கொள்வது ஒன்றும் மேலானதல்ல என வள்ளலார் கூறுகிறார்!

உயிர் அறியாது ஒடுங்குவது தூக்கம்! உயிரை அறிந்து ஆதாரத்தில் ஒடுக்குவது சமாதி! சாதாரண மக்களுக்கு தூக்கம் ஒரு வரப்பிரசாதம்! ஓய்வு கிடைக்கிறது. ஓய்வு என்றால் என்ன? சும்மா இருப்பது தானே?! சும்மா இருப்பதுதான் ஞானம்! அறியாமல் சும்மா இருந்தால் ஓய்வு! அறிந்து உணர்ந்து சும்மா இருந்தால் ஞானம் கிட்டும்! அறிந்து உணர்ந்து சும்மா இருக்க குரு வழிகாட்ட வேண்டும்!

உயிரை அறிந்து ஆதாரங்களில் ஒடுங்கிவிடாமல் உணர்வோடு சும்மா இருப்பதுவே ஞானநிலை! மோனநிலை! "சமாதி பழக்கம் பழக்கமல்ல, சகஜ பழக்கமே பழக்கம்" என வள்ளலார் கூறுகிறார். சமாதியில் மூழ்குவது பெரிதல்ல, உயிர் அனுபவம் உணர்ந்து பெற்ற பேரின்ப நிலையிலேயே சகஜமாக எப்போதும் இருப்பதுவே சிறப்பு! என்கிறார்.

சகஜ நிலையிலேயே எப்போதும் இருப்பதுவே மரணமிலா பெருவாழ்வுக்கு வழியாகும்!

இறைவன் படைத்து விட்டுவிட்டான் நம்மை இந்த உலகிலே! பிறப்பைப் பற்றி ஞானிகள் கூறுவது யாதெனில், ஒரு ஆத்மா, அது பற்பல பிறவிகளில் செய்த வினைகளின் ஒரு பகுதியை கொண்டு இறைவனால் பிறப்பிக்கச் செய்யப்படுகிறது. விதிக்கப்பட்ட அளவு வினையுடன் "பிராரத்துவம்" பிறக்கிறது. இந்த ஊரில் இன்னாருக்கு இன்னநிலையில் பிறக்க வேண்டும் என அந்த இறைவன் தான் தீர்மானிக்கிறான்! அந்தபடியே வந்து பிறக்கிறான் மனிதன்!

மனிதன் தன்னைப் பற்றி ஏதுமறியாமலே வளர்கிறான்! வாழ்கிறான்! காலம் போகிறது. காலன் வரநேரம் பார்க்கிறான். அப்போதைக்கப்போது நான் இருக்கிறேன். நான் இருக்கிறேன் என இறைவன் நம்முள் இருந்து வெளிப்பட்டு வெளிப்பட்டு தன்னை அறிய உணர மனிதனை தூண்டுகிறான்! இதுதான் இறைவனின் பேரருட் செயல்! இறைவன் இவ்வாறு தன்னை

வெளிப்படுத்தவில்லையெனில் மனிதன் ஒருபோதும் இறைவனை அறியமாட்டான்!!

பூர்வஜென்ம புண்ணியம் இருந்து, இறைவன் அருளால் இறைவனை அறிய உணர முற்படுகிறான் மனிதர்களில் சிலரே! பக்தியோகம், கர்மயோகம், இராஜயோகம் என சரியை கிரியை யோகத்தில் அலைந்து திரிந்து புண்ணியம் இருந்தால் முடிவில் சற்குருவை அடைகிறான்! ஞான சற்குருவை பெற்றவனே பாக்கியவான்! மெய்ப்பொருளை சுட்டி உணர்த்துபவரே ஞானசற்குரு! மெய்குரு!!

மெய்ப்பொருளை அறிந்தால் மட்டும் போதாது! ஞான சற்குரு மூலம் ஞான தீட்சை பெறவேண்டும்! ஞான தீட்சை பெற்றவனே ஆத்ம சாதகன்! சித்தர்களும் ஞானிகளும் உரைத்த ஞானபாதையில் நடப்பவன் அவனே!

ஞான தீட்சை மூலம் கண்மணியில் உணர்வு பெற்று உயிரை நோக்கி தவம் செய்பவன் ஞானி ஒருவரின் நேரடி கண்காணிப்பில் வந்து விடுவான்! ஞான தீட்சை கொடுத்து அந்த சீடனை ஆட்க்கொள்கிறார் ஞானி! அப்படிப்பட்டவனே “துவிஜன்” ஆகிறான்! மறுபிறப்பாளன் ஆகிறான். ஒரு தாயின் மடியில் பிறந்த மனிதன் குருவின் கருணையால் சூட்சும சரீர பிறப்பு எடுப்பதே மீண்டும் பிறக்கும் நிலை! குரு தீட்சையே மறுபிறப்பு! இப்படி பிறப்பவரே ஞானம் பெற முடியும்! பிறந்தவன் செத்து மீண்டும் பிறப்பதல்ல “துவிஜன்”. சீடன்!

“மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை” என அகஸ்திய மகரிஷி கூறுவதும் இதைத்தான்! மறுபடியும் பிறவாதவன் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என இயேசுபெருமான் கூறியதும் இதைத்தான்!

இப்படி துவிஜன் ஆனவனே ஆகாமிய கர்மம் அற்றுப் போகிறான்! ஆகாமியம் அவன் ஆசானையே சாரும்! சீடன் ஆத்ம சாதகனாகி தவம் செய்து வருங்கால் அவனை வினை எந்த விதத்திலும் பாதிக்காமல் குரு பார்த்துக் கொள்வார்!

பிராரத்துவ கர்மத்தோடு பிறந்த மனிதன் துவிஜனானால் ஆகாமிய கர்மம் பாதிக்காது அவன் ஆசான் பார்த்துக் கொள்வார்! சாதனை தொடர தொடர வினைகள் அனைத்தும் தலைக்கு வருவது தலைப்பாகையோடு போகும்படி குரு செய்வார்! மேலும் மேலும் புனிதம் பெறுவான்! துவிஜன் பூரணத்தைநோக்கி பீடுநடை பயில்வான்!

பிராரத்துவமும் ஆகாமியமும் போனால் எஞ்சியிருக்கும் சஞ் சித கர்மும் வந்து தாக்கும்! எது வந்தால் என்ன? எது போனால்

என்ன? துவிஜன் சாதனை தொடருமானால் வினைமுழுவதும் அழிந்து போகும் ஆசானின் அருளாலே!

மாதா பிதாவினால் உடலெடுத்த மனிதன் குருவால் துவிஜனாகி முடிவில் ஞானம் பெற்று இறைவனை அடைகிறான்!

ஸ்தூல உடலோடு பிறப்பவன் தன்னுள் சூட்சும சரீரம் இருப்பதை குருவால் உணர்ந்து அடைகிறான்! காரணமாயிருக்கும் கடவுளை அறிந்து உணர்ந்து மரணமிலா பெருவாழ்வு பெற்றவனாகிறான்!

இந்த ஒரு பிறப்பில் மீண்டும் பிறப்பவனே முக்தன் சித்தன் ஞானியாவான்! எத்தனையோ பிறவிக்குபின் பெற்ற இந்த அருமையான மானுட பிறப்பை உதாசீனபடுத்துபவன் இன்னும் எத்தனையோ பிறவி எடுக்க நேரிடலாம்!?

ஒருயிரிலிருந்து ஆறுயிர் வரை 84 லட்சம் யோனி வகை பிறவிகளுள் மிகவும் அருமையான, பெறுதற்கரிய மானிட பிறவியை பெற்ற நாம், மாதா பிதாவினால் சரீரம் பெற்ற நாம் , குருவை பெற வேண்டாமா? குரு மூலம் தானே வினையற்று இறைவனை அடைய வழி பிறக்கும்! இறைவன் கருணைக்கடல்! அருட்கடல்! அண்டினவர்க்கு அவனருள் நிச்சயம் கிட்டும்!

“பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு”

திருவள்ளுவர் பிறப்பை பேதைமை என்கிறார். அறியாமை என்னும்இருள்சூழ்ந்தவரே பிறக்கிறார் மீண்டும் பிறக்கிறார். பேதை பெண்போல தடுமாற்றம் கொண்டு பிறந்து துன்புறாமல் பிறப்பு நீங்க அறிவு சிறக்க வேண்டும். குருவை நாடி மெய்ப்பொருள் கற்றுணர்ந்து தவம் செய்தால் மெய்ப்பொருள் கண் சிவந்து செம்மையான கண் ஆகும். அதுவே செம்பொருள் என்றார் திருவள்ளுவர்! அதாவது செம்பொருள் கைவல்யமானவரே பிறப்பை தவிர்ப்பர்!

உயிர் தூக்கத்தில் ஒடுங்குகிறது! மரணத்தில் உடலைவிட்டு பிரிந்து விடுகிறது! மயக்கத்தில் தடுமாறுகிறது! தடுமாறாமல் ஒடுங்காமல், பிரியாமல் உயிரை அதன் தன்மையில் பெருக்கி அதாவது ஒளியான உயிரை ஊசிமுனை அளவு ஒளியான உயிரை உடல் முழுவதும் பரவும் அளவு பேரொளியாக செய்து இந்த உடலிலேயே உயிரை நிலை பெறச் செய்வதுவே ஞானம்! உயிர் தன்மையை உடல் பெற்று உடலும் ஒளிர்ந்து மிளிர்வதே ஞானம்! ஊன உடலே ஒளி உடலாக பெறுவதே ஞானம்!

“மூர்த்தி-தலம் - தீர்த்தம் முறையாக ஆடின பேர்க்கு வார்த்தை சொல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே” என தாயுமான சுவாமிகள்

கூறுகிறார்! ஒவ்வொரு மனிதனும் பக்தியோடு இருந்தால் நல்ல பண்போடு வாழ்ந்தால், நெறிபிறழாது வளர்ந்தால் நல்ல ஒரு குருவை அந்த ஆண்டவனே கொண்டு சேர்ப்பார்! நன்றாக கவனியுங்கள், நீங்கள் சிறந்த பக்திமானாக விளங்கினால் இறைவன் அருளால் உங்களுக்கு கிடைப்பது நல்ல ஒரு குருவே!

குரு மூலமாக தவம் செய்து தான் ஞானம் பெறவேண்டும்! இதுவரை வாழ்ந்த மகான்களின் வரலாறை படித்துப்பாருங்கள், கஷ்டப்படாமல் துன்பப்படாமல் கடுமையான தவம் மேற்கொள்ளாமல் யாராவது ஞானம் பெற்றார்களா? வேலை செய்யாமல் கூலி கிடைக்குமா? ஞான சற்குருவை நாடி மெய்ப்பொருள் அறிந்து உணர்ந்து சதா காலமும் தவம் செய்தால் கிட்டும் இறையருள்!

இன்றைய உலகில் மக்களுக்கு ஆன்மீகம் என்றால் கோவிலுக்கு போவது பூஜை செய்வது பஜனை பாடுவது அபிஷேகம் செய்வது தீர்த்தயாத்திரை போவது அன்னதானம் செய்வது யாகம் செய்வது பிராணாயாமம் செய்வது தியானம் செய்வது என ஏதாவது ஒன்றைத் தான் கருதுகிறார்கள்! இவையனைத்தும் ஞானம் பெற உதவும் படிக்கட்டுகளே! இவையனைத்தும் பக்தி கர்மம் யோகத்தில் அடக்கம்!

ஞானம் என்றால் தன்னை அறிவது! நான் யார்? என உணர்வது! ஞானம் பெற இறையருள் பெற பக்தி தான் அஸ்திவாரம்! பக்தியில் லாமல் ஞானமில்லை! சிலர் வறட்டு வேதாந்தம் பேசுவர், விதண்டா வாதம் செய்வர், வித்யாகர்மம் மிக்கவர்களாயிருப்பர். இவர்களுக்கு ஞானம் கிலோ என்ன விலை? என்ற கணக்குதான்? பணிந்தவர்க்கே பரமனருள் கிட்டும்! அன்பும் பணிவுமே ஞானத்தை தரும்!

இன்றைய உலகில் குரு என சொல்லிக் கொண்டு பெரிய ஆசிரமங்களை உருவாக்குவதிலேயே முழுகவனம் செலுத்தி, பல்லாயிரம் மக்களை கவர்ச்சியான செயல்பாடுகளால் கவர்ந்து யோகாசனமும் பிராணாயாமமுமே சொல்லிக் கொடுத்து முடித்து விடுகிறார்கள்! இப்படிப்பட்ட குருமார்கள் வாழ்க்கை முடிந்து போகிறதை நாம் கண்கூடாக காண்கிறோம்! இன்னும் பலர் கடவுளை பற்றியே பேசாதவர்கள்! ஞானம் என்ற வார்த்தை கூட அறியாதவர்கள்! பலர் சிறு தெய்வ வழிபாடு செய்து அருள்வாக்கு கூறும் ஆசாமிகள்! இதற்குத்தான் கூட்டம். இன்றைய இத்தகைய குருமார்கள் பள்ளிக்கூடம் கோயில் ஆஸ்பத்திரி கட்டி நல்ல வருமானத்திற்கு வழிதேடி தங்களை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள்!

இப்படிப்பட்ட குருமார்களிடம் சென்று ஏமாந்து போகாதீர்கள்.

எல்லோரையும் பாருங்கள். கடவுளை அடைய ஞானம் பெற யார் வழிகாட்டுகிறார் என அறியுங்கள். எல்லா மத நூல்களையும் படியுங்கள். எல்லா மகான்கள் வரலாறையும் பாருங்கள். உண்மையை உணருங்கள்.

எல்லா மதமும் இறைவனைப் பற்றித் தானே கூறுகிறது?! எல்லா மதமும் அந்த ஏக இறைவனை அடைய அன்பைத்தானே, ஆன்மநேய ஒருமைப்பாட்டைத் தானே போதிக்கின்றது!? இறைவனை அடைய நமக்கு தேவை நல்லொழுக்கம், நற்பண்பு, எல்லா உயிர்களிடத்தும் அன்பு, பணிவு, நல்ல ஒரு குரு, மகான்களோடு சத்சங்கம் இவைகள் தான்!

ஜாதி மதம் இனம் மொழி தேவையில்லை. உலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் எல்லாம் வல்ல அந்த பரமாத்மாவின் பிள்ளைகள்! ஜீவாத்மாக்கள்! அவ்வளவே! நம் அனைவரிடத்திலும் ஒரே மாதிரி விளங்கும் கண்மணியில் ஊசிமுனை அளவு ஒளியாகவே அந்த ஏக இறைவன் உள்ளான்! இதை மட்டும் நம் மனதில் கொண்டால் போதும்!

“யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”

இந்த உலகமே மனித குலத்துக்கு சொந்தம். நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே! நாம் அனைவரும் ஜீவாத்மாக்களே! எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையும் இறைவனே! உலகுக்கு இறைவன் ஒருவரே! இதுவே சத்தியம்! யாராலும் மறுக்கமுடியாத உண்மை!

இதை அறியாதவன் குழந்தை! இதை புரிந்து கொள்ளாதவன் அறிவில்லாதவன்! இதை ஒப்புக் கொள்ளாதவன் முட்டாள்! இதை ஏற்றுக் கொள்ளாதவன் மனிதனேயல்ல!

ஒவ்வொருவருக்கும் வரக்கூடிய நல்லதுக்கும் கெட்டதுக்கும் அவரவரே தான் பொறுப்பு! வேறு யாரும் கிடையாது!

“தீதும் நன்றும் பிறர்தர வாரா”

அவரவர் செய்த செயல்களே புண்ணியம் என்றும் பாவம் என்றும் இருவினைகளாகி அதற்குரிய பலன்களை அவரவரே அனுபவிக்க செய்கிறது! இதுவே இறைநியதி!

“பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்”

நாம் பிறர்க்கு செய்யும் நல்லதோ கெட்டதோ இனி ஒருநாள்

நமக்கு வந்தே தீரும்!

"வினை விதைத்தவன் வினையறுப்பான்"

சுவற்றில் எறிந்த பந்து அதோபோல் திரும்பி வந்தே தீரும்!

எத்தனையோ பிறவிகளாக நாம் செய்த நல்வினை தீவினைகள் இப்படி மூட்டை மூட்டையாக இருக்கின்றது!! ஆனால் இறைவன் நம்மீது இரக்கம் கொண்டு, கருணை கொண்டு அவ்வளவு வினைகளையும் நம்மிடம் தராமல் நல்வினை தீவினை இரண்டிலும் கொஞ்சமாக எடுத்து நம் உயிரோடு இணைத்து பிராரத்துவ கர்மத்துடன் விதிக்கப்பட்ட கர்மத்துடன் நம்மை மனிதனாக இப்பூவுலகில் பிறப்பிக்கச் செய்துள்ளார்! பிறப்பின் இரகசியம் இது!

"பற்றித் தொடரும் இரு வினையன்றி வேறொன்றில்லை பராபரமே"

என்று தானே சித்தர் பெருமகனார் கூறியுள்ளார்! இதுதானே உண்மை!

நாம் பிறக்கும்போது நம் உயிரோடு இறைவன் சேர்த்து அனுப்பியது பிராரத்துவம்!

பிராரத்துவ வினைகளோடு பிறந்த மனிதன் புரியும் கர்மங்கள் ஆகாமியம் எனப்படும். பிராரத்துவம் - விதி - ஆகாமியத்தோடு சேர்ந்து வினை கூடவோ குறையவோ, அதாவது புண்ணியம் நிறைய செய்து நல்வினை கூடலாம், அல்லது பாவம் நிறைய செய்து தீவினை கூடலாம். இப்படி ஏதாவது செய்து எதையாவது பெற்று அந்த வினைகளோடு மரிக்கிறான்! ஒவ்வொரு மனிதனும் செத்து உடன் கொண்டு போவது அவனவன் செய்த வினை பயன்கள் மட்டுமே!

ஆக, பிறக்கும்போது உயிரோடு வரும் வினை!, வாழ்ந்து இறக்கும்போது அந்த உயிரோடு போய் விடுகிறது!! பிறக்கும்போது வந்ததைவிட கூடவோ குறையவோ செய்யலாம்!

இந்த இடம்தான் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது! விதியோடு இறையருளால் பிறந்த மனிதன், எதையெதையோ செய்து எஞ்சிய வினையோடு சாகாமல்?! எதையெதையோ செய்யாமல், விதியிலிருந்து வினையிலிருந்து தப்பித்த ஞானிகள் உபதேசப்படி நம் வாழ்க்கையை செம்மைப்படுத்திக் கொண்டால்!! வினைகளை அழித்துவிட்டால்!! சாகாமல் இருக்கலாமல்லவா?! வினையிருந்தால் தானே சாவு! வினையிருந்தால் தானே மீண்டும் பிறப்பு ஏற்படும்?!

வினைகளை இல்லாமல் செய்து விட்டால்?! பிறந்த நமக்கு முதலில் இறப்பு கிடையாது? இறப்பு இல்லையெனில் ஏது பிறப்பு?!

இதுவே நல்வழி! சிறந்த வழி! ஒப்பற்ற வழி! புத்திசாலித்தனமான வழி! உலக ஞானிகள் அனைவரும் கூறியருளிய வழி! ஞானவழி! விழி வழி! விழி! விழி! என விழிக்கும் வழி!

மெய்ப்பொருளான கண்மணியினுள் ஊசிமுனையளவு ஒளியாக இறைவன் இருப்பதை குருமூலம் அறிந்து உணர்ந்து, அந்த இறைவனை நம் உயிரை அடைய தவம் செய்ய வேண்டும்! நம் உயிரான கடவுளை அடைய நாம் செய்த வினைகளே விதியாகி உயிர் ஒளியை மறைத்துக் கொண்டிருக்கிறது! ஞான சற்குருவால் உபதேசம் தீட்சை பெற்று தவம் தொடர்ந்து செய்து வந்தால், நமது உயிர் ஒளியை மறைத்துக் கொண்டிருக்கும். வினைகளை - ஜவ்வை - திரைகளை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றிவிடலாம்!! முடியும்! எல்லோராலும் முடியும்! இதற்காக தனியாக பிறவி ஒன்றும் எடுக்க வேண்டியதில்லை!

“முயற்சிஉடையார் இகழ்ச்சியடையார்”

உங்களுக்கு ஞானம் அருள, வினைநீக்க வள்ளல் பெருமான் உதவ காத்திருக்கிறார்!!

“வம்மின் உலகியலீர் மரணமிலா பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்” என திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் கூவி உலகரை அழைக்கிறார்! வாருங்கள் தங்க ஜோதி ஞான சபைக்கு! கன்னியாகுமரிக்கு!

“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்”

மனந்தளராமல் இடைவிடாது முயற்சி செய்கிறவர்கள் ஊழ்வினைகளையும் வென்றுவிட முடியும் என திருவள்ளுவர் தெளிவாக கூறுகிறார்! சதா சர்வகாலமும் தவம் செய்வோமானால் கண்மணி ஒளியில் கருத்தை வைத்து உணர்ந்து நெகிழ்ந்து சும்மா இருந்தோமானால் வந்தவினையும் வருகின்ற வல்வினையும் சுட்டு எரிக்கப்பட்டு அழிந்து போகும்! வினையற்றால் சாகாநிலை!

“தவம் செய்வார்க்கு அவம் ஒருநாளுமில்லை!”

# ரு. ùUnlùTôÚs

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

அறிவு உடையவர்கள் எந்த பொருள் ஆனாலும் சரி எந்த தன்மையில் இருந்தாலும் சரி அதன்மூலம் மெய்ப்பொருள் விளக்கம் காண்பர்! எல்லாவற்றையும் மெய்ப்பொருளாகவே காண்பர்! மெய் என்றால் உடல், இன்னொரு பொருள் உண்மை. உடலிலே உள்ள உண்மைபொருள் சத்தியப் பொருள் அழியாத பொருள் நம் உயிர்! அது எல்லாம் வல்ல பேரொளியான பரமாத்மாவின் ஒரு சிறுதுளி ஒளி! ஜீவாத்மா என்பர்! அது துலங்கும் இடம் நம் உடலில் கண்! மெய் துலங்கும் பொருளாக விளங்குவது கண்! அதனால் தான் ஞானிகள் கண்ணை “மெய்ப்பொருள்” என்றனர். எங்கும் நிறைந்த பரம்பொருள் நமது உடலில் கண்ணில்! மெய்ப்பொருளில்!!

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

உலகிலுள்ளவர்கள் எல்லோரும் சொல்லும் விஷயங்கள் பலவாயினும் அவற்றின் அடிப்படை, ஆரம்பம் இறைவனைப் பற்றியதேயாகும்! அறிவுப் பூர்வமாக சிந்தித்துப் பார்த்தால் தான் எல்லோரும் சொல்வது “மெய்ப்பொருள்” பற்றித்தான் எனப்புரியும்! யார் சொன்ன சொல்லாயினும் அதை பிரித்து பார்த்து ஏன் எதற்கு என சிந்தித்தால் உண்மை - உன்மெய் - மெய்ப்பொருள் தான் எல்லாமே எனப் புரியும்! விளங்கும்! எப்பொருளும் மெய்ப்பொருள் தான் எனப் புரிய வேண்டுமானால் நாம் மெய்ப்பொருளை பற்றித்தான் ஆகவேண்டும்! அது ஞான சற்குரு பற்ற வைத்தால்தான் நடக்கும்! தீ பற்ற வேண்டுமல்லவா? குருவை பணிந்தால் குரு பற்ற வைப்பார்! நீங்கள் சிக்கெனப் பற்றிக் கொள்ளுங்கள். மெய்ப்பொருள் ஒளி உங்களுக்கு கைவல்யப்படும்!

“மெய்ப்பொருள் இன்னதென்று குருவே சொல்வார்” என சித்தர் பெருமகனார் கூறுவார். திருவருட் பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் அடியேனை குருவாக்கி கன்னியாகுமரி தங்கஜோதி ஞானசபையில் வைத்து, இந்த ஞான உபதேசங்களை உலகருக்கு உரைத்திடவும், நூல்களாக எழுதி வெளியிட்டு உலகர் உணர்ந்திடவும், ஞான தீட்சை கொடுத்து உலகர் ஞானம் பெறவும்,

அடியேனை கருவியாக்கி வைத்துள்ளார்கள். அடியேன் எழுதி வெளிவரும் 24-வது நூல் இது! “சாகாக்கல்வி”. கற்பிக்கிறேன்! கற்றுக் கொள்ளுங்கள்! கண்ணின் மணியான கருணைக்கடல் கடவுள் கைவிடமாட்டார். அவன் திருவடியை பற்றினால், நம்மை கைதூக்கி மேலேற்றி மரணமிலா பெருவாழ்வு நல்குவார்!

“அங்கமதில் முதன்முதலாய் தோன்றிய தலம் எது? ஆறைந்து இதழிரண்டு முளைத்ததெங்கே? அல்லல்படும் ஐம்பூத ஒடுக்கம் எங்கே? சொல்லவல்லார் உண்டானல் நாளும் குரு என பணிந்து வணங்கலாமே”.

ஒரு தாயின் கருவில் குழந்தை உருவாகும்போது, சுக்கில சுரோணித சம்பந்தத்தால் உருவாகும் முதல் உறுப்பு “கண்”! கண் ஒளி தான் பிண்ட உற்பத்திக்கு காரணமாகிறது!

ஆறுமுகம் கொண்ட ஆறுமுகனாகவும் ஆறுபட்டை கொண்ட ஒளிக்காட்சியாக தோன்றுவது, ஐந்து கரங்கொண்ட விநாயகனாகவும் கணங்களின் பதியான கணபதி ஓங்காரமாகவும், இரண்டு இதழ்கள். மலரின் இதழ்கள் போன்று மென்மையான இரு கண்மணிகளாக அதில் ஜோதியாக முளைத்து துலங்குவதாகும்!

ஐம்பூதங்களும் கண்ணில் உள்ளது. கண்ணில் உள்ள சதை மண் அம்சம்! கண்ணில் நீர் இருக்கிறதல்லவா? நீர் அம்சமாயிற்று! கண்ணீர் சில சமயம் சூடாக இருப்பதை நாம் அறியலாம். அப்படியானால் தீ இருக்கிறது என்று தானே பொருள்! அக்னி அம்சமுமாயிற்று! தீ இருக்கிறது என்றால் நிச்சயம் காற்று இருந்தாகவேண்டுமே!? நாலாவது பூதம் வாயுவுமாயிற்று! அடுத்து ஆகாயம்? இதுதான் இரகசியம்! சூட்சுமம்! நமது கண்ணின் அமைப்பை பாருங்கள்.

வெள்ளைவிழி அதற்கு நடுவே கருவிழி அதற்கும் மத்தியில் கண்மணி - கிருஷ்ணமணி என்பர், பாப்பா என்பர். கண்மணி, கருவிழியின் மத்தியில், கருவிழியின் உள், கருவிழியை தொடாமல் அந்தரத்தில் இருக்கிறது!! அங்கே இருக்குது வான்வெளி வெட்டவெளி அதுவே ஆகாயம்! இப்படி ஐம்பூதங்களும் ஒரே இடத்தில் இருப்பது கண்ணில் மட்டுமே! ஐம்பூத ஒடுக்கம் கண்ணிலே!

எல்லாவற்றையும் இரகசியம் ஏதுமின்றி எந்த மறைப்புமின்றி சொல்லிவிட்டேன்! எங்குரு அருளாலே! அடியேனை குரு என ஏற்றுக் கொள்ளலாமா? இன்னும் சொல்கிறேன்.

கண்மணி அந்தரத்தில் இருக்கிறது எனச் சொன்னேன் அல்லவா? எந்த ஒரு பொருளாவது அந்தரத்தில் நிற்குமா? நிற்கும்! நாம் இருக்கும் பூமி அந்தரத்தில் தானே இருக்கிறது?! பூமி எப்படி அந்தரத்தில் ஆகாயத்தில் இருக்கிறதோ அதுபோல் தான் கண்மணியும் இருக்கிறது!? “அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்” என ஞானியர் கூற்று! அண்டத்தில் எவ்வாறோ? அவ்வாறே பிண்டத்திலும்! இதுவே உண்மை!

பூமி உருண்டையாக, கோளமாக பந்துபோல இருக்கிறது! அது தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது! உருண்டையான பூமி ஆகாயத்தில் சுற்றுகிறது? முடியுமா? சுற்றுகிறதே!? இப்படி இருக்க வேண்டுமானால் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? என்ன அது? பூமி சுழல என்ன காரணம்? பூமியின் உள்ளே, மத்தியில் கனன்று கொண்டிருக்கும் நெருப்பு குழம்பே, அதன் வேகமே, சக்தியே பூமியை சுழல வைக்கின்றது!! அந்த நெருப்பு குழம்பு தான் எரிமலையில் வெளிப்படுகிறது! ஆக உள்ளிருக்கும் நெருப்புதான் சுழல்வதற்கும் காரணம்! புவியீர்ப்பு விசைக்கும் காரணம்! கண்மணியிலும் மத்தியில் ஊசிமுனை துவாரத்தின் உள் ஊசிமுனை அளவு நெருப்பு இருப்பதால் தான் கண்மணியும் சுழல்கிறது ஆகாயத்தில் நிற்கிறது! இதன்மூலமும் கண்ணில் மணியில் நெருப்பு உள்ளது என நிரூபணமாகிறது!

பட்டினத்தார் கூறுகிறார், “அண்டம் போல் அழகியதாம் கண் மூன்றுடையதாம் ஒற்றி கடலருகே நிற்கும் கரும்பு” என்று. நமது கண்மணி நாமிருக்கும் பூமியைப் போல அழகாகத்தானே உள்ளது! கண் மூன்றுடையதாம், வெள்ளைவிழி கருவிழி கண்மணி என புறத்தே மூன்று நிலைகளாக உள்ளது. வலது கண் இடதுகண் இரண்டும் உள்ளே கூடும் நெற்றிக்கண் என கண் மூன்று உள்ளது. பட்டினத்தார், திருவொற்றியூர் கடற்கரையிலே நிற்குமாம் கரும்பு என்கிறார். நேரடியாக பொருள் காணமுடியாது! இதுதான் பரிபாஷை! கடற்கரையிலே கரும்பு விளையாதே! கடல்போல நீர் பெருகும் கண்களிலே ஒற்றியிருக்கும் கண்மணி ஒளி என்பதே! கரும் - பு! அதாவது கருப்பு பூ! அது நம் கண் மலரை குறிப்பதாகும்!

உலகத்தில் எங்காவது கருப்பு பூ உண்டா? கண்மலர் என கண்ணை சொல்வோமல்லவா? பட்டினத்தார் கூறியது கண்மணியே! கருப்பு பூ என்றும் அது இந்த பூமியை போல அழகானது என்றும் அது மூன்று கண் என்றும் நம்மை சிந்திக்க வைத்திருக்கிறார்.

இப்படியே எல்லா சித்தர்களும் ஞானிகளும் பரிபாஷையாக சூட்சுமமாக இறைவன் ஒளியாக துலங்கும் கண்மணியை, மெய்ப்பொருளை பலப்பல விதமாக கூறியருளியிருக்கிறார்கள்!

புருவ மத்தியில் தியானம் செய் என எல்லோரும் கூறுவர். புருவமத்தி எது என தெரிய வேண்டாமா? சாதாரணமாக யாரிடம் கேட்டாலும் புருவமத்தி நாம் நெற்றியில் பொட்டு வைக்கும் இடத்தையே காட்டுவர்! அதாவது இரு புருவங்களுக்கிடையே தான் காட்டுவர். ஞானிகள் இரு புருவ மத்தி எனக் கூறவில்லையே! புருவமத்தி என்று ஒருமையில் தானே கூறினர். ஒரு புருவம் அதன் மத்தி ஒன்றுமில்லை, அதன் கீழேயிருப்பது கண். இப்படி சிந்திக்க வேண்டும், யூகிக்க வேண்டும். புருவமத்தி என்று சொன்னார்களே அதன் கீழ் உள்ள கண்ணைப் பற்றித்தான் சொல்லியிருப்பர். அதன் விளக்கம் இதுவாகத்தான் உள்ளது என சிந்தித்து அறியவேண்டும். கண்ணின் தன்மையை அறியவேண்டும்.

புருவமத்தி என்றால் கண்தான் என மற்றொரு சித்தர் உண்மையை போட்டு உடைக்கிறார். ஒரு சித்தர் போட்ட பூட்டை இன்னொரு சித்தர் திறந்துவைக்கிறார்! இப்படியேதான் எல்லா சித்தர்களும் ஞானிகளும் மெய்ப்பொருளை பரிபாஷையாக சூட்சுமமாக பலப்பலவிதமாக கூறி அருளியிருக்கிறார்கள்!

“புருவமத்தி ஏதென்றக்கால் பரப்பிரம்மமானதோர் அண்ட உச்சி”. எவ்வளவு சிறந்த சூட்சுமமான - பரிபாஷை - சங்கேத வார்த்தை! படிக்கப் படிக்க பேரானந்தம்! புருவமத்தி பரப்பிரம்மான அண்ட உச்சி! அண்டம் போல் அழகான, பூமிபோல அழகான கண்மணி, உச்சி என்றால் கண்மணி மத்தியாகும்! அது பரப்பிரம்மமானது. அதாவது ஒளியானது புருவமத்தி கண்மணி மத்தியிலுள்ள ஒளி! இப்படியேதான் எப்பொருளும் மெய்ப்பொருளே!

வள்ளல் பெருமான் புருவம் கண் என்று தெளிவாக கூறி விட்டார். “கையற விலாத நடுக்கண் புருவபூட்டு கண்டுகளி கொண்டு திறந்து உண்டு நடு நாட்டு” என வெட்ட ளிச்சமாக்கி விட்டார்!

“நடுக்கண் தான் புருவபூட்டு” இதற்கு விளக்கமும் வேண்டுமோ?!

“பூட்டை திறப்பது கையாலே மனப்பூட்டை திறப்பது மெய்யாலே” என்றொரு சித்தர் பாடுவார். நடுக்கண் புருவபூட்டை திறக்க வேண்டும்! எப்படி? கையாலே இங்கே கை என்பதும் நமது கண்களே! கண்கள் தான் நமக்கு கை! கண்கள்தான் இறைவனின் திருவடி-கால்கள்! இந்த சித்தர் கண்ணாலே பூட்டை திறக்க கூறியுள்ளார். அங்கே மனமாகிய பூட்டும் உள்ளதாம் அதை மெய்யாலே திறக்கணுமாம்! இங்கே இன்னொரு இரகசியமும் வெளிப்பட்டது. மனம் இருப்பதும் கண்தான்! அதை மெய் கொண்டு

திறக்கணுமாம்! மெய் எது உண்மை. சத்தியம் அழியாதது. ஒளி ஒன்றுதானே! அதாவது கண்மணியில் உள்ள மனதை அகற்ற கண்மணியின் உள் உள்ள ஒளியை பிடி! ஒளியை வைத்து மனதை திற! கண்மணி வாசலை திறந்துவிடலாம் என்பதே ஞான இரகசியம்!

"வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்கும் எட்டாத புஷ்பம் இறையாத தீர்த்தம் இனி முடிந்து கட்டாத லிங்கம் கருத்தினுள்ளே முட்டாத பூசையன்றோ என் குருநாதன் மொழிந்ததுவே" இதையெல்லாம் என் குருநாதன் எனக்கு உபதேசித்து மெய்ப்பொருள் உணர்த்தி அருளினார் என்றார் சித்தர் பெருமகனார்! அனைத்தும் பரிபாஷை! சூட்சுமமாக சொல்லப்பட்டது! அனைத்துமே ஒரே பொருள்தான்! மெய்ப்பொருள்தான்!

வெட்டாத சக்கரம் - சக்கரம்போல் உருண்டையாக வட்டமாக இருப்பது நம் கண்மணி! சக்கரம் உருள்வது போல் கண்மணி சுழன்று கொண்டிருக்கிறது! கண்மணியாகிய சக்கரம் வெட்டி உருவாக்கப்பட்டதல்ல! வெட்டி ஒட்டாமல் முழுதாக இறைவனால் உருவாக்கப்பட்ட சக்கரமே கண்மணி! அதனால்தான் கண்மணியை வெட்டாத சக்கரம் என்றனர்!

பேசாத மந்திரம் - மந்திரம் எனப்படுவது இறைவனை மனதில் திறமாக நினைந்து இருத்தச் சொல்லப்படும் வார்த்தை! இது எண்ணிலடங்கா அளவில் உள்ளது! மாமறை நூல் ஏற்றிக்கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய் என வள்ளல் பெருமான் கூறுகிறார்! பாழிலே ஜெபித்துவிட்ட மந்திரங்கள் பலகோடி என சிவவாக்கியர் கூறுகிறார்! அப்படியானால், ஜபிக்க வேண்டாம் வார்த்தைகளை! மந்திரம் என்றால் மனதை திறமாக - திடமாக வைத்து விடுவது! - மனம் திடமான இருக்கும் இடம்! அந்த இடத்திலேயே இருத்திவிடுவது! அது கண்மணியான இடமே! கண்மணியின் ஊசிமுனை வாசலில் உள்ள மெல்லிய ஜவ்வே - திரையே நம் மும்மலத்திரை! அதிலிருந்து வெளிப்படுவதே மனம்! கண்மணி முன்னர் சூட்சுமமாக இருப்பதே மனம்! கண்மணியிலுள்ள மனதை அதிலேயே திறமாக வைப்பதால் "மந்திரம்" எனப்படுகிறது கண்மணி! கண் பேசாது அல்லவா அதனால் தான் கண்மணியே பேசாத மந்திரம்!

வேறொருவர்க்கும் எட்டாத புஷ்பம் - புஷ்பம் என்றால் மலர் - பூ. கண்மலர் என்று நாம் கூறுவோமல்லவா? இந்த புஷ்பத்தை வேறு யாராவது எட்ட முடியுமா? அவரவர் கண் - மெய்ப்பொருள்

அவரவர்க்கே எட்டும் இடத்தில் உள்ளது! எட்டாக உள்ள புஷ்பம் வேறொருவர்க்கும் எட்டாத புஷ்பம் நம் கண்மணியே!

இறையாத தீர்த்தம் - கண்களில் நீர் உள்ளதல்லவா? எவ்வளவு நீர் இருக்கிறது என யாராவது சொல்ல முடியுமா? இறைக்க இறைக்க வந்து கொண்டே இருக்கும், ஊறிக்கொண்டேயிருக்கும் ஊற்றுக்கேணி போன்றதே நம் கண்களும்! நாம் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து தவம் செய்யச் செய்ய கண்களில் நீர் அருவி என கொட்டும்! நாம் அந்த மெய்ப்பொருளில் கண்ணில் தவம் செய்யாமல் - இறைக்காமல் - நீரை - தீர்த்தத்தை வைத்துள்ளோம். தவம் செய்தாலே கண்ணீர் பெருகினாலே அது தீர்த்தம்! இறைக்கப்படாமல் தீர்த்தம் உள்ளது கண்களிலே! கண்நீரே இறையாத தீர்த்தம்! இந்த தீர்த்தத்திலே குளிக்க வேண்டும். அதுவே உண்மையான கங்காஸ்நானம்! இந்த கண்ணாகிய தீர்த்த குண்டத்திலே மூழ்கி எழுபவனே ஞானம் பெறுவான்!

இனி முடிந்து கட்டாத லிங்கம் - நாம் எல்லா கோவில்களிலும் பார்ப்பது கட்டிவைக்கப்பட்ட லிங்கம்! உருவாக்கப்பட்ட விக்கிரகம்! சிவலிங்கரூபம்! ஆனால், நம் கண்ணோ சிற்பிகளால் உருவாக்கப்படாத லிங்கம்! சிவலிங்கம். மேல்பகுதி லிங்கம் - உருண்ட நீண்ட பகுதி. மத்தியில் ஆவுடை, வட்டமாக நீர் வடிய பகுதி கொண்டு விளங்குவது. அதன் கீழ்பகுதி இவைகளை தாங்கிய பீடமென வட்டபகுதி. அதாவது 3 நிலைகொண்டது சிவலிங்க சொரூபம்! அது எப்படி கண் ஆகும்! மேல் மாடியிலிருந்து கீழே உள்ள சிவலிங்கத்தை நாம் பார்த்தால் எப்படித் தெரியும்? சிவலிங்கத்தின் உயரம் தெரியாதல்லவா? லிங்கத்தின் மேல் வட்டம் சின்னவட்டம் அடுத்து ஆவுடைவட்டம் அடுத்து கீழே பீடவட்டம். மொத்தத்தில் 3 வட்டம். மேலிருந்து சிவலிங்கத்தை பார்த்தால் தெரிவது 3 வட்டமே அது கண்ணை ஒத்திருக்கும்! கோவிலில் உள்ளது கட்டப்பட்ட உருவாக்கப்பட்ட சிவலிங்கம். நம் கண் அதுபோல் மூன்றுவட்டமாக உள்ளதும், சிவமாகிய ஒளி, நம் சீவஒளி உள்ளதுமான, இறைவனால் அருளப்பட்ட இனி முடிந்து கட்டாத லிங்கம் ஆகும்!

கருத்தினுள்ளே முட்டாத பூசையன்றோ இந்த உலகத்தில் நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும், இறைவனை குறித்து நாம் செய்கின்ற பூசையனைத்தும் முதலில் நம் கருத்தில் இருத்தி, இன்னின்ன விதமாக செய்ய வேண்டும் என்று தீர்மானித்து அதன் பின்னரே செய்வோம் செய்ய முடியும்! முதலில் கருத்திலே வாங்கி பின் செயல்படுவோம்! இது சகலத்துக்கும் பொருந்தும்! ஜபம், ஹோமம், பிராணாயாமம், வாசியோகம் பூஜை, அர்ச்சனை, அபிஷேகம் இன்னும் எல்லாமே கருத்திலே தீர்மானித்து பட்டியலிட்டு

செயல்படுவோம்! ஆனால் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து செய்யும் தவம் கருத்துக்கு போகாமல் மனதுக்கு போகாமல் மனதை நிறுத்தி வைத்து செய்வதாகும்!? ஞான தவம் - திருவடிதீட்சை மெய்ப்பொருளில் பெற்று செய்யும் தவம் கருத்தினுள்ளே முட்டாத பூசையாகும்! நம் கண்மணியை - அதில் தீட்சையின் மூலம் ஏற்படும் உணர்வை மட்டும் பிடித்தநிலையில் சும்மா இருப்பதே மேலான ஞானநிலை! இதுவே மோனநிலை! இதை உரைப்பவர் தான் மெய்குரு! மெய்ப்பொருளை காட்டும் குரு! உண்மை குரு! ஞான சற்குரு!

வள்ளல் பெருமான் கண்ணே கண்மணியே என்று மெய்ப்பொருளை பல்லாயிரம் தடவை திருஅருட்பாவில் சுட்டிக்காட்டி நாமும் மரணமிலா பெருவாழ்வு பெற வழிகாட்டியுள்ளார்.

“தகுந்த ஆச்சாரியன் மூலம் உங்கள் நடுக்கண்ணை திறக்கப் பெற்றுக்கொள்வது நலம்”!

என வள்ளல் இராமலிங்கர் உரைத்துள்ளார்! நடுக்கண் - கண்மணியை திறக்கப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார்?! அப்படியானால் நடுக்கண் மூடப்பட்டுள்ளது என்று தானே பொருள்! யார் மூடியது? எதற்காக மூடியது? எதனால் மூடியது என அறிய வேண்டாமா மனிதா?

கண்மணியின் மத்தியில் ஊசிமுனையளவு சிறிய துவாரம் உள்ளது!? அந்த ஓட்டை தான் மெல்லிய ஜவ்வால் மூடப்பட்டுள்ளது! உள்ளே, ஊசிமுனை துவாரத்தின் உள்ளே ஊசிமுனையளவு ஒளி நம் ஆத்மஜோதி துலங்குகிறது! ஓட்டையை மறைத்துக் கொண்டிருக்கும் மெல்லிய ஜவ்வே, நமது மும்மலங்கள்! வள்ளல்பெருமான் இதைத்தான் திரைகள் என்கிறார்! இதையெல்லாம் சூட்சுமமாக சிருஷ்டித்தவன் எல்லாம் வல்ல இறைவன்! இதனை கண்டு உணர்ந்து உய்தனர் ஞானிகள்!

திரைகளாகிய - ஜவ்வே நாம் நீக்க வேண்டிய பொருள்! திரை நீங்கினாலே, மெய்ப்பொருளின் திரை நீங்கினாலே நம் ஆத்மஜோதியை நாம் காணமுடியும்?! இதுவே, நாம் அடைய வேண்டிய மாபெரும் பேரின்ப பெருநிலையாகும்! மனிதனாக பிறந்த நாம் பெறவேண்டிய அதி உன்னத நிலை இதுவே!

நம்மை நாம் காண உணர மெய்ப்பொருள் அறிந்து உணர்ந்து தவம் செய்ய வேண்டும்! ஞான சற்குருவை பணிந்து தீட்சை பெற்று தவம் செய்து பெறவேண்டும்.

நமது மூதாதையர்கள் நாமெல்லாம் ஞானம் பெற வேண்டி

வாழ்க்கையின் எல்லாநிலையிலும் காணுகின்ற பொருட்களிலும் ஞானம் விளங்கும்படி எல்லாவற்றையும் அமைத்து வைத்தனர். பல ஊர் பெயர்கள் மெய்ப்பொருள் விளக்கம். திருக்கண்ணபுரம், எண்கண், எட்டுக்குடி, திருவாவடுதுறை, குறுங்குடி இப்படி ஊர் பெயர்கள். திருவாகிய இறைவன் குடியிருப்பது கண் ஆகிய இடத்தில் அது திருக்கண்ணபுரம்! எண் ஆகிய எட்டும் இரண்டும் கண் எனக் குறிக்கும் எண்கண்! எட்டுக்குடி என்பது எட்டாகிய கண்ணில் குடியிருக்கும் இறைவன்! திருவாகிய ஜோதி ஆடிக்கொண்டிருக்கும் இடம் அதுவே திருவாவடுதுறை! ஊசிமுனையளவு குறுகிய சின்ன இடத்தில் குடியிருப்பவன் இறைவன் எனவே குறுங்குடி! இப்படி ஊர் பெயரும் மெய்ப்பொருள் விளக்கமே!

தாம்பரம் - தாம் அதாவது நாம் தான்பரம் எனக் குறிக்க வந்ததே தாம்பரம்! சிதம்பரம் - சின்ன அம்பரம் சின்னகோவில் அதுதான் சிதம்பரம்.

கண்ணன் என்ற பெயர் மெய்ப்பொருளே! கண் ஆகிய அவன் - கண்ணிலே இருக்கும் ஒளியாகிய இறைவன். கண் அவன் கண்ணன் - கிருஷ்ணமணி! கண்மணி! கணபதி - கண்ணின் பதி - கணங்களின் பதி கணநாயகன்! திருக்கண்ணை மங்கை! நேத்திர தரிசனம் திருப்பதியில் கண்டவர் மோட்சம் பெறுவர்! நேத்திரம் நயனம் என்றாலும் கண். உபநயனம் ஒரு சடங்கு. பூணூல் பூட்டும் வைபவம்! துணை, இரு என்பது உப எனப்படும். நயனம் என்றால் கண். இரு கண்பற்றி அறிவதே அறிவிப்பதே உபநயன வைபவத்தின் நோக்கம்!

ஊர்ப்புறங்களில் வீட்டிலுள்ளவர்கள் பக்கத்தில் எங்காவது போய் வரவேண்டுமானால் சொல்லிக் கொண்டுபோவர்! எப்படி தெரியுமா? இரண்டு எட்டு போய் வாரேன் என்பர்!!

இரண்டும் எட்டும் இரு மெய்ப்பொருளை குறிக்கும் சங்கேத வார்த்தைகள்! இதெல்லாம் நம் அறிவுக்கு எட்டவேண்டும். புலப்படவேண்டும். எட்டை, மெய்ப்பொருளை பிடித்தால் எட்டிவிடலாம் இறைவனை பரம்பொருளை!

இறைவன் எங்கோ எட்டாத உயரத்தில் இல்லை. தூரத்தில் இல்லை. கூப்பிடுதூரத்தில் கைக்கு எட்டிய இடத்தில்தான் எட்டாக இரண்டாக மெய்ப்பொருளாக உள்ளார்!

இதுவரை இந்த உலகில் எல்லோரும் மெய்ப்பொருள் பரம்பொருள் கண்ணில் மணியில் ஒளியாக உள்ளார் என்பதை இரகசியமாகவே, மறைத்தே சொல்லி வந்துள்ளனர். திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஆசியாலும் எல்லாம் வல்ல

இறைவன் திருவருளாலும் இந்த உலகத்திலேயே அடியேன் தான் முதன்முதலாக இந்த இரகசியங்களை வெளிப்படுத்தி நூலாக வெளியிட்டுள்ளேன்!

மெய்ப்பொருளை சொல்லாத ஞானிகளே இல்லை! ஆனால் எல்லாமே மறைபொருளாக பரிபாஷையாக சூட்சுமமாக குரு மூலம் அறியக்கூடிய வகையிலேயே உள்ளது! உலகர் அனைவரும் ஞானம் பெற, மெய்ப்பொருள் அறிய உணர அடியேனை கருவியாக்கி இதோடு 24 ஞானநூற்களை எழுதவைத்து மெய்ப்பொருளை வெளிப்படுத்தியுள்ளனர்! எல்லா ஞானிகளின் அருளும் அடியேனுக்கு துணை நிற்கிறது! இயேசுபெருமானும் நபிபெருமானும் வள்ளல் பெருமானும் உபதேசித்தது ஒன்றே! நன்றே! மெய்ப்பொருளே!

கண்ணே என மணியே என நம் குழந்தையை கொஞ்சுகிறோம்! காதலன் காதலியை கண்ணே என்கிறான்! கணவன் மனைவியர் கண்ணே என்பார்கள்! பெற்றோர், பெரியோர் பாதம்தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம்!

கோவிலில் கற்பூர ஆராதனை முடிந்து தீபத்தை கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம்! கண் கண்ட தெய்வம் என பெற்றோரை முதலிலும் கண்ணில் கண்ட தெய்வத்தை குரு அருளால் பின்னரும் கண்டு உய்கிறோம்! கண் அவனே கணவன் உலகில் பெண்களுக்கு கணவனே கண் கண்ட தெய்வம்! ஜீவாத்மாவாகிய பெண்களாகிய மனிதர்களுக்கு பரமாத்மாவாகிய ஆணாகிய பரம்பொருள் நம் கண்ணில் நாம் காணும் தெய்வமாக உள்ளது! பரம்பொருள் நம் கண்ணில் மெய்ப்பொருளாக உள்ளது!

மெய்ப்பொருள் உபதேசம் தீட்சை பெற்றவரே துவிஜன்! மீண்டும் பிறந்தவன்! மெய்ப்பொருள் உணர்ந்து தவம் செய்வோரே

ஞான உபதேசம்! - திருவடி தீட்சை!
பெற யாராயினும், புலை கொலை தவிர்த்தவர்!
முதலில் வடலூர் சென்று வள்ளல் பெருமான்
ஆசிபெறுக? பின் கன்னியாகுமரி வந்து
முக்கடல் தீர்த்தமாடி வாலைத்தாய் பாதம்
பணிந்து தங்கஜோதி ஞான சபைக்கு வருக!

# ச. ùUn

மெய் என்றால் உண்மை. சத்தியம். இன்னொரு பொருள் உடல்.

“தமிழ்மொழி தெய்வீகமானது. அதிவிரைவில் சுத்த சிவானுபூதியை நல்க வல்லது” என வள்ளல் இராமலிங்கர் பகர்ந்துள்ளார்! எப்படி எனில் தமிழ் எழுத்துக்கள் உயிர் எழுத்து மெய்எழுத்து உயிர்மெய் எழுத்து என்றே உள்ளது. உயிரான இறைவன் உடலான மெய்யில் இணைந்தாலே, உயிர்மெய் கூடி எழுத்தாகி சொல்லாகி பொருளாகிறது! உயிரோடு கலந்தது தமிழ் என்பதே சரி!

மெய்யிலே உள்ள மெய் உயிரே! மெய்யாகிய உடலிலே உள்ள சத்தியம் உயிரே! மெய்யெழுத்து தனித்து இயங்காதே! உயிர் எழுத்தோடு மெய்யெழுத்தும் சேர்ந்தே இயங்கும். உடல் மட்டும் மெய்மட்டும் தனித்தியங்காது. உடலோடு உயிரும் சேர்ந்தாலே இயக்கம். எட்டும் இரண்டும் எழுத்தாகி ஓங்கார சொல்லாகி மெய்ப்பொருளாக விளங்குகிறது!

சொற்சுவை பொருட்சுவை அனைத்தும் கலந்து சுந்தரத்தமிழில் அருட்பாக்கள் எண்ணிலடங்காதவை பாடியருளிய ஞானிகள் தமிழ் மண்ணிலே ஏராளம்! ஏராளம்!

“தேவர் குறளும் திருநான் மறை முடிபும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்று உணர்”.

திருக்குறள் நான்கு வேதங்கள் தேவாரம் அகஸ்தியர் முதலான சித்தர்பாடல்கள் திருவாசகம் திருமந்திரம் இவை அனைத்தும் உரைப்பது ஒரு வாசகம்! மெய்! உண்மை! சத்தியம்! அது மெய்ப்பொருள்!

ஆக தமிழில் உள்ள எல்லா நூற்களுமே, சங்க இலக்கிய மாகட்டும், பக்தி இலக்கியமாகட்டும், இலக்கண நூலாகட்டும், காப்பியங்களாகட்டும், அருட்பாக்களாகட்டும் இவை அனைத்தும் உரைப்பது முடிவில் மெய்ப்பொருளே!

மெய்யிலே விளங்கும் பொருள் கண்மணி ஒளியே

மெய்ப்பொருள்!

"எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்". அவரவர் கையால் அளந்தால் அவரவர் உடம்பு எட்டு சாண் அளவே இருக்கும்! இதில் தலை ஒரு சாண். நம் உடம்புக்கு தலையானது - முக்கியமானது, தலையே - சிரசே! முக்கியமான - பிரதானமான இடத்தில் தானே தலைநகரத்தில் தானே தலைவர் இருப்பார். தலையில் இருப்பதால் தான் - தலைபோல் இருப்பதால் தான் தலைவர்.

நம் தலைவர் இறைவன் நம் மெய்யில் முக்கியமான, தலையில் இருக்கிறார். இறைவன் - பரம்பொருள் நம் உயிராக, பிராணனாக ஜீவனாக நம் தலையின் உள் மத்தியில் பத்திரமாக இருக்கிறார். பாத்திரமாக நம் மெய் உடல் இறைவனை - நம் உயிரை தாங்கிக் கொண்டிருக்கிறது!

உயிர் தங்கிய சற்பாத்திரம் - நம் உடலில் நேத்திரத்தில் துலங்கி நிற்கிறது! அதுவே மெய்! அதுவே மெய்ப்பொருள்!

நமது மெய்யில் எழுபத்தீராயிரம் நாடிகள் உள்ளது இது மெய்! ஞானிகள் கூற்று! அனைத்தும் தொடர்புடைய இடம் உயிர்ஸ்தானம்! மெய்ப்பொருள்! ஏழு ஆதாரம் நமது மெய்யில், அனைத்துக்கும் மூல ஆதாரமே மெய்ப்பொருள்! பஞ்சபூத கூட்டுறவால் ஆனது இப்பிரபஞ் சமே! நம் மெய்யும் பஞ்சபூத கூட்டுறவே! இதுவும் மெய்யே!

இரத்தம், எலும்பு, சதை மஜ்ஜையால் ஆன இந்த மெய், தாயின் கருவில் முதலில் தோன்றும் கண்ணால் அதன் ஒளியால் வெதுப்பி வெதுப்பி தோன்றி பிண்ட உற்பத்தி பூரணமாகிறது! மூன்று மாதத்திற்கு பின் இறையருளால் உயிர் வந்து சேரும்! உயிரும் உடலும் இணைந்து பூரணமாகி 10 மாதத்தில் 270 நாட்களில் ஜனனமாகிறது! தாயின் உயிரை சார்ந்து கருவில் இருந்த நாம் திருவின் அருளால் தனித்து விடப்படுகிறோம் இவ்வுலகில்!

ஒன்றும் அறியா குழந்தையாக பிறந்த மனிதன் தான் பிறந்தது பிறப்பிக்கச் செய்தவனோடு ஒன்றிவிடத்தான் என உணர்ந்தால்!? பிழைத்தான்!!

ஒன்றும் அறிவை அறிய அறிவிக்கும் ஆசானை பணிந்து மெய்ப் பொருள் உணர்ந்து ஆன்றவிடந்து அடங்கிட தவம் செய்வோர் தப்புவர்!

ஒன்றும், இரண்டிலே, எட்டாகிய இரண்டிலே வழிகண்டு ஊசிமுனை வாசல் வழி கண்டு போனாலே உய்யலாம்! வாழலாம்! பேரின்பம் பெறலாம்!

ஒன்றான இறைவனை இரண்டாக உள்ள மெய்ப்பொருளிலே

நினைந்து உணர்ந்து நெகிழ்ந்தால் ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டற்று ஒன்றாகலாமே! ஜீவன் முக்தராகலாமே!

ஒன்றே மெய்ப்பொருள் என இரண்டையும், கண் இரண்டையும் ஒன்றாக்கினால் உள்ளே, ஒளிரும் மூன்றாவது கண்! துலங்கும்!

ஒங்காரமான அ, உ, ம் - சேர்ந்ததே. மூன்றாமிடம் - முப்பாழ் -லலாடம்-அக்னிகலை-அகக்கண் - ஞானக்கண் - நெற்றிக்கண்!

நமது மெய் பொய்யல்ல! அழியாதது! நித்ய ஜீவனை தாங்கியிருக்கும் மெய் பொய்யா? மெய் பொய்க்காமல் - அழியாமல் வைக்கும் உபாயம் அறிந்து காத்தால் மெய்தங்கிய மெய்யும் மெய்யாகிவிடும்!

மெய்யிலே இருக்கும் மெய் துணைகொண்டு, காயமே இது பொய்யடா என்றவர்களின் வாக்கை பொய்யாக்கிவிடலாம்! காயத்துள் நின்ற கடவுளை கண்டால் மெய் மெய்யாகிவிடும்! மெய்யை உடலை பொன்போல பாதுகாக்க வேண்டும் என்றார் வள்ளலார். உடலினுள் துலங்கும் தங்க ஜோதியை கண்டால் நம் உடலும் பொன்னுடலாகுமே! இது மெய்! பொன்னம்பலவனை, பொன்னார் மேனியனை நம் மெய்யில் கண்டால் நம் உடலும் பொன்னுடலாகுமே! இது மெய்யே!

“அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது, கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது!” என்று ஔவை பிராட்டி அருளிய அமுதமொழி படித்தோமல்லவா? அரிதானது மானுடதேகம்! குறையின்றி பிறப்பது புண்ணிய பலன்! இறைவன் அருளால் கிடைத்தது! தந்தவனை, மெய்தந்தவனை, மெய்யினுள் மெய்ப்பொருள் தந்தவனை காணவேண்டாமா? உணர வேண்டாமா? நன்றி சொல்ல வேண்டாமா?

தாய் தந்தை தந்ததல்ல உயிர்! மெய்! பூர்வ ஜன்ம கர்மக்கடன் தாய்தந்தை உடன் பிறப்பு சொந்தபந்தங்கள்!! இதுவே மெய்! தாயும் தந்தையுமான தயாபரன் சர்வேஸ்வரன் பரப்பிரம்மம் அவனே ஆதியும் அந்தமுமில்லாத அருட்பெருஞ்ஜோதி வானவன்! மெய் இதுவே! அவனே நம் உயிருமாகி பெற்றோர் மூலம் உடலும் வர காரணமுமானான்! மெய் தந்த மெய்ப்பொருள்!!

நமது மெய் சூடாக இருக்கிறதல்லவா? ஏன்? பேரொளியான இறைவன் சிற்றொளியாகி நம் உயிராகி நம் உடலினுள் இருப்பதால்தான்! சராசரி மனிதனின் உயிர் உஷ்ணம் ஒரே சீராக இருக்க வேண்டும்! கூடினால் ஜுரம் குறைந்தால் ஜன்னி காலனை பார்க்க போய்விட வேண்டியதுதான்!

உயிரின் தன்மை உஷ்ணம் தான், சூடு தான் ஒளிதான் என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ளலாம். உயிர் இருக்கின்ற நம் உடல் சூடாக இருக்கிறது. உயிர் போன உடல் குளிர்ந்து போய் விடுகிறதல்லவா? உயிர் இருந்தால் சூடு இருக்கிறது. அப்படியானால் உயிரின் தன்மை சூடு தானே! உயிர் - ஒளிதானே! மெய்ப்பொருளில் கண்மணியில் ஒளி இருக்கிறது, உயிர் துலங்குகிறது என்பது மெய்யே!

சூடு கொண்ட திருவாவடுதுறையை நோக்கில் சூரியனும் சந்திரனும் தோற்றமாமே என துறையறி விளக்கத்தில் அகஸ்திய மாமுனிவர் கூறியருளியது மெய்தானே! திருவாகிய இறைவன் ஆடிக்கொண்டிருக்கும் துறை - இடமான, சூடு கொண்ட இரு கண்களுமே பார்க்கும்போது அனுபவத்தில் உணரலாம்! வலது கண் சூரியனாகவும் இடது கண் சந்திரனாகவும் தோன்றி ஒளி ஒன்றாகும்.

இங்கு தவ நிலையையும் கூறியருள்கிறார் அகத்திய மாமுனிவர் - நம் இரு கண்களையும் சூடு கொள்ள, உணர்வால் சூடு பெருகிட செய்து பார்க்கையில் சூரிய சந்திரனாகிய இரு கண் ஒளி ஒன்றுசேர்ந்துவிடும். அக அனுபவம் கிட்டும்! வள்ளல்பெருமான், நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து விழித்திருந்து தவம் செய்ய சொல்கிறார்! மெய் அனுபவம் பெற வேண்டுமாயின் மெய்யிலே விளங்கும் மெய்ப்பொருளைப் பற்ற வேண்டும்! மெய்ஞ் ஞானம் இது எனவே சித்தரும் முத்தரும் உரைத்ததை அடியேன் எழுதியிருக்கிறேன்! இது ஒன்றே மெய்! மெய்யாலுமே இதுவே மெய்!

மெய்யிலே உடலிலே மெய்ப்பொருளிலே கண்மணியிலே ஊசிமுனை வாசலினுள் ஊசி முனையளவு ஜோதியாக இருக்கிறான் பரமாத்மா!! துலங்குகிறது சிற்ஜோதி! சின்ன இடத்திலே ஊசி முனையளவு இடம் அங்கே ஜோதியாக இறைவன் ஆடிக்கொண்டிருக்கிறான்! அதாவது அங்கிருக்கும் ஜோதியின் அசைவே நடனம் ஆடிக் கொண்டிருக்கிறான் என்றனர் பக்தர்கள்! ஆடும் இடம் சிற்சபை - அம்பலம் - சின்ன அம்பலம்! திருவாகிய இறைவன் ஆடுகின்ற சிற்றம்பலம். அதுவே திருச் சிற்றம்பலம்! சிற்சபை வழியே உள்ளே சென்றால் பொற்சபை. இரு கண்விழி உள் சென்றால் இரு கண்ணும் உள்ளே சேருமிடம் முக்கோண வடிவில் கூடும் மூன்றாவது இடம் அக்னிகலை! சூரிய சந்திர கலைக ளாகிய வலது இடது கண்கள் உள்ளே ஒன்று சேருமிடம் அக்னி கலையாகிய ஆத்மஸ்தானம்! மூன்றாவது கண்!

நம் மெய்யில் உடலில் தலையில் உச்சிக்கு நேர் கீழே நம் வாய் உட்புறத்தில் அண்ணாக்கின் மேலே மொத்தத்தில் நம் தலையின்

உள் நடுவிலே இருக்குமிடமே நம் இருகண்களும் உள்சென்று சேருமிடம்! இது மெய்! திருமூலர் கூறியிருக்கும் இதையே மற்றொரு சித்தரும் கூறியருள்கிறார்! உச்சிக்கு கீழடியோ அண்ணாவுக்கு மேல் வைத்த விளக்கு நித்தம் எரியுதடி வாலைப்பெண்ணே! என்று மெய் உரைக்கிறார்! எல்லோரும் உரைத்த மெய்யை யானும் எடுத்தியம்பு கிறேன். யான் உரைப்பதெல்லாம் மெய் ஒன்றே!

இறைவன் நம் மெய்யிலே உள்ளார் என்பதே மெய்! நமது மெய்யிலே கண்டாலே உணர்ந்தாலே, பார்க்குமிடமெங்கும் நீக்கமற அந்த பரஞ்ஜோதியே நிறைந்திருக்கிறான் என்பதை தவத்தாலே, பிரகலாதனைப் போல நாமும் அறியலாம்! மேன்மை பெறலாம்!

நம் உடலிலுள்ள ஒரு உரோமத்தைக்கூட நம்மால் உருவாக்க முடியாது! எல்லாம் அவன் செயல்! இது மெய்! தாயின் கருவினுள் குழந்தைக்கும் கல்லினுள் தேரைக்கும் படியளக்கும் பரமனின் செயல் மகாமகா அற்புதமன்றோ!! அவன் அறியமாட்டானா நம்மையும் காக்க! எனவே மனிதா “சும்மா இரு!” இதுவே, மெய்! மெய்யருளிய மெய்!

உடலென்ற கூட்டை தூக்கி சுமப்பது யார்? நாம் படுத்தால் நம்மை தூக்க நாலுபேர் வேண்டுமே! நாலுபேர் தூக்க சிரமப்படும் உடலை நாமே தூக்கிக் கொண்டு நடப்பது எப்படி? நோய் வந்து படுக்கையில் படுத்துவிட்டால் கை கால்களை அசைக்கக் கூட முடியாதே! நன்றாக இருக்கும்போது நம்மை நாமே தூக்கிக்கொண்டு பாரமின்றி திரிவது எப்படி? நம்முள் இருக்கும் உயிரான இறைவன் தானே சதா காலமும் நம்மை சுமந்து திரிகிறார்! சுமப்பவனுக்கு கூலி ஆகாரம் நைவேத்தியம்! நம்மை சுமப்பவனை பஞ்சமாபாதகம் செய்து துன்புறுத்தாமல் அடிபணிந்து, சும்மா இருந்தாலே அரவணைப்பான்!

மெய்கொண்டு போனாலே மெய்யான பரமனை நம் மெய்யிலே காணலாம் உணரலாம் மகிழலாம்! இதுவே மெய்!

நான் மெய். என் உடல் மெய். என் பெற்றோர் சொந்த பந்தங்கள் மெய் தான். பலநூறு வருடங்களாக பல ஆயிரம் வருடமாக மன்னர்கள் பலர். ஆட்சி புரிந்தனர். இது சரித்திரம் கூறும் மெய். நாம் இருக்கும் பூமி உருண்டை தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. இது விஞ் ஞானம் கூறும் மெய். இப்பிரபஞ்சத்தில் நவகோள்கள் அவற்றின் சஞ்சாரங்கள் எல்லாமே உண்மை தானே! யார் இதையெல்லாம் படைத்தது? நடத்துகிறது? ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது? ஏன் இந்த நாடகம்! இயற்கையில் நானும் ஒரு அங்கமா? இதெல்லாம்

மெய்தானே! இதையெல்லாம் நம்பும் நான் அறிவது எப்படி? உணர்வது எப்படி? இந்த மெய்யை மெய்யாலுமே நம் மெய்யிலே உணர காண முடியுமா? முடியும் என்கின்றனர் மெய்ஞ்ஞானிகள்!! ஆம் முடியும்! தவத்தின் மூலம் உணரலாம்!

மனிதன் பிறந்தது முதல் வாலிப பருவம் வரை குழந்தையாகவே உள்ளான்! விளையாட்டு சாப்பாடு தூக்கம் தான் வாழ்க்கை! அறிவு துலங்க ஆரம்பித்த பிறகுதான் பொறுப்புதானே வருகிறது. விளையாட்டுத்தனம் போய்விடுகிறது. தன்னை, தன் வாழ்வைப் பற்றி சிந்திக்க ஆரம்பிக்கிறான். பள்ளிக்கல்வி கற்கிறான். பெரும்பாலானோர் புள்ளிக்கல்வி கற்பது இல்லை! கண்மணி மத்தியிலுள்ள புள்ளி போன்ற ஜோதியைப் பற்றி நிறைய பேர் அறிவதே இல்லை! இதையறிய குரு தேவை. ஞான சற்குரு ஒருவரை பெற்றால் அவன் ஆத்மா கடைத்தேறும். இது மெய்.

நாம் பிறந்தது இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது மெய்! நம் மெய்யில், மெய்ப்பொருள் மூலம் நம்மை உணரலாம் என்பது சான்றோர் உபதேசித்த மெய்! நாம் பிறந்தது பூர்வ ஜன்ம கர்மவினைப்படி விதிப்படி என்பது மெய்! இந்த விதியை மதியால் தவத்தால் சாதனைபுரிந்து வெல்லலாம் என்பதும் மெய்!

நம் வாழ்வை பிரம்மச்சர்யம் இல்லறம் வானபிரஸ்தம் சந்நியாசம் என மூத்தோர் நான்காக வகுத்துள்ளனர் இது மெய்! “இளமையில் கல்” என்றார் ஔவை பிராட்டி. பள்ளிப் படிப்போடு புள்ளிப்படிப்பையும் மெய்ஞ்ஞான சற்குரு மூலம் கற்பவனே தெளிவான்! இது மெய்! இளமையில் இந்த சாகா கல்வியை கற்க வேண்டும் என்பதோடு, திருமணமாகி இல்லறம் புகும் வரை மனிதன் காமத்திற்கு இடம் கொடாமல் கல் போன்று இருக்கவேண்டும்! இது மெய்யிலும் மெய்!

புத்தி தடுமாறும் பிரம்மச்சர்யம் மெய்ஞ்ஞான கல்வியால் சீர்பெறும்! இது மெய்! பெற்றோர் தங்கள் குழந்தைகளை திருமணம் வரை கண்ணும் கருத்துமாக பேணி காக்கவேண்டும்! நாணி வளர வேண்டும் பெண்! பணிந்து வளர வேண்டும் ஆண்! எப்படியோ பிறந்து விட்ட, பெற்றுவிட்ட குழந்தையை பாலூட்டி சீராட்டி படிக்க வைத்து ஆளாக்கும் பெற்றோரின் தலையாய கடமை, தம் பிள்ளைகளை நல்ல ஒரு ஞான சற்குருவிடம் சாகாக்கல்வி ஞானக்கல்வி கற்க வைப்பதுதான்! அப்படிப்பட்ட பெற்றோரே தம் கடமையை சரிவர செய்தவராவார்! இதுவே மெய்!

கடவுள், பக்தி என்று சாமியாராய் போகச் சொல்லவில்லை! “களவும் கற்றுமற” நல்ல உபதேசமல்லவா? ஞானம் இது என அறிய வேண்டாமா? நான் யார் என உணர வேண்டாமா?

ஓர் எட்டில் வளர்ச்சி. ஈரெட்டில் கல்வி. மூவெட்டில் இல்லறம். நாலெட்டில் பிள்ளைப்பேறு. ஐயெட்டில் சம்பாத்யம். ஆறெட்டில் கடமைசெய்தல். ஏழெட்டில் தீர்த்தயாத்திரை. எட்டெட்டில் சந்நியாசம். இப்படி சித்தர்கள் நம் வாழ்வை எட்டுஎட்டாக பிரித்து அக்காலங்களில் செய்ய வேண்டியவைகளை மெய்யுள்ளபோது சிறப்பாக செய்ய அறிவுறுத்தினர்! எட்டிலிருக்கும், மெய்யிலுள்ள மெய்ப்பொருளைத்தான்! புரிந்து கொள்ள எட்டுஎட்டாக வாழ்வை பிரித்துக் காட்டினார்கள்! மனிதா, ஏன் 10 பத்தாக பிரித்திருக்கக் கூடாதா? மெய்ப்பொருளை சொல்லும் எட்டாக, எப்படியாவது எட்டை ஞாபகத்தில் கொள்ள வேண்டி, மெய்ப்பொருள் நம் அறிவுக்கு எட்டவேண்டி எட்டு எட்டு என கட்டுரைத்தனர். சுட்டிக்காட்டினர். இது மெய்தானே!

பக்தியில் பலர் உடலை வருத்தி பல சாதனைகள் செய்கின்றனர்! மனோதிடம் இல்லாத கடினமானவர்கள் செய்ய வேண்டியது தான்! ஆனாலும் இது சரியல்ல! அன்பே வடிவான இறைவனை, கருணைக்கடலான கடவுளை, அருள்மயமான ஆண்டவனை அடைய கடினபோக்கு தேவையில்லை! அன்பே கடவுள் என்றனர் ஆன்றோர்! கடவுளை அடைய அன்பு ஒன்றே வழி! மெய்யினுள் மெய்ப்பொருளை அன்பால் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து தவம் செய்வதே சும்மா இருக்கும் நிலையே ஒப்பற்ற ஞானம்! மெய்யை வருத்தாது, மெய்யிலுள்ள மெய்ப்பொருளை மெய்ஞ்ஞான சற்குருமூலம் அறிந்து உணர்ந்து மேன்மை பெறலாம்! இது மெய்!

மெய்யிலுள்ள பஞ்சேந்திரியங்கள் வினைப்படி செயல்படுவது இயல்பு! நாம் நம் மனம் போனபடி இந்திரியங்கள் போகாமல் தடுத்து மெய்யை சும்மா இருத்தி மெய்ப்பொருளைப் பற்றி தவம் செய்வோமானால் மெய்நிலை பெறலாம்! சாகாநிலையடையலாம்!

நம் உடல் உறுதிபெற உடல் என்றும் நிலைக்க பிரம்மச்சர்யம் அவசியம் தேவை! இல்லறம் புகும் வரை, கட்டுப்பாடு நூறு பங்கு கண்டிப்புடன் இருக்க வேண்டும். இல்லறத்தான் 15 நாளைக்கொரு முறை மனைவியோடு மட்டுமே சுகித்திருக்கலாம்! எவன் ஒருவன் தன் மனைவியைத் தவிர மற்றெல்லா பெண்களையும் தாயாக கருதுகின்றானோ அவனே ஞானம்பெற தகுதி உள்ளவனாவான்! இதுவே மெய்!

இல்லறத்தானுக்கு விந்து உற்பத்தி ஊற்றுக்கேணி ஞாயத்தை ஒத்தது என வள்ளல் பெருமான் கூறியருள்கிறார்! பிரம்மச்சாரி தன் மனம் சலனமடையும் இடம் பொருட்களை தவிர்த்து சதா காலமும் இறை சிந்தனையோடு வாழ்வதே உத்தமம்! நல்லவர்களோடு நட்பு பாராட்டுதல்! ஆன்மீக உரையாடல்கள் கேட்டல், பங்குபெறல்! கோவிலுக்கு

போதல்! ஆன்மீக சான்றோர் தரிசனம், சத்சங்கம்! இவை யெல்லாம் ஒருவனை மெய்யிலே ஒளிர வைப்பதற்கு துணை செய்யும்!

மெய்கொண்டு வந்த நாம் நமக்கு விதிக்கப்பட்ட கடமையை சரிவர செய்தல் மிக மிக அவசியம்! கடமையை கர்மாவை செய்வதன் மூலம் வினைகள் தீருமல்லவா? தவமும் கடமையாற்றலும் நடந்தால் நாம் ஞானம் பெறுவது சுலபமாகிவிடும்!

மெய் என்றால் உடல்! இது ஆண் பெண் என இரண்டாக ஈர்ப்புடன் படைத்தான் இறைவன்! இயங்க வேண்டும் என அவன் கருதியதால், ஆண் பெண் இணைய வேண்டியதாயிற்று! படைப்புத் தொழிலுக்கு காரணமாக்கிவிட்டான் நம்மை! நம் பாவத்தை பொறுத்து மெய்கொண்டு பரிதவிக்கிறோம்!

ஆணும் பெண்ணும் சமமே! இருவருக்கும் ஆன்மா ஒன்றே! உடலில் பேதம் இருந்தாலும் மெய்யுணர்வு அனைவருக்கும் ஒன்றே! உடலால் பிரித்துவைத்த இறைவன் உயிரால் நம்மை ஒன்றாகவே படைத்தான்! எல்லோர் உடலிலும் ஆணாயினும் பெண்ணாயினும் வலதுபக்கம் ஆண் அம்சம் இடது பக்கம் பெண் அம்சம்! வலது சிவம் இடது சக்தி இது மெய்!

மெய்யால் வித்தியாசப்பட்ட ஆண் பெண் ஒன்றுபட்டு வாழ்வதே இல்லறம்! அது நல்லறமாக விளங்க வேண்டும். பெண் வெறும் பிள்ளைபெறும் கருவி எனக் கருதாது தன்னில் சரிபாதி என கருதுபவனே நல்லதொரு கணவன்! அந்த கணவனே கண் கண்ட தெய்வம் என வாழ்பவளே உத்தமி, பத்தினி! தன் மனையாளின் கருத்துக்கு செவிமடுப்பவன், பிற பெண்களை தாயாக கருதுபவன் ஞானம் பெறுவான்!

கருவை சுமந்து, உருவை தரதாய் பட்ட வேதனை சொல்லி மாளாது! வயிற்று பாரம் இறக்கிவிட்டு மனபாரம் சாகும்வரை சுமக்கும் தாய்மைக்கு ஒப்பார் யார்?! பேதை மனங்கொண்டவள் பெண் என்பர்! ஆனால் பேடாக பிள்ளை பிறந்தாலும் தாங்கி காக்கும் தாய் கடவுளுக்கு நிகரல்லவா?

என்னைக் கேட்டால் உலகில் சிறந்தவள் மனைவியே என்பேன்! தாயை விட சிறந்தவள் மனைவியே! ஏனெனில் தாய் ஸ்தானம் கிடைப்பது மனைவிக்குத்தான்! மனைவி உத்தம குணவதியாக பத்தினியாகவும் திகழ்கிறாள்! கணவனின் எல்லாவற்றிலும் எல்லா நிலையிலும் எல்லா காலத்திலும் சரிபாதியாக நிற்பவள் மனைவியே! மனைவி, சிவத்தின் பாதி சக்தியாக துலங்குபவள்! மனைவி, விஷ்ணுவின்மார்பில் லக்ஷமி என அமர்ந்தவள்! மனைவி, பிரம்மனின்

நாவில் சரஸ்வதி என இருந்தவள்! இப்படி இறைவனே மனைவியை எப்படி போற்ற வேண்டும் என நமக்கு உணர்த்தியிருக்கிறார்!

நம்மனைக்கு தலைவி மனைவி! வீட்டுக்காரி என்றும் இல்லக்கிளத்தி என்றும், மனைவி நம் உயிரோடும் உடலோடும் கலந்தவள் என்றும் மெய்ஞ்ஞானம் பெற்றவரும் கூறுவர்! மனைவி தான் பெற்ற மக்களோடு, தான் கொண்ட கணவனையும் இரு கண்களாக கருதுபவள்! நல்லதொரு மனைவி ஒருவனுக்கு மந்திரி போலவும், தாய் போலவும், வேலைக்காரி போலவும், தாசி போலவும் இருக்கிறாள்! நற்பண்புகளோடு அமைந்த மனைவியும், மேற்கூறிய குணங்களும் கொண்ட மனைவியை பெற்ற ஆடவனே புண்ணியம் செய்தவன் ஆவான்! மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்!

திருமணங்கள் சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்படுகின்றன! எப்பிறவி பந்தமோ இப்பிறப்பு மனைவி! மனைவியை மதிப்பவனே மனிதன்! மிதிப்பவன் மிருகம்! மனைவியை அடிமையாக கருதாமல் தன் உயிராக எவன் ஒருவன் கருதுகிறானோ அவனே உத்தமன்! ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்பவனே உத்தமன்!

காமம் தலைக்கேறியவன் கடைமடையனாவான்! விந்து விட்டவன் நொந்து கெட்டான்! எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளும் அதிர ஒழுகும் விந்துவால் பெறுவதே சிற்றின்பம்! கண நேர இன்பம்! அதன் பின்னர் துன்பமே! இழந்த சக்தியை மீட்க வேண்டாமா! இதிலும் அளவோடு இரு! அறிவோடு இரு! என ஞானிகளும் அறிவுரை பகர்ந்துள்ளனர்!

காமத்தால் விந்து கீழிறங்கும் பிராண நஷ்டம் உண்டாகும்! தவத்தால் விந்து மேலேறும் ஓஜஸாகும்! பிராணன் நிலைபெறும்! ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் உடல் நலமாகும்! காம வயப்பட்டு தகாத செயல்கள் புரிந்தால் கொடூர நோய்கள் வந்து காலமெல்லாம் துன்புற்று முடிவில் இறக்க நேரிடும்! மெய் ஒழுக்கமும் மன நற்குணமும் இருந்தால்தான் மரணமிலா பெருவாழ்வு கிட்டும்! இது மெய்!

தாயை விட மனைவியே சிறந்தவள்! ஒரு பெண் தாயாவது மனைவியான பின்னே! நல்ல மனைவியே நல்ல தாயாக முடியும்! தந்தையும் தாயும் உடல் கொடுத்தவர்கள்! மெய் கொடுத்த கண்கண்ட தெய்வம் தான்! மெய்யினுள் மெய்ப்பொருள் கொடுத்தது அந்த இறைவன்தானே! உடல் அழியும் தன்மையுடையது அதைத்தான் தாய் கொடுக்கமுடியும்! மனைவியனாவள் மெய்யினுள் மெய்ப்பொருள்போல, கணவனின் உயிருக்கும் உடலுக்கும் பரவசம்

நல்கக் கூடியவள்! மனைவி மட்டுமே தரக்கூடியது சிற்றின்பம்! தாயால் தர முடியாதது!? தாயின் பாசம் பெற்று வளர்த்து ஆளாக்குவதோடு முடிந்தது! மனைவியின் பாசம் எங்கிருந்தோ வந்து மணமாகி சாகும்வரை உள்ள பந்தம்! பிரிக்க முடியாத பிணைப்பு கணவன் மனைவி உறவு!

தாயின் அன்பு அவளின் பல பிள்ளைகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்! மனைவியின் அன்பு தன் மணாளன் ஒருவனுக்கு மட்டுமே! தாய் பிள்ளையை கருவிலே வயிற்றிலே பத்து மாதம் மட்டுமே சுமக்கிறாள் பின் இறக்கி வைத்து விடுவாள்! மனைவி தன் கணவனை எங்கிருந்தோ வந்த பந்தப்பட்டு, வாழ்நாள் முழுவதும் மனதிலே சுமக்கிறாள்! இறக்கி வைப்பதேயில்லை! எனவே, எல்லாவிதத்திலும் தாயைவிட மனைவியே சிறந்தவள்! இது பலரும் அறியாத, உணராத உண்மை! சத்தியம்!

ஒருவனது வாழ்க்கை நல்லாயிருப்பதும் மோசமாவதும் மனைவியை பொறுத்தே! பொறுமையான நல்ல குணவதியை மனைவியாக பெற்றவன் பூர்வ ஜன்மத்தின் புண்ணியம் செய்தவனே! அவனே பாக்கியவான்!

ஈருடல் ஓருயிர் என வாழ்வது கணவன் மனைவியே! நகமும் சதையும் போல வாழ்வது கணவன் மனைவியே! வள்ளுவரும் வாசுகியும் போல உத்தம தம்பதியாக வாழ்வதே பாக்கியம்! ஒரு பெண்ணுக்கு மிக மிக புனிதமான பட்டம், உன்னதமான பாக்கியம் பத்தினி என்பதே! அது மனைவி என்ற ஸ்தானத்துக்கு உரியதே! ஒரு பெண் முதலில் மனைவியாகிறாள்! பின்னர் தான் தாயாகிறாள்! மனைவியே சிறந்தவள்! இது மெய்! மெய்! மெய்!

மனைவியால் தான் இன்பம் பெறுகிறான் ஆண்மகன்! கணவனாகி கைப்பிடித்த காரிகையுடன் கலந்து மகிழ்ந்து உடலால் உணர்வால் சிறிய அளவிலே பெறும் இன்பமே சிற்றின்பம்! இது மெய்!

பெண்ணான ஆத்மாவான நாம் - மனிதர்கள் பரமாத்மாவான புருஷோத்தமனான இறைவனோடு இணைவதே பேரின்பம்! ஜீவ பிரம்ம ஐக்கியம் என்று வேதமும் ஞானியரும் உரைத்துள்ளனர்!

உடலால் உலகில் பெறும் இன்பம் சிற்றின்பம்! ஆத்மாவால் பரத்தில் பெறும் இன்பம் பேரின்பம்! உலகில் மனைவியால் தானே, நாம் இன்பம் பெறமுடியும்!! பரத்தில் நாம் மனைவியானால் தானே பேரின்பமும் பெற முடியும்! எப்படியானாலும் மனைவியே சிறந்தவள்! நாம் நல்ல மனைவியாக வேண்டும் அந்த நாதனுக்கு!

# ரு. Rô]m RYm

அரிதான மானிட தேகம் பெற்ற நாம், எக்குறையுமின்றி மனிதனாக பிறந்த நாம், ஞானமும் கல்வியும் அறிதல் அரிதினும் அரிதாம்! இந்த ஞானமும் கல்வியுமே சாகாக்கல்வி! சாகாநிலையே ஞானம் பெற்றவர் பெறுவது! அதை அறியும் கல்வியே சாகாக்கல்வி!

சாகாக்கல்வியை அறிந்தால் மட்டும் போதுமா? “ஞானமும் கல்வியும் நயந்தகாலையும் தானமும் தவமும் தான் செய்தல் அரிதே” என ஔவை பிராட்டியார் வேதமென உரைத்துள்ளார்! ஆக, நல்லபடியாக மனிதனாக பிறந்து சாகாக்கல்வி கற்ற நாம், செய்ய வேண்டிய முக்கியமான காரியம் தானம் தவம் செய்தலே!

இந்த உலகில் உள்ள யாராயினும் சரி, தவம் செய்யாமல் ஞானம் இல்லை! தானம் செய்யாமல் ஞானம் கிட்டாது! சத்தியம்! தவம் செய்பவருக்கு உண்டான சிறந்த தகுதி தானம் செய்பவராயிருக்க வேண்டும்! என்பதே!

தானம் கொடுக்க வேண்டும்! நாம் வள்ளலாக வேண்டும்! தானம் பலவகை! எல்லாவற்றையும் தானமாக கொடுக்கலாம்! நமது தமிழ் கூறும் நல்லுலகத்தில் வள்ளல் பலரை நாம் கற்றறிந்திருக்கிறோம்! ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு இலக்கணமாக திகழ்ந்தவர்கள் அந்த வள்ளல் பெருமக்கள்.

புறாவுக்காக தன் சதையை அரிந்து கொடுத்தார் சிபிச்சக்கரவத்தி! முல்லைக் கொடி படர தன் ரதத்தை விட்டுக் கொடுத்தார் பாரிவேந்தன்! மழையில் குளிரில் நடுங்கிய மயிலுக்கு போர்வை கொடுத்தான் பேகன்! வாடிய பயரைக் கண்டு வாடினார் வள்ளல் இராமலிங்க சுவாமிகள்! இப்படி எல்லா ஜீவிகளுக்கும் இரங்கிய கருணை உள்ளமே இறைவன் வாழும் ஆலயம்!

எதையெல்லாம் தானம் கொடுத்தார்கள். எப்படி கருணைகடலாக வாழ்ந்தார்கள். கர்ணன் வள்ளலுக்கெல்லாம் வள்ளல்! கர்ணனின் கொடை தன்மைக்கு ஈடு இணையே கிடையாது!

இவர்களைப் போல் நாம் இல்லாவிட்டாலும் கொடுத்து மகிழும் நல்ல உள்ளத்தை நாம் பெற்றாக வேண்டும். இரக்கமே எனது உயிர் என்றாரே வள்ளல் இராமலிங்கர்! எல்லோரும் பொருட்களைத்தான் தானமாக கொடுத்தார்கள். ஆனால் வள்ளலாரோ, எல்லா உயிரும்

உய்வடையும் வழியை காட்டி, மனிதன் தன்னை உணர வழிகாட்டிய ருளினார்கள். ஞானதானம் செய்து ஆன்மீக புரட்சியை தொடங்கி வைத்தார்கள்! இதுவரை இரகசியமாக விளங்கிய ஞானபாதை வள்ளல் அருளால் பரசியமாகியது! வெட்டவெளிச்சமானது!

ஞானம் எல்லோரும் பெறலாம்! மனிதப் பிறவியே இதற்கான தகுதி! வேறெதுவும் தேவையில்லை என அறைகூவல் விடுத்து எல்லோரையும், “வம்மின் உலகியலீர் மரண மிலா பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்” வாரீர்! வாரீர்! என்று கூவி அழைத்து போதித்தார் ஞானத்தை! இரகசியங்களை உடைத்தார்!

இன்று அடியேனை ஆட்க்கொண்டு இரகசியங்களை வெளிப்படுத்தி மெய்ஞ்ஞான விளங்கங்களை எல்லோரும் அறிய நூற்களாக எழுதி வெளியிடவும் அருள்புரிந்துள்ளார்கள்! எங்குரு வடலூர் வள்ளல் இராமலிங்கர் அருளாசியால் அடியேன் ஞானதானம் செய்து வருகிறேன்! எல்லோரும் ஞானதானம் செய்யுங்கள். உங்களுக்கு ஞானம் கிட்டும்!

“ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்”, ஊரார் ஞானம் பெற நீங்கள் வழிகாட்டினால் இறைவன் பரிவு கொண்டு விரைந்து உங்களை ஆட்க்கொள்வார்!

பொன் பொருள் நில புலன்கள் ஆடை உணவு இப்படி எல்லாமே தானம் கொடுக்கிறார்கள். என்னவெல்லாமோ தானம் கொடுக்கிறார்கள். தானத்தின் மேன்மையை போற்றாத நூற்களே இல்லை! பாடி மகிழாத கவிஞர்களே இல்லை! தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பர் சான்றோர்! உயிர் காக்கும் உணவுதானே மருந்து! நீர்பந்தல் கூட அந்தகாலத்திலும் அமைத்தனர். இன்று 1 லிட்டர் தண்ணீர் விலைதான் 1 லிட்டர் பால்! கலிகாலம்! தண்ணீர் விலை கொடுத்து வாங்கி குடிப்பதைவிட, குளிப்பதைவிட பால் விலைகொடுத்து வாங்கி குளிக்கலாமே!?

உடலுக்கு தேவை போஷாக்கு! அதற்கு தேவை உணவு! உலக பெரும் பணக்காரனானாலும் ஏழையானாலும் எல்லா உயிர்களுக்கும் மிக மிக முக்கியமானது உணவு. முக்கியமான உணவை தானமாக கொடுப்பது உயர்ந்தது தானே! வடலூரில் நமது இராமலிங்க சுவாமிகள் சத்திய தர்மச்சாலையை கட்டி தினமும் வரும் எல்லோருக்கும் உணவு கொடுக்க உருவாக்கினார்கள்! சுமார் 150 வருடமாக இன்றும் அன்னதானம் வழங்கி வருகிறது தர்மச்சாலை!

இந்தியா ஒரு ஞானபூமி! இங்கே தோன்றிய மகான்களுக்கு அளவேயில்லை! இந்தியாவில் உள்ள கோயில்களுக்கு, புண்ணிய ஸ்தலங்களுக்கும் அளவேயில்லை! எல்லா ஊரிலும் அதிதி போற்றுதல் சிறப்பாக நடக்கிறது. அன்னதானம் கிட்டத்தட்ட எல்லா புண்ணிய ஸ்தலங்களிலும் நடக்கிறது. இந்திய மக்கள் அன்னதானத்தின் பெருமையை அறிந்தவர்கள். “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்பதும், விருந்தினர் உபசரிப்பும் பண்பாடாக கொண்டு வாழ்பவர்கள்! “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்பதை உணர்ந்தவர்கள் இந்தியர்கள். இங்குள்ள கலாச்சாரம்.

இதுவரை இந்த உலகம் போற்றியது அன்னதானத்தை! நாம் செய்த புண்ணியம், இராமலிங்க சுவாமிகள் நம்மிடையே பிறந்தார்! வாழ்ந்தார்! இன்றும் வாழ்கிறார் ஒளியாக!! உலகுக்கு வள்ளலார் விடுத்த அறைகூவல்! மரணமிலா பெருவாழ்வு! சாகாகல்வி!

இதுவரை “மறை”யாக இருந்த ஞானம் வள்ளலாரால் “திரை” நீக்கப்பட்டு “உரை”யாக நமக்கு கிட்டியது! என்னே! அவர்தம் கருணை! தமிழகத்தில் தான் இத்தகைய அருள் வள்ளல்கள் தோன்றுகிறார்கள்! தமிழகத்தில் பிறந்தது நாம் செய்த புண்ணிய பலனே! இரகசியம் என குரு சொன்னதை, உலகர் உய்ய எல்லோரும் அறிய வெளிப்படுத்தினாரே நம் இராமானுஜர்!! இவரல்லவா ஜாதியை தாண்டிய மதத்தை தாண்டிய மனிதநேயம் கொண்ட மகானுபாவர்! வள்ளல் ஸ்ரீஸ்ரீ இராமனுஜர் பொற்பாதங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம்! அடியேனுக்கு வள்ளல் இராமலிங்கர் ஒரு கண் என்றால் இராமனுஜர் மற்றொரு கண் போன்றவரே!

சத்திய ஞான சபையின் தத்துவ விளக்கத்தை தரணிக்கு திருஅருட்பா வழியாக விழியின் வழியாக உணர்த்தியவர் வள்ளலார்! உலகுக்கே ஞானத்தை தானமாக வழங்கிய ஈடு இணையற்ற வள்ளல் இராமலிங்கரே! எல்லோருமே, வேதத்திலிருந்து இன்றுவரை எல்லாராலும் மறைத்தே சொல்லப்பட்டதை, பரிபாஷையாக சொல்லப்பட்டதை, சூட்சமமாக சொல்லப்பட்டதை வெளிப்படுத்திய “வல்லவன்” வள்ளலார் தான்!! இந்த ஒப்பற்ற ஞானதானம் செய்ய வள்ளல் பெருமான் அடியேனை பணித்தது உண்மை! இதுவரை 24 நூற்கள் எழுதி வெளியிட்டு ஞானத்தை பாரறியச் செய்தது உண்மையிலும் உண்மை! இணையதளம் மூலம் இன்று உலகே அறிய அடியேன் ஒரு காரணம் என்பதை எண்ணும்போது புளகாங்கிதம் அடைகிறேன். எம்மை பணித்து மேன்மை தந்த வள்ளல் பெருமானுக்கு அனந்தகோடி வணக்கங்கள்!

தானம் செய் என ஔவையார் கூறியதன் பொருள் ஞானதானம்

செய் என்பதாகும்! உலகப் பொருட்களை தானம் செய்வதைவிட, உண்மைப் பொருளை - உன் மெய்ப்பொருளை உணர்வாயாக என எல்லோருக்கும் ஞானத்தை சொல்லிக் கொடுப்பாயாக! அவர் ஞானம் பெற வழிகாட்டுவாயாக! இதுவே ஞானதானம்! செய்! ஞானதானம் செய்! உயிருள்ளவரை ஞானதானம் செய்! உயிராய் இருப்பவரைப் பற்றி உலகுக்கு கூறு! உண்மை சத்தியம் - மெய் இது ஒன்றே என உரக்கக் கூறு! உறுதியாக கூறு! இதுவே ஞானதானம்!

"ஈயென்று நானொருவரிடம் நின்று கேளாத இயல்பும், என்னிடம் ஈது இடு என்ற போது அவர்க்கு இல்லையென்று சொல்லாமல் இடுகின்ற திறமும்". அருள்வாய் இறைவா என நமது வள்ளலார் இறைவனிடம் வேண்டுகிறார். நாம் யாரிடமும் சென்று பிச்சை கேட்கக் கூடாது! என்னிடம் யாராவது எதையாவது கேட்டால் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கின்ற வள்ளல் தன்மையை தந்தருள்வாய் என்கிறார். இந்த உலகில் உள்ள மனிதர்களுக்கு எதைக் கொடுத்தாலும் திருப்தி ஏற்படாது. இன்னும் இன்னும் என்றுதான் மனம் அலைபாயும். இப்படிப்பட்ட இந்த உலக மாந்தர்களுக்கு மனமற்று உயிரை உணர ஞானதானம் செய்வதே சிறந்ததாகும். சாகாநிலை பெற உலகருக்கு தேவை ஞானதானம்!

"ஐயம்இட்டுஉண்!" என்ற ஔவையார் "ஏற்பது இகழ்ச்சி!" என்று கூறியிருக்கிறாரே! பிச்சைகொடு இல்லாதவர்களுக்கு. பிச்சை வாங்குவது கேவலமல்லவா? அப்படி எல்லோரும் எண்ணி பிச்சை வாங்க இந்த உலகில் யாருமே இல்லாமல் ஆகவேண்டும்! தானம் வாங்க ஆளில்லை யென்றால் தானம் யாருக்கு கொடுப்பது?! இராமராஜ்ஜியத்தில் பிச்சையெடுப்பார் இல்லையாம்? அதனால் தானம் கொடுப்பாருமில்லாது போயிற்று! அந்த இராமராஜ்ஜியம் மீண்டும் இந்த உலகில் மலர வேண்டும்! இறைவா அருள்புரி! வள்ளல் பெருமானே காத்தருளுங்கள்! ஆனால் எப்போதும் யாருக்கும் செய்ய முடிந்த தானம் ஞானதானம்! மனிதப்பிறவி மோட்சகதி பெற வேண்டுமானால் மெய்ஞ் ஞான சற்குருவிடம் இருந்து ஞானதானம் பெறவேண்டும்! இது அவசியம்!

**இவ்வுலகில் மனிதனாய் பிறந்தால் கண்டிப்பாக ஞானதானம் பெற்றேயாக வேண்டும்!**

பிச்சையாரிடம் பெறுவது? உள்ளவரிடமிருந்து தானே பெற முடியும்! நமக்கு இறைவன் போட்ட பிச்சை இந்த மனிதப்பிறவி!! பேரொளியான அவர் போட்ட பிச்சைதான் சிற்றொளியான நம் உயிர்!! பிச்சைக்காரனான நான், எனக்கு உயிர்தந்த உடல்

தந்த வாழ்வுதந்த அந்த இறைவனுக்கு அடிமையல்லவா? அவன் திருவடியே சரணம் என அடைக்கலமாக வேண்டாமா?!

நாம் பிச்சை பெற்றது இறைவனிடம்! நல்லதொரு மெய்ஞ்ஞான சற்குருமூலம் ஞானதானம் பெற்று உண்மை உணர்ந்து நலம் பெற வேண்டும். அனைவருக்கும் ஞானதானம் வழங்கவேண்டும். ஒவ்வொருவரும் தன்னைத்தானே அறியவேண்டும். பிச்சாடனமூர்த்தியை அறிய உணர ஞானதானம் அவசியம் பெறவேண்டும்!

மெய்ஞ்ஞான சற்குரு வழியாக தெளிவு பெற உபதேசமும் அனுபவம் பெற தீட்சையும் பெற்று இந்த சாகாக்கல்வியை ஞானதானம் பெற்று தவம் செய்யவேண்டும்!சுருதி யுக்தி அனுபவம் இம்மூன்றுமே பூரணநிலையை கூட்டுவிக்கும்! ஞானதானம் பெற்று அதாவது தீட்சை பெற்று ஞானநூற்களை படித்து யுக்தியினால் தெளிந்து தவம் செய்து அனுபவங்கள் பெறவேண்டும்.

தவம் எப்படிச் செய்ய வேண்டும்? தவம் என்றால் மந்திர ஜபமல்ல! தவம் என்றால் பூஜை செய்வதோ யாகம் வளர்ப்பதோ அல்ல! தவம் என்றால் பிராணாயாமமோ வாசி யோகமோ இன்னபிற யோகங்களோ அல்ல! தவம் என்றால் உடலை வருத்தி செய்யும் எந்த செயலுமல்ல!

**தவம் என்றால், நான் யார்? என அறிய உணர மெய்ஞ்ஞான சற்குருவிடம் ஞானதானம் பெற்று கேட்டதை உணர்ந்து அறிய சும்மா இருந்து செய்யும் பயிற்சியே! முயற்சியே!**

இறைவன் நமது உடலில் கண்ணில் மணியில் மத்தியில் ஊசிமுனையளவு துவாரத்தின் உள்ளே ஊசிமுனையளவு ஒளியாக துலங்குகிறார்! ஊசிமுனையளவு துவாரத்தை மெல்லிய ஜவ்வு ஒன்று மூடியுள்ளது! இதைத்தான் வள்ளலார் திரை என்றார்! இதுவே நமது மும்மலத்தால் ஆனது! மொத்தம் 7 நிலையாக 7 திரையாக சூட்சுமமாக விளங்குகிறது! உள்ளே இருக்குது ஜோதி! வடலூரில் சத்திய ஞானசபை ஜோதி தரிசனம் இந்த தத்துவ அமைப்பிலே தான் கட்டப்பட்டது! காட்டப்படுகிறது! “சத்திய ஞான சபையை என்னுள் கண்டனன் சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்” என்று வள்ளல் பெருமான் கூறியதை கவனிக்கவும்!

குருதீட்சை பெற்று நம் கண்ணில் உணர்வு பெற்று அதை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து அதனால் ஏற்படும் நெகிழ்ச்சியில் திழைத்து திழைத்து சும்மா இருக்க இருக்க நம் கண்களில் கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்து கொட்டும்

அருவியென!! இங்ஙனம் தவம் தொடர்ந்தால் பலவித அனுபவங்கள் நாம் பெறலாம்! நமது வள்ளல்பெருமான் ஞானசரியையில் கூறியபடி நாம் இங்ஙனம் தவம் செய்து வந்தால் பெறலாம் நல்ல வரமே! மரணமிலா பெருவாழ்வே! பிறவாப்பெருநிலை! அருட்பெருஞ்ஜோதி இறைவனோடு அந்த பரமாத்மாவோடு பேரொளியோடு நாமும் ஒளியாகி இணையலாம்! ஐக்கியமாகலாம்! பேரின்பம் பெறலாம்!

இதுவே தவம்! இதனால் கிட்டுவதே ஞானம்! இன்றைய உலகில் ஏராளமான குருமார்கள் தோன்றி ஏராளமான பயிற்சிகளை சொல்லிக் கொடுக்கின்றனர். இவை எவையும் ஞானத்தை தராது! ஒரு சில பயிற்சிகளால் உடல்நலம் பெறலாம். ஒரு சில சித்துக்கள் கைக்கூடலாம் இதெல்லாம் ஒன்றும் ஞானம் இல்லை! ஞானம் தன்னை உணர்தலே!

“தவம் செய்வார்க்கு அவம் ஒரு நாளுமில்லை” ஔவை பிராட்டிதானே தானமும் தவமும் செய்ய சொன்னது! மனிதா தவம் செய்தால் உனக்கு ஒரு துன்பமும் கிடையாது என உறுதி கூறுகிறார்! ஞானதானம் குருவிடமிருந்து பெறு. நீ மற்றவர்க்கு ஞானதானம் செய். குரு மொழி தட்டாது தவம் செய் உன் பெரும்துன்பமான வினைகூட உன்னை பாதிக்காது!

தவம் செய்ய நாம் காட்டுக்கு போக வேண்டியதில்லை! குடும்பத்தை விட்டு ஓட வேண்டியதில்லை! காவி உடுத்து தாடி முடி வளர்த்து உருத்திராட்சம் அணிந்து உலகம் சுற்ற வேண்டியதில்லை! நமது உடலை வெறுத்து வருத்தாது துன்புறுத்தாது இருக்க வேண்டும்! உணவை வெறுத்து இலை உணவாகவேண்டாம்! கடுமையான ஜப தபங்கள் வேண்டாம்! சுருக்கமாக கூறுவதனால் ஒன்றும் செய்ய வேண்டாம்! சும்மா இருந்தாலே போதும்!

திருமணம் ஞானம் பெற ஒரு தடையல்ல! இப்போது நீங்கள் எப்படி இருக்கின்றீர்களோ, என்ன செய்து கொண்டிருக்கின்றீர்களோ அப்படியே இருங்கள். இந்த தவத்தை மட்டும் விடாது தொடர்ந்து 30 நிமிடமோ ஒரு மணிநேரமோ செய்தால் போதுமானது! நீதி நேர்மை ஒழுக்கமே உங்கள் தவத்தை சிறப்பிக்கும்! வேஷம் போடாதீர்கள்! எந்த தீய பழக்கவழக்கமும் இல்லாது பார்த்துக் கொள்ளுங்கள்! குடும்ப பொறுப்பு உணர்ந்து உங்கள் கடமையை சரிவரச் செய்யுங்கள்! இறைவன் உங்களுள் இருக்கிறானல்லவா? வெளியே கோயில், குளங்களில், மலைகளில் தேடாதீர்!

அருளே வடிவான இறைவன் அரவணைத்து காப்பான்! எந்த ஆபத்தும் வராமல் தடுப்பான்! எந்த நிலையிலும் கைவிடவேமாட்டான்! தாயுமானவனாகி அரவணைத்து, தந்தையுமாகி பராமரித்து,

குருவுமாகி நம்மை கண்காணித்து நானே நீ என்று அறிவித்து அடைவித்து அகங்குளிர்வித்து அன்போடு தன்னோடு சேர்த்துக் கொள்வான்!

தவம் செய்வோர் சுத்த சைவ உணவையே உட்கொள்ள வேண்டும். நல்லாரை காண்பது நமக்கு நன்மை பயக்கும்! நல்லார் உபதேசம் கேட்பது நமக்கு பல தெளிவுகள் பெற ஏதுவாகும்! நல்லோரை சார்ந்து அவரோடு செயல்படுதல் மேலும் மேலும் புண்ணியம் கிட்டிட வழியாகும்!

அதிகாலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து தவம்செய்தல் உத்தமம்! இந்த ஞான சாதனையை எப்பொழுதும் எந்த ஒரு இடத்திலிருந்தும் செய்யலாம்! ஆத்ம சாதகன் - தவம் செய்பவன் பட்டினி கிடக்கக் கூடாது. சிறிதளவாவது உணவு உட்கொள்ள வேண்டும். பிரச்சனைகளிலிருந்து விடுபடுவது உத்தமம். இனிய சொற்களையே அளந்து பேசு. பேசாதிருந்தும் பழகு!

இதுவா தவம் என எண்ணாதீர்கள்? கண்ணை விழித்துக் கொண்டு உணர்வை நிறுத்திக்கொண்டு சும்மா இருப்பது மட்டும் தவமல்ல! இதுபோன்று நம் அன்றாட வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொன்றும் தவமாக வேண்டும்! நீதியாக நெறியாக ஒழுக்கமாக பண்போடு பக்தியோடு அன்போடு பணிவோடு தெளிவோடு நிதானமாக ஒவ்வொரு செயலிலும் பார்த்துப் பார்த்து செயல்பட வேண்டும்! அப்போதுதான் தவம் விரைவில் கைக்கூடும்! தவம் மட்டும் 1 மணிநேரம் செய்தால் போதாது? 24 மணி நேரமும் நம் ஒவ்வொரு சொல்லும் செயலும் தவத்தை பிரதிபலிப்பதாய் விளங்க வேண்டும்! அப்படிப்பட்டவனே ஆத்மசாதகன்!


தவம் சித்திக்க வேண்டும் இறைவனோடு ஐக்கியமாக வேண்டும் நான் யார் என்பதை உணரவேண்டும் என்ற ஆன்ம பசியோடு நாம் இருக்கவேண்டும்! தவம் செய்வது நமக்காக! முதலில் இது சுயநலந்தான்! நாம் பலம் பெற்றாலே பலன் பெற்றாலே உலகுக்கு கொடுக்கமுடியும்! எனவே முதலில் நாம் பண்படவேண்டும். அதற்கு நாம் ஒரு நிலையடைவது வரைக்கும் எதிலும் சிக்காமல் தனித்திருத்தல் அவசியம்! தவம் செய்வது ஞானம் பெற! கண்ணை மூடிக்கொண்டு மனம்போன போக்கிலே போகாதே! போலிகளை கண்டு ஏமாறாதே. நன்றாக கண்ணை திறந்து பார்! எது சரி என சிந்தித்து சுருதி யுக்தி அனுபவம் அறிந்து விழித்திருப்பாயாக! விழிப்புணர்வுடன் இருப்பாயாக! கண்ணை திறந்தே தவம் செய்வாயாக!

விழித்திருந்து தியானியுங்கள் பரமபிதா நம்மோடு என்றே

எல்லா ஞானியும் கூறுவர்! கண்ணை மூடினான் என்றால் செத்தான் என்றே பொருள். தூங்காது, மயங்காது விழிப்புணர்வுடன் இருப்பவனே மரணத்தை வெல்வான்! விழிப்புணர்வு என்றால், ஜாக்கிரதையாக என்றும் விழியில் புணர்வுடன் அதாவது கண்விழியினுள் உள்ள ஜோதியுடன் சேர்தல் என்று மெய்ப்பொருள் விளக்கம் கூறுவர்! நாம் செய்யும் தவம் விழியில்புணர்வு! ஞானம் பெற விழிப்புணர்வு மிக அவசியம்!

நாம் புராணங்களிலும் கதைகளிலும் ரிஷிகள் செய்த பலவித தவங்களை கேள்விப்பட்டிருக்கிறோம். அசுரர்கள் செய்த கொடுந்தவம் பற்றியும் படித்திருக்கிறோம். இதையெல்லாம் பார்த்துத்தான் உலகில் பலருக்கும் அவ நம்பிக்கை பிறந்தது! அடடா! இந்த மாதிரியெல்லாம் நாம் தவம் செய்ய முடியாது! கடவுளை அடைய இப்படியெல்லாம் தவமா செய்யவேண்டும் நம்மால் முடியாதப்பா! அதற்காக ஒரு ஜன்மம் எடுத்துத்தான் வரவேண்டும் என்று அலுத்துக் கொள்வர். இன்றும் இவ்வாறே எண்ணிலடங்காதவர்கள் இருக்கின்றனர்.

உலக மக்களே அவ நம்பிக்கை வேண்டாம்! உலகை உய்விக்க மெய்ஞ்ஞானிகள் பலர் தோன்றியுள்ளனர்! ஞான நூற்கள் பல தந்துள்ளனர்! கவலை வேண்டாம். காலம் செய்த கோலம் ஞானம் பலகாலமாக மறைக்கப்பட்டுவிட்டது? காரியவாதிகள் சூழ்ச்சி! ஞான சூரியன் திருவருட் பிரகாசவள்ளலார் பிறந்தார்! மடமை என்னும் காரிருள், அஞ்ஞானம் மக்களை விட்டு விலக கடைவிரித்தார்!! கடைக்கண் காட்டினார் வள்ளலார்! ஞானம் துலங்க ஆரம்பித்தது! துளிர்விட ஆரம்பித்தது! வந்தார்! சொன்னார்! செய்தார்! வென்றார்! பெற்றார் ஒளியுடல்!! தான் பெற்ற ஞானத்தை மரணமிலா

www.vallalyaar.com

**"உலகின் முதல் மெய்ஞ் ஞான இணைய தளம்"!**

**விழித்துப்பாருங்கள்!**
**விழிப்பிணர்வு பெறுவீர்!**

# சூ. B§ÏÚ

“இந்தியாவில் குருமார்களுக்கு பஞ்சமேயில்லை நல்ல ஒரு சீடனை பார்ப்பது அரிது” என்று சுவாமி விவேகானந்தர் கூறுவார்!

ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்றொரு மகான் இருந்தார் என்பது அவரின் உத்தம சீடன் சுவாமி விவேகானந்தரால் உலகம் அறிந்தது!

ஸ்ரீ ஆதி சங்கரருக்கு பத்மபாதர் என்றொரு உத்தம சீடன் வாய்த்தான்! ஸ்ரீ ராகவேந்திரருக்கு அப்பண்ணா என்றொரு உத்தம சீடன் வாய்த்தான்!

எண்ணிலடங்கா குருமார்கள்! எண்ணிலடங்கா சீடர்கள்! உத்தம ஞானிகள் பலர்! உத்தம சீடர்கள் குறைவே! இந்திய புண்ணிய பூமியில் ஞானிகளுக்குதான் பஞ்சமேயில்லை! இந்திய மண்ணிலே ஞானமல்லவா விழைகிறது!

ஞான பூமியாம் இந்தியாவில் பிறந்த, மிகப் பெரிய ஞானாசிரியர் புத்தரை பின்பற்றுவோரே இன்று உலகில் அதிகம்!

சனாதன தர்மநெறி துலங்கும் நம் இந்தியாவில் அவதரித்த எண்ணிலா ஞானியரில் புத்தரும் ஒருவரே!

காலங்காலமாக யுகம் யுகமாக இங்கே இருக்கும் சனாதன தர்மநெறியே,எண்ணிலா ஞானிகள் இங்கே உருவாக காரணமாயிற்று!

உலகுக்கே ஞானத்தை வழங்கிய சனாதன தர்மம் - மனிதன் மனிதனாக வாழும் கலை யாரால் உருவானது தெரியுமா?

இறைவனால்!! நாமுய்ய அருளப்பட்டதே இந்த சனாதன தர்மம்! அதுவே சன்மார்க்க பெருநெறி! வாழ்க்கை நெறி!

புராதன காலத்தில் பிரம்ம புத்திரர்கள் நால்வர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர்கள் பூரணத்துவம் பெறாமல் தவித்தனர்.

எல்லாம் வல்லவனை, எங்கும் நிறைந்தவனை, ஆதி

அந்தமில்லா அருட் பெருஞ்ஜோதியினை, பரம் பொருளை, பிரபஞ் சகர்த்தாவை, ஒவ்வொரு அணுவுக்குள்ளும் அணுவாக ஒளிர்பவனை அறியவொண்ணாமல் வழிதெரியாமல் பரிதவித்தனர்.

வேண்டினர், பரமாத்மனிடம், மனம் உருகினர் மன்பதை உய்ய வழியை நாடி! தவித்தனர் செய்வதறியாமல்!

சனகாதிகளின் தவிப்பை உணர்ந்த சர்வேஸ்வரன் அருள்புரிய திருஉளம் கொண்டார்! சனகாதி முனிவர்கள் முன் தோன்றினார்! திடீரென்று தங்கள் முன் ஓர் உருவம் தோன்றியதை கண்டு திகைத்து நின்றனர்!

பரம்பொருளை - கடவுளைக் காண விரும்பினோமே! இப்படி ஒரு உருவம் முன் இருக்கிறதே! ஏன்? யார்? எதற்கு? என மிகவும் ஆச்சர்யத்துடன் தங்களுக்குள் வினவிக் கொண்டனர்!

கல்வி கேள்விகளில் கற்றுத் தேர்ந்த சனகாதிகள் ஒருவாறு யூகித்து அறிந்தனர்! நாம் கடவுளை காண விரும்பினோம், திடீரென தோன்றிய இவ்வுருவம் ஒன்றும் கூறாமல் நம்முன் இருக்கிறதே! கடவுளை காண அந்த கடவுளே நமக்கு வழிகாட்டத்தான் என யூகித்து அறிந்தனர்!!

கடவுளை! எல்லாம் கடந்தவனை அவ்வளவு எளிதில் காணமுடியுமா என்ன? நாம் அதற்கு பக்குவமாக இருக்க வேண்டாமா? சனகாதிகளுக்கே இறைவன் நேரடியாக அருள்புரியவில்லை!?

சர்வமும் அறிந்த சனகாதி முனிவர்களுக்கு, அதன் மூலம் உலகுக்கே, இறைவன் முதன்முதலாய் குருவாக வந்து காட்சி கொடுத்து மோன உபதேசம் அருளினான்!

தன்னை அடைய குரு உபதேசம் பெற வேண்டியதன் முக்கியத்துவத்தை தானே முதல் குருவாய் அமர்ந்து காட்டினார்! ஆதிகுருவான இறைவனே சனகாதி முனிவர்களுக்காக தட்சிணா மூர்த்தியாக காட்சி கொடுத்தார்! அதன்மூலம் மீட்சி பெற வழிகாட்டினார்!

தங்கள்முன், பேசாமல், பாதி கண் திறந்தநிலையில், இடக்காலை மடக்கி, வலக்காலை ஊன்றி அசுரனை மிதித்த நிலையில் கல்லால் மரத்தின்கீழ் அமர்ந்திருக்கும் பகவானை கண்டனர்! ஒரு கையில் தீயும் ஒருகையில் உடுக்கையும் ஒரு கையில் வேதமும் ஒருகை சின்முத்திரையுடன் அருளும் நிலையும் இருக்கக் கண்டனர். நாற்கரமும் கண்டனர்.

சடா மகுட சிரசின் வலப்பக்கம் சூரியன் இடப்பக்கம் சந்திர

பிறையுடன், சாந்தம் தவழும் புன்னகை தவழும் அழகிய முகமும் கண்டனர். யோசித்தனர் - யூகித்தனர் ஒருவாறு உண்மையை உணர்ந்து கொண்டனர்! அது என்ன?

ஆதி குருவாகி இறைவனே தட்சிணாமூர்த்தியாக தங்கள் முன் தோன்றியுள்ளது! தென் திசையான எமனிடமிருந்து மீள, மரணமிலாத பேரின்ப பெருவாழ்வு பெற தென்திசை நோக்கியிருக்கும் ஆதிகுரு தட்சிணாமூர்த்தியை நோக்கி நாம் வடதிசை நோக்கி அமரவேண்டும்! தட்சிண பாகத்தை தென்திசையை நோக்கி அமர்ந்த மூர்த்தம் ஆனதால் தட்சிணாமூர்த்தி என்றனர் சனகாதி முனிவர்கள்!

ஆதிகுரு தட்சிணாமூர்த்தி ஒன்றும் பேசாமல் இருப்பதால் நாமும் ஒன்றும் பேசாது மௌனமாக இருக்க வேண்டும் என்று உணர்ந்தனர்! இதுவே மோன நிலை!

இறைவன், தான் தீயை சுமந்து தான் தீயாக அக்னியாக ஜோதி ஸ்வரூபமாக இருப்பதை உணர்த்துகிறார்! அது மட்டுமல்ல ஒளியான அவனோடு உடுக்கை ஒலி, ஓங்காரம் நாதமும் இருப்பதாகவும் உணர்த்துகிறார்! அதாவது ஒளியும் ஒலியுமாக விந்து நாதமாக இருப்பவன்!

மற்றொரு கையிலுள்ள வேதங்கள் சொல்வது இதைத்தான்! தட்சிணாமூர்த்தியான இறைவனை பற்றியும், அவனை அடைய வழியுமே! நான்காவது கை அருள்பொழியும் சின்முத்திரை தாங்கிய கை!

ஒலி சேர்ந்த ஒளியாக பரம்பொருள் சின்முத்திரையில் உள்ளார்! சின்முத்திரை அறிந்து உணர்ந்து தவம் செய்க!

கண்ணை திறந்து பேசாது “சும்மா இரு” என்பதுவே தட்சிணாமூர்த்தி ஆதிகுரு சொல்லாமல் உணர்த்திய ஞான இரகசியம்!!

வேதங்கள் சொல்லும் மறைபொருள், ஞான இரகசியம்! பரம்பொருளான இறைவன் பேரொளியானவர்! ஒளியோடு ஒலியும் இணைந்துள்ளது! அது மனித தேகத்தில் சின்முத்திரையில் உள்ளது. சின்முத்திரை பிடித்தால் சும்மா இருந்தால் நாம் இறைவனை அடையலாம்! சனகாதி முனிவர்கள் அறிந்தனர்! உணர்ந்தனர்! அடைந்தனர்! உய்தனர்!

இதில் முக்கியமானது சின்முத்திரை! இதுதான்- மனிததேகத்தில் இறைவன் துலங்கும் இடம் ! நாம் தவம் செய்ய வேண்டிய ஸ்தலம்! சும்மா இருக்க வேண்டிய இடம்! இறைவன் தன் வலதுகை

பெருவிரலின் மத்தியிலுள்ள கோடை ஆள்காட்டிவிரலால் மடக்கி தொட்டு, மற்ற மூன்று விரலை நீட்டியபடி அருள்பாலிக்கிறார்!

சபரிமலையிலே ஐயப்பனும் இந்த சின்முத்திரை காட்டியே அருள்புரிகிறார்! சின்முத்திரை வைத்தபடியே கையை புரட்டிப்பார்த்தால் ஆள்காட்டிவிரலும் கட்டைவிரலும் கூடிய பகுதியானது நமது கண்போலவே தோன்றும்!! கட்டை விரலின் மேல் நுனியிலிருந்து ஆள்காட்டி விரல் தொட்டுள்ளகோடு வரையிலுள்ள இடமே நம் கண்அளவு!! ஆக சின்முத்திரை என்பது “கண்” என்பதை மறைமுகமாக பரிபாஷையாக சூட்சுமமாக யூகித்து அறிந்து கொள்ள வேண்டியே சொல்லப்பட்டது! உணர்த்தப்பட்டது!

கடோபநிஷத்தில் நசிகேதன், மனித தேகத்தில் இறைவன் இருக்கும் இடம் யாது என எமதர்மராஜனிடம் வினவ, அதற்கு எமன், இறைவன் கட்டைவிரல் அளவான இடத்தில் புகை இல்லாத ஜோதியாக விளங்குகிறான் என்று பதில் கூறுகிறார்! இதுவே ஆதாரம் இதற்கு!

நம் உடலில் கட்டைவிரல் அளவான இடம் என பரிபாஷையாக கூறப்பட்டது நமது கண்ணையே!! பேரொளியான அருட்பெருஞ் ஜோதியான இறைவன் புகையில்லாத ஜோதி! நம் கண்மணி உள் இருக்கும் சுயம் ஜோதி! எவ்வளவு பெரிய ஞான இரகசியம்! இது தெரிந்தால்தானே தட்சிணாமூர்த்தி உணர்த்தியது போல கண்ணை திறந்து சும்மா இருந்து தவம் செய்ய முடியும்?!

உலகர் அறிய உரைக்கின்றேன். கண்ணே சரீரத்தின் விளக்காயிருக்கின்றது! நம் கண்மணி உள் ஒளியே சாட்சாத் இறைவன்! கண்ணில் துலங்கும் ஒளியை நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து விழித்திருந்து சும்மா இருந்து தவம் செய்பவனே காண்பான் உணர்வான் கடவுளை! சின்முத்திரை எது என அறிந்து அங்கே உணர்வால் சும்மா இருப்பவனே விழித்திருப்பவனே இறைவனை அடையும் பாக்கியம் பெறுவான்!

“பெருவிரலை பற்றிக்கொள் பேரின்பத்தே!” என சித்தர் பெருமக்களும் உபதேசிக்கின்றனர்! சின்முத்திரை காட்டி சுட்டி உணர்த்தியதும் கண்! பெருவிரலை பிடித்துகொள் பேரின்பம் வேண்டுமாயின் எனச் சொன்னதும் கண்ணே! பெருவிரல் மேல் அளவான கண்ணைப் பற்றிக் கொள்ளே என்றுதான் பரிபாஷையாக சொன்னார்கள் பரதேசிகள்!

தட்சிணாமூர்த்தியாக ஆதிகுருவாகி இறைவன் உணர்த்திய உபதேசம், கண்ணில் ஒளியை உணர்ந்து விழித்து சும்மா இரு

என்பதுவே! “சும்மா இரு” என்பதுவே! சனகாதிமுனிவர்கள் அதிபுத்திசாலிகள் ஆனதால் அறிவால் அறிந்தனர்! ஆதிகுரு சொல்லாமல் சொன்னதால், அறிவித்ததால் அறிந்து உணர்ந்தனர்! இதுவே உண்மை! சத்தியம் என வேதமும் சித்தர்களும் பற்பல ஞானியரும் பறைசாற்றுகின்றனர்!

அடியேன் அறிந்த அதி உன்னத ஞான இரகசியங்களை எல்லோரும் அறிய எல்லாவற்றையும் நூலாக வெளியிட்டுள்ளேன்!

தட்சிணாமூர்த்தியாக ஆதிகுரு வந்து சும்மா இருக்கத்தான் உணர்த்தினார் என்பதை இன்னுமொரு ஞானியின் கூற்றால் நிரூபிக்கலாம்! சனகாதிமுனிவர்க்கு மோனமாக உணர்த்திய ஆதிகுரு, அருணகிரிநாதருக்கு, முருகன் ஓர் அந்தணர் வடிவாக வந்து “சும்மா இரு” என்று சொல்லியே காத்தார்!?

இறைவன் நேரடியாக அருளவில்லை. குருவாக உபதேசித்து அருளினார்! தன்னை அடைய குரு மிக மிக மிக முக்கியம் என்பதை உணர்த்தி, “சும்மா இரு” எனவும் உபதேசிக்கிறார்! சும்மா இருந்து விழித்திருந்து தவம் செய்து பக்குவம் பெற்றவர்க்கே இறைவன் தன்னை காட்டியும் உணர்த்தியும் அரவணைத்தும் ஆட்கொள்கிறார்! இதுவே ஞானநிலை! மோனநிலை!

திருப்புகழில் அருணகிரிநாதர், “சும்மா இரு சொல்லற” என முருகப்பெருமான் தனக்கு குருவாய் வந்து அருளிய திறத்தை வியந்து கூறுகிறார்!

ஆதிகுரு தட்சிணாமூர்த்தியே! அது சாட்சாத் இறைவனே! “சும்மா இரு” “விழித்திரு” இதுவே அவர் உபதேசம்! இதுவே ஞானம்!

ஆதிகுரு உணர்த்தியதையே வேதமும் உபநிடதமும் இதுவரை இவ்வுலகில் தோன்றிய அனைத்து ஞானிகளும் சித்தர் பெருமக்களும் வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினரும் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளும் உரைத்துள்ளனர்! உபதேசித்துள்ளனர்! சுட்டிக்காட்டியுள்ளனர்! பல விதமாக பரிபாஷையாக பகர்ந்தனர்! சூட்சுமம் என்றும் இரகசியம் என்றும் உரைத்ததும் இது ஒன்று பற்றியே!

பேரொளியான இறைவன் சின்ன ஒளியாக துலங்குவது நம் கண்ணில்! விழித்திருந்து சும்மா இருந்தால் கிட்டும் பேரின்பம்

எல்லாம் கற்றாலும் ஞானம் தகுந்த குருவிடம்தான்

கற்கவேண்டும்! எல்லாம் கற்றாலும் அது கைமண் அளவே என்பதை அறிவதே அறிவு! “குருவின்றி கூடவொண்ணாதே!” “தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது!” “காட்டும் குருவின்றி காணவொண்ணாதே!” “குருவில்லா வித்தை பாழ்!” “குரு பார்க்க கோடிவினை தீரும்!” “குரு பிரம்மா குரு விஷ்ணு, குரு மகேஸ்வரா குரு சாட்சாத் பரப்பிரம்மம்!” மாதா பிதா குரு பின்னரே தெய்வம்!”

இப்படி குருவின் பெருமையை கூறிக்கொண்டே போகலாம்! குரு எவ்வளவு அவசியம் என்பதை நமக்கு உணர்த்தவே, இறைவனே முதன்முதலாக ஆதிகுருவாக தட்சிணாமூர்த்தியாக தோன்றி ஞானஉபதேசம் உணர்த்தி அருளினார்! எல்லோருக்கும் குரு, மிக மிக அவசியம் தேவை!

ஆதிகுரு தட்சிணாமூர்த்தி உணர்த்திய “சும்மா இருக்கும்” தந்திரத்தை விட இறைவனை அடைய வேறு வழி இருக்கவா போகிறது? இல்லை!

ஆதிகாலம் தொட்டு இன்றுவரை எல்லா ஞானிகளும் திரும்பத் திரும்ப இதைத்தான் பலப்பல விதமாக கூறியிருக்கின்றனர். வேறொன்றுமில்லை!

அந்த பழைய பரமசிவந்தானே ஆதிகுரு! புதிதாய் சொல்ல என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை! வார்த்தை பேதம்! மொழி பேதம்!

ஒன்றானவன் கடவுள் என்றால் நாம் ஒன்றவேண்டியது கண் ஒளியில்! சும்மா இருந்து விழித்திருந்து தவம் செய்வது ஒன்று தான் வழி! பலவழிகள் என சொல்வதெல்லாம் முடிவில் இவ்வழிக்குத் தான் வந்தாக வேண்டும்! ஏனெனில் இறைவன் இருக்கும் வீட்டின் வாசல் அல்லவா இவ்வழி! நம் விழி! விழி! விழி! தூங்காதே விழி! சோம்பாதே விழி! விழி!

எவன் ஒருவன் எந்தவித பேதமுமின்றி இறைவனே ஆதிகுரு தட்சிணாமூர்த்தி என்றும் அவரின் உபதேசம் சும்மா இருப்பதுவே என்றும் அறிகிறானோ உணர்கிறானோ தப்பித்தான்! சாட்சாத் குருவே பரப்பிரம்மம் என தன் குருவை கருதி, செயல்படுகிறானோ! அவன் தப்பிப்பான்!

“நானுரைக்கும்வார்த்தையெல்லாம்நாயகன் தன் வார்த்தையன்றோ” என்று திருவருட்பிரகாச வள்ளலார்இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்! நான் ஒன்றும் சொல்லவில்லை! என்னுள்ளிருந்து உரைப்பது எல்லாம்

இறைவனே! என்றல்லவா கூறி பணிகிறார்! அப்படியாயின் வள்ளலார் கூறியது ஆதிகுருவாம் இறைவன் கூறியதுதானே!

வள்ளலார் மட்டுமல்ல! எல்லா ஞானிகள் வாயிலாக வந்த எல்லா ஞான உபதேசமும் ஆதிகுரு இறைவன் உரைத்ததல்லாமல் வேறொன்றுமில்லையே! எல்லாம் அவன் செயல்!

இன்றைய உலகில் பெரும்பாலானோர் ஆதிகுருவை தெரியாமல், ஆதிகுருவாம் தட்சிணாமூர்த்தி தான் இறைவனே! என உணராமல், அவரை அடைய மெய்ப்பொருளே - கண்ணே - ஒளியே ஒரே வழி இதுவே அவர் உபதேசம் என அறியாமல் எங்கெங்கோ போய் நிலை தடுமாறுகின்றனர்!

இந்த உண்மையை, இது மட்டுமே சத்தியம் என்பதை அறிந்து உணர்ந்த சிலரும் இரகசியம் என மறைத்து உலகுக்கு நல்லதை சொல்லாமல் பாவத்தை சேர்த்துக் கொண்டனர்.

நாங்கள் கூறுகிறோம் வாருங்கள் உலக மக்களே! வழிவழியாக வந்து வள்ளல் பெருமான் உணர்த்தியதை அடியேன் உங்களுக்கு விழி! விழி! என உபதேசிக்கிறேன்! உணர்த்துகிறேன்! உலகோரே வாரீர்! உன்னதமான ஞானபாதையில் பீடுநடைபோடலாம்! வாரீர்!

விழிதான் ஞானம் பெற ஒரேவழி என்பதை உணர்வீர்! விழித்திருந்து தவம் செய்வது ஒன்றே நம் தவம் என்பதையும் உணர்வீர்! விழி! விழி!

இன்றைய உலகில் ஜாதகம் பார்க்கும் பலர் குருபெயர்ச்சி பற்றி கூறி குழப்புகிறார்கள்! ஜாதகத்தில் உள்ளது நவக்கிரகங்கள்! அதில் உள்ளது குருக்கிரகம் - பிரகஸ்பதி - தேவகுரு! இந்த குருதான், குருப்பெயர்ச்சி அடைவது! தட்சிணாமூர்த்தியல்ல! குருப்பெயர்ச்சி என சொல்லிக்கொண்டு பிரகஸ்பதிக்கு செய்ய வேண்டிய பூஜை வழிபாடுகளை தட்சிணாமூர்த்திக்கு செய்கின்றனர். நன்றாக புரிந்து கொள்ளுங்கள் நவக்கிரகத்தில் ஒன்றான பிரகஸ்பதி - குரு வேறு! ஆதிகுரு தட்சிணாமூர்த்தி வேறு! ஆதிகுரு தட்சிணாமூர்த்தி தான் ஞானகுரு! ஆதிகுரு தட்சிணாமூர்த்தி உணர்த்தியதே ஞானம்! நவக்கிரகத்தில் ஒன்றான குருவல்ல தட்சிணாமூர்த்தி!?

ஆதி குருவாம் தட்சிணாமூர்த்தி உணர்த்திய சும்மா இருந்து தவம் செய்து இறைவனை அடையும் உபாயத்தை, ஏதாவதொரு குருமூலம் உபதேசம் பெற்று அறிந்து தீட்சை பெற்று உணர்ந்து தவம் செய்பவனே ஞானம் பெற்று அந்த இறைவனை அடைவான்!! இந்த ஆதிகுரு சுட்டிக்காட்டிய விழி வழி தவம் செய்பவரின் பலப்பல பிறவிகளில் செய்த கோடிவினைகளையும் இந்த ஆதிகுரு

- இறைவன் பார்த்தால்தான் தீரும்! ஆதிகுரு நம்முள் இருந்து பார்க்கணும்! தட்சிணாமூர்த்தி அருள் கிட்டணும்! அப்போதுதான் நம் வினையாவும் நீங்கி நாம் இனிபிறவா பெருநிலை பெறலாம்! வினைதீர ஆதிகுருவை நாடு! ஆதிகுருவை அறிய நீ இங்கே ஒரு சற்குருவை பணிந்து உபதேசம் தீட்சை பெறு! தவம் செய்! "தவம் செய்வார்க்கு அவம் ஒருநாளுமில்லை!" ஔவையார் கூறிய அமுதமொழி இது!

இயேசுபெருமான் கூறிய பிதா! நபிபெருமானர் கூறிய அல்லா! வள்ளல்பெருமான் கூறிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்தானே! ஒளியான தேவனை, நம் கண் ஒளியை பெருக்கி நாமும் ஒளிமயமாகி ஒளியிலே சஞ்சரித்துத்தானே அடைய முடியும்! உலகம் ஒத்துக்கொண்ட உண்மை இதுதானே! அறியாதவர்கள் அறிந்து உணர வேண்டிய ஒரே விஷயமும் இதுதானே!!

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
 ஆறங்கம் முதல்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
 பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுவாய் இருந்ததனை
 இருந்தபடி இருந்து காட்டியே
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
 நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்".

திருவிளையாடற்புராணம் இயற்றிய, உலகுக்கு அருளிய கச்சியப்ப சிவாச்சாரியார், ஆதிகுருவாய் வந்துதித்த தட்சிணாமூர்த்தியின் தோற்றத்தை இந்த ஒரே பாடலில் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார்!! ஞானம் விளங்க இந்த ஒரு பாடலே போதுமானது!

தமிழகத்திலுள்ள பெரும்பாலான கோயில்களில் தெற்குபக்கம், தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி - ஆதிகுரு வடிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது சிறப்பு!

ஒரு வேதனையான விஷயம்! என்னவென்றால்? நவக்கிரக குருவுக்கு சார்த்தவேண்டிய கொண்டைகடலை மாலையும் மஞ்சள் வஸ்திரமும் ஆதிகுரு தட்சிணாமூர்த்திக்கு போய்க்கொண்டிருக்கிறது!? ஜோதிடம் அறியா பரிகார பூஜை சக்கரவர்த்திகளின் அறியாமை, மடமை பாமரமக்கள் பெருவாரியானவர்கள் ஏமாந்து போகிறார்கள்! உண்மையை உணருங்கள்! நவக்கிரஹ குருவல்ல ஆதிகுரு!

அறிந்தோ அறியாமலோ ஆதிகுருவை, தட்சிணாமூர்த்தியை பணிகிறார்களே! சந்தோசப்பட வேண்டியதுதான்! அறியாது செய்த

தவறானாலும் தண்டனை உண்டல்லவா? அது போல அறியாது செய்த பூஜைக்கும் அந்த ஆதி குருவானவர் ஆண்டவன் நிச்சயம் அருள்புரிவார்! அவர்களுக்கு வாழ்வில் ஏதாவதொரு குரு கிடைக்க அருள்பாலிப்பார்!

ஏதாவதொரு குரு கிடைத்தாலும் போதும்!? சீடன் உத்தமனாய் இருந்தால்போதும்! குரு எப்படியிருந்தாலும் பரவாயில்லை! அவர் குருதான்! சீடன் உத்தமனாயிருந்தால் அந்த ஆதிகுரு தட்சிணாமூர்த்தி அந்த நல்ல சீடனுக்கு வேறு நல்ல குருவை காட்டி இரட்சிப்பார்! தீய ஒரு குருவை நாடிடும் சீடனின் நம்பிக்கையை ஆதிகுரு தட்சிணாமூர்த்தி சற்குருவை, நல்ல ஒரு குருவை பணியச்செய்து தடுத்தாட்க்கொள்வார்! தயாபெருந்தகை! ஞான சொரூபம்! ஆதிகுரு!

மானசீகமாக குருவை வைத்து ஒப்பற்ற வில்லாளியான ஏகலைவனைப் போன்ற சீடன் வேறு யாருண்டு உலகில்?!

கொடையாளி கர்ணனும் குருவைப் போற்றிய உத்தம சீடனே! அவதாரம் என்று வணங்கக் கூடிய இராமன், கண்ணன் நமக்கெல்லாம் குருவின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டி தாமும் குருவை பணிந்து போற்றியவர்கள் தானே!!

அக்னியால் ஞானஸ்நானம் வழங்கிய இயேசுபெருமான் ஜலத்தினால் ஞானஸ்நானம் வழங்கிய யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றவர் அல்லவா!

இப்படி இதுவரை இந்த உலகில் தோன்றிய அனைத்து ஞானிகளும் மகான்களும் கூட ஏதாவதொரு குருவை பணிந்தவர்களே! ஆக குரு வேண்டும்! நல்ல குரு வேண்டும்! ஆதி குருவை அறியவேண்டும்!

“குருவின் அடிபணிந்து கூடுவ தல்லார்க்கு
அருவாய் நிற்கும் சிவம்”

ஔவையார் அருளிய ஔவைக்குறள் இது! ஆதி குருவை அவர் வரவை, அவர் உணர்த்தியதை தெளிவாக உபதேசிக்கும் ஒரு சற்குரு நமக்கு கிடைத்துவிட்டால்! நாமே பாக்கியசாலி! ஆதிகுரு உணர்த்தியதை, முருகப்பெருமான் அதை ஆமோதிப்பது போல “சும்மா இரு” என உரைத்ததை நமக்கு உணர்த்திக்காட்டி விழி! விழி என வழிகாட்டுபவரே மெய்ஞ்ஞானகுரு! அப்படிப்பட்ட

# எ. CWôUeL ÑYôªLs

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் 1823-அக்டோபர் ஐந்தாம் நாள் இந்த உலகம் உய்ய தோன்றினார் வெள்ளாடை துறவி இராமலிங்க சுவாமிகள்.

வடலூருக்கருகே மருதூர் எனும் சிற்றூரில் இராமையாபிள்ளை சின்னம்மையார் தம்பதியினரின் கடைக்குட்டியே ஞான சூரியனான நம் இராமலிங்க சுவாமிகள்.

ஆறுமாதக் கைக்குழந்தையான நம் இராமலிங்க சுவாமிகளுடன் பெற்றோர் சிதம்பர தரிசனம் கண்டு சிதம்பர இரகசியம் கண்ணுற்றபோது கலகலவென சிரித்து அன்றே ஞான இரகசியம் தில்லை அம்பலவாணனால் உணரப் பெற்றார் நம் இராமலிங்க சுவாமிகள். விளையும் பயிர் முளையிலேயே தெரிந்தது. பின்னாளில் வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலல்லவா!

தாயின் அரவணைப்பில் தவழ்ந்தார் நம் வள்ளலார். தந்தை காலமானதால் பராமரிப்பு இன்றி தவித்தது குடும்பம். தமையனார் ஆதரிக்க இளந்தளிராக துளிர்விட்டு வளர்ந்தார் வள்ளலார். தக்க பருவம் வந்து தமையனார் கல்வி பயில அனுப்பிவைக்க, வள்ளலாரின் மனம் நாடியது கந்தகோட்டத்து முருகப்பெருமானையே!

பின்னர் பள்ளி பாடம் பயிலாது தகப்பன் சாமி முருகப் பெருமானிடம் புள்ளிப்படிப்பையே கற்றார் நம் வள்ளல்பெருமான். தனித்திருக்க விரும்பி கூட்டத்தை தவிர்த்து கந்த கோட்டத்துக்கே அடிக்கடி போகலானார். வாட்டத்தை போக்கி இராமலிங்கருக்கு தன் மேல் நாட்டத்தை உருவாக்கினான் கந்தகோட்டத்து முருகப்பெருமான்!

திரு அருள்பாடல் உரையாற்றச் சென்ற தமையனாரின் உடன் சென்று வந்தார். தமையனாரிடம் அனுமதி பெற்று தன்வீட்டு மாடியிலேயே இருந்து, தன் சிரமேலேயே துலங்கும் சண்முக கடவுளை தவறாது தினமும் ஆராதித்து வந்தார். ஆருமறியாமலே! ஆனந்த கண்ணீர் அருவி பொங்கியது. அருள்பெற்றார்! அகக் கண்ணாடியிலே அந்த ஆறுமுக ஒளிக்கடவுளை கண்டு! சதாகாலமும் சண்முகனிடமே சரணமானார் நம் இராமலிங்க சுவாமிகள்.

தமையனால் முடியாத ஒரு தருணம் பெரிய புராண

சொற்பெருக்காற்றி திரண்ட உள்ளங்களை உவகையில் ஆழ்த்தினார் நம் இராமலிங்க சுவாமிகள். ஊர் அறிந்தது உத்தம வள்ளலை! பின்னரே வீடும் அறிந்தது! பல ஊரும் அறியலாயினர் நம் இராமலிங்க சுவாமிகளை!

ஏகாந்தத்தை நாடி தனித்திருக்க விரும்பி திருவொற்றியூர் தியாகேசனை, தாய் வடிவுடையம்மனை நாடி தினமும் சென்று வந்தார்! பல மைல் தூரம் நடந்தே! பசித்தே! பாடினார். பரவினார். பார்த்து மகிழ்ந்தார்.

நம் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் தன் 9 வயதில் கந்தகோட்டம் முருகப்பெருமானிடம் ஆரம்பித்த கானமழை கவிமழை தொடர்ந்தது, பெருகியது, திருவொற்றியூரிலும் தணிகை நாதனிடமும். பாலகன் பாடிய மழலையா அது! பாவலரும் வியக்கும் ஒப்பற்ற ஞானப்பாட்டு!

பாடிப்பாடி மகிழ்ந்தார் மயங்கினார்! பலகாலும் அர்ச்சகர்கள் மயக்கம் தெளிவித்து புண்ணியம் பெற்றனர். மாதேவன் ஒற்றிக் கண்ணுடையான் வந்தார்! தந்தார்! திருவடி உபதேசமுமே! நான் மட்டும் அருளமாட்டேனா என்று வடிவுடையம்மையும் அமுதூட்டி அருள்மழை பொழிந்தாள்! வள்ளலுக்கு!

பக்கத்திலிருந்த பட்டினத்தார் சமாதிக்கும் சென்று பலகாலும் தவம் புரிந்தார். பார்த்தருளாமல் இருப்பாரோ பட்டினத்து பிள்ளையுமே!

அலைந்து திரிந்து உள்ளும் புறம்பும் உடையவனை கண்டு உவப்பு மேலிட உள்ளம் மகிழ்ந்தார் நம் இராமலிங்க சுவாமிகள்.

அறிவால் அறிந்தனர் பலர் நம் அன்புமயமான இராமலிங்கரை! அறிவாரே அறிந்தனர் அவரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டை!

வற்புறுத்தி திருமணம் என்னும் சடங்கு நடத்தினர் உறவோர். ஆண்டவனை தவிர எமக்கு உறவு யாருமில்லை என்று கூறி அன்றே துறந்தார் வீட்டையுமே! வீடுபேறு பெறவேண்டியே!

விரைந்து விரைந்து சாதனைகள் பல புரிந்து ஏறாநிலை மிசை ஏறி ஞானக்கனி பறித்தார் புசித்தார் எல்லோருக்கும் கிடைக்க எப்போதும் உரைத்தே வந்தார்.

சிறுவயது முதலே பொருளிலே ஒரு சிறிதும் பற்றில்லாத நம் பெருமான் இறைவனின் அருள் ஒன்றையே நாடினார். தில்லை நடராஜன் ஆறுமாத கைக்குழந்தை பருவத்திலேயே ஆட்க் கொண்டவனல்லவா இப்போதும் அரவணைத்து காத்தான். அற்புத

ஆற்றல் சித்தி எல்லாம் நல்கி பாரறியச் செய்தான்! தன் பிள்ளை என நம் இராமலிங்க சுவாமிகளை கூறினார் பகவான்!

கூடியது கூட்டம்! அகத்தீயால் அவர் அருள்மழையால் ஈர்க்கப்பட்டனர் அகிலத்தோர்! நித்தமும் உபதேசம்! நேசக்கரம் நீட்டி பாசத்துடன் பாரோரை அழைத்தார்! மரணமிலா பெருவாழ்வு பெற வாருங்கள் வடலூருக்கு என்றே! சேர்ந்தது நல் அடியார் கூட்டம். சேர்த்தனர் புண்ணியம் நம் அடிகளாரின் அருட்பணியில் பங்குகொண்டு! பார்த்தார் பசித்தோர் முகம்! வயிற்றுப் பசி நீங்க உருவாக்கினார் சத்திய தருமச்சாலை!

ஆன்ம பசியுள்ளோருக்காகவும் ஒரு சத்திய ஞானசபையை அமைத்தார். அறிவுப் பசியுள்ளோர் சத்திய ஞான சபைக்கு வருக எனக்கூறி, அறிவு பசியுள்ளோர் அறிய உணர அங்கே ஜோதி தரிசனமும் காட்டுவித்தார்!

ஆன்மீக புரட்சி உதயமாயிற்று! பக்தியில் ஊறிய பாமரரும் பாரும் அறிய பகவான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்தான் என பறைசாற்றினார்! அந்த பரம்பொருள் எங்கோ எட்டாத தூரத்தில் வானத்தில் இல்லை?! நம் உடலில் எட்டாக இரண்டாக மெய்ப்பொருளாக நம் இரு கண்களில் ஒளியாக துலங்குகிறான் என்று ஞான இரகசியங்களை போட்டுடைத்தார்! பாரும் வியந்தது பார்த்தவர்களும் அதிசயித்து போற்றி பணிந்தனர். பாரும் உமக்குள்ளே கண்வழியே பாரும் உமக்குள்ளே என பாரையே கூவி அழைத்தார்!

வள்ளலாரின் அருட்கொடையை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை! உலகில் இதுகாறும் ஆண்டவனைத்தான் அருள்வள்ளல் என ஞானிகள் போற்றி வந்தனர்! ஆனால் திருவருட் பிரகாச வள்ளலார் என இராமலிங்க சுவாமிகளுக்கு அவர் சீடர்களால் வழங்கப்பட்ட இந்த பட்டமே பொருத்தமானது!

திருவருட் பிரகாச வள்ளல் - யார்? எனும் சிதம்பரம் இராமலிங்கம் என்று தம்மை தாழ்த்திக்கொண்ட பண்பின் சிகரம்! பணிவின் நாயகன்! வள்ளல்! நம் இராமலிங்க சுவாமிகளுக்கு ஈடு இணை பாரிலில்லை!

ஞானிகள் எல்லோரும் கூறிய ஞானத்தை பாமர மக்கள் எல்லோரும் அறிய எளிமையாக்கிய பாவேந்தன்! பண் மழை பொழிந்த பாவலன்! உருவாக்கிய திரு அருட்பா ஒரு திகட்டாத தெள்ளமுது! தீந்தமிழ் பாக்களால் ஆன தேவாமிர்தம்! பாமரர் நாவில் திருவுலா வரும் திருவருள் பேழை! தித்திக்கும் அருள் பாக்கள்!

இதுவரை இந்த உலகில் தோன்றிய அனைத்து ஞானநூற்களின் சாறு திருவருட்பாவாகும்! திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய திருவருட்பாக்களே ஞானப்பேழை என்றால் மிகையல்ல! சாத்திரத்தில் சிறந்த தமிழ் மந்திரமாம் திருமந்திரத்தையும் தோத்திரத்தில் சிறந்த திருவாசகத்தையும் ஒன்றாக்கி பாத்திரத்தில் சிறந்ததாக உருவாக்கி தந்துள்ளார் திரு அருட்பாவை நம் இராமலிங்க சுவாமிகள்!

தாயின் கருவில் இருந்தபோது ஏற்பட்ட அனுபவங்களையும் கூறும் ஞானி நம் இராமலிங்க சுவாமிகள்! தரணியில் எல்லா உயிர்களும் அடையும் வாட்டத்தை கண்டு வருந்திய வள்ளல்! வாடிய பயிரைக் கண்டும் வாடிய இரக்கத்தின் திருஉருவம் நம் இராமலிங்க சுவாமிகள்! உலகுயிர் அனைத்திலும் உயிராக இருக்கும் இறைவனை, அதனை அறியாமல் உணராமல் இருக்கும் உயிர்களை, மக்களைக் கண்டு மனம் மிகவாடினார். எல்லா உயிரும் இன்புற இறைவனிடம் மன்றாடினார். அதுவே அவரின் பிராத்தனையாயிற்று!

பன்னிரண்டாம் வயதில் ஞான சாதனை புரியத் தொடங்கி பலகாலும் தீவிர சாதனைபயின்றார்!ஒவ்வோர் நிலையாக உயர்ந்தார். முடிந்த முடிபான பூரண ஞானமும் கைக்கூடியது நம் இராமலிங்க சுவாமிகளுக்கு ஒளியுடல் பெற்றார். மரணமிலா பெருவாழ்வு பெற்றார்! 1865-இல் உலகம் உய்ய நம் பெருமானால் ஏற்படுத்தப்பட்டதுதான் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம். இதன் கொள்கை, கடவுள் ஒருவரே! அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்! பேரொளியாக விளங்கும் அவரை நம் கண்மணி ஒளியை பெருக்கி தவம் செய்து அடையலாம் என்றும் பறைசாற்றினார்! சிறுதெய்வ வழிபாடு கூடவே கூடாது! அதனினும் முக்கியமானது அந்த தெய்வங்கள் பெயரால் உயிர்ப்பலி கூடவே கூடாது என்றும் பறைசாற்றினார்! இறைவனை பரம்பொருளை அடையும் வழி அன்பு ஒன்றே! எல்லா உயிரையும் தம் உயிர்போல் நேசிக்க வேண்டும்!

சாதி, மத, மொழி, இன முதலிய எவ்வித வேறுபாடும் யாரிடமும் பார்க்க லாகாது! உலகில் உள்ள அனைவரும் இறைவனின் பிள்ளைகளே! நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே! ஞானநிலையில் நாம் அனைவரும் ஆன்மாக்களே! மூட பழக்கவழக்கங்களை விட்டொழிக்க வேண்டும்! எந்நிகழ்ச்சியானாலும் எல்லோருக்கும் அன்னதானம் செய்வதே சிறந்ததாகும்! மனிதகுலம் நல்ல நெறியோடு, பண்போடு, கலாச்சாரத்தோடு, அன்போடு, சைவ உணவு உட்கொள்பவராக, பக்தியோடு ஊர் போற்ற, பார் போற்ற வாழவேண்டும்!

இன்றைய உலகில் பல்லாயிரக்கணக்கான ஊர்களில், வெளிநாடுகளிலும் கூட சன்மார்க்க சங்கங்கள் செயல்பட்டு வருகிறது! “ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்! சன்மார்க்கிகளின் தாரகமந்திரம் இதுவே!

ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றால் சாப்பாடு போடுவதல்ல! இராமலிங்க சுவாமிகள் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று தனியொரு நூலே செய்துள்ளார்! படியுங்கள், பண்படுங்கள்! நம் ஜீவனை காக்க, நம் உயிர் பிரியாது இருக்க, அதாவது மரணமிலாத நிலை அடைய, நாம் இருக்கவேண்டிய ஒழுக்கநெறி பற்றியும் செய்ய வேண்டிய ஞான தவநிலையை பற்றியுமே சொல்லியிருக்கிறார். இதுதான் ஜீவகாருண்ய ஒழுக்கம்! இங்ஙனம் ஒவ்வொருவரும் தன் ஜீவாத்மாவை அறிந்து தம் உடலில் கண்ணில் மணியில் ஒளியாக துலங்குவதை உணர்ந்து தவம் செய்து பெறுவதே மோட்சம்! பேரின்பம்! இந்த பரிபூரண நிலையை மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் பெறவேண்டும்! அதற்குத்தான் அரிதினும் அரிதான இந்த மானிட பிறவியை ஆண்டவன் நமக்கு அருளியுள்ளார் என்பதை உணருங்கள்! வாருங்கள் வடலூருக்கு! என்று ஞான இரகசியத்தை பாரறியச் செய்து கூவி அழைக்கவும் செய்கிறார் வள்ளல் பெருமான்!

“சாகாதவனே சன்மார்க்கி!” இதுவே சத்தியம்! இறந்து போகிறவன் “இறவா நிலையை” “ஞான நிலையை” உணராதவன்தானே!? அறியாததினால் தானே! “சாவாதிருந்திட பால் கற! சிரமேல் இருக்கும் பால்கற” என சித்தர் பெருமான் பாடுகிறார். நம் தலையில் உள்ள கண்ஒளியை பெருக்கினால் அது உள் ஊடுருவி போய் சிரசுக்கு போகும். அந்நிலையில் அங்கிருக்கும் அமுதம் வழிந்து நம் தொண்டையில் சொட்டும்! இதுவே அமுதம் என்பர். “மங்கா பால் உண்டு மலைமேல் இருப்பவருக்கு” என குதம்பை சித்தரும் பாடியது இந்த அமுதம் சொட்டும் நிலை பற்றியேயாகும்! இதைத்தானே வள்ளல் பெருமானும் சொல்கிறார்!?

அன்னதானம் செய்யுங்கள் அதுமட்டும் போதாது! ஞானதானமும் செய்யவேண்டும். இதுவே மோட்சத்தை தரும்! இறைவன் மெய்பொருளாக நம் உடலிலே இருப்பதையும் அதை அடைய கண் ஒளி மூலம் தவம் செய்ய வேண்டும் என்பதையும் எல்லோருக்கும் உரைப்பதே ஞானதானம்!

ஔவையார் கூறிய, “தானமும் தவமும் தான் செய்தல் அரிதே” என்பது இந்த ஞானத்தை கூறுவதும் மெய்ப்பொருள் உணர்ந்து தவம் செய்வதுமேயாகும்! இதைத்தான் வள்ளலார், “ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்” என்றார்.

இதையேதான் மகாகவி பாரதியாரும், "அன்னசத்திரம் ஆயிரம் கட்டலைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் நன்று" என்று அழகாக கூறியிருக்கிறார்!

ஒரு அன்னசத்திரம் கட்டி ஆயிரம்பேர்களுக்கு அன்னதானம் கொடுக்கலாம்! ஆயிரம் அன்னசத்திரம் கட்டினால் பத்துலட்சம் பேர்க்கு அன்னதானம் கொடுக்கலாமல்லவா? இது ஒன்றும் பெரிய விஷயமல்ல!? இதைவிட மேலானது என்ன தெரியுமா? பல லட்சம் பேர்களுக்கு அன்னதானம் கொடுப்பதை விட ஒருவனுக்கு "எழுத்தறிவித்தல்" உத்தமமான காரியம்!

எது எழுத்து? அ, உ ஆகிய எட்டும் இரண்டுமே எழுத்து - ஞான எழுத்தாம்! இந்த ஞான எழுத்தை அறிவிப்பதே, ஞானதானம் செய்வதே அரிதினும் அரிதாம்! மனிதனாக பிறப்பது, நல்லபடியாக பிறப்பது, ஞானக்கல்வி அறிவது, உணர்வது, ஞானதானம் செய்வது, ஞானதவம் செய்வது இதைத்தான் அரிதினும் அரிதாக சொல்கின்றனர் எல்லா ஞானிகளும்! ஞானதானமே, அரிதினும் அரிதான, அதி உன்னதமான, தானத்தில் சிறந்த அன்னதானத்தை விடவும் சிறந்தது ஆகும்!

வயிற்றுப்பசி என வந்தவர் யாராயினும் அவர்க்கு புசி, புசி என உணவு கொடுப்பது நமது பண்பாடல்லவா?! தமிழர் பண்பாடு விருந்தோம்பல் தானே! அதைவிட பெரியதே ஞானதானம்! எல்லா ஞானிகளும் செய்வது!? அடியேன் கண்மணி மாலை தொடங்கி இந்த சாகாக்கல்வி வரை 24 நூற்களிலும் ஞானதானமே செய்துள்ளேன்! அடியேனுக்கு வள்ளல் இராமலிங்க சுவாமிகள் இட்ட பிச்சை! எல்லோருக்கும் ஞானதானம் செய் என அவர் இட்ட பணி! அவரருளால் செவ்வனே நடைபெறுகிறது!

நமது ஞானவள்ளல் இராமலிங்க சுவாமிகள் 1867-இல் வடலூரில் உலக மக்களுக்காக, ஞானம் விளங்க, சாப்பாடு ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக, சத்திய தர்மச் சாலையை நிறுவி, வரும் அன்பர்கள் எல்லோருக்கும் உணவு வழங்கும் அறச்சாலையை தோற்றுவித்து அருளினார்கள்! சாப்பாடு மட்டும் போடவில்லை!? தினமும் மாலை வருவோர்க்கெல்லாம் திகட்டாத செவியுணவும் வழங்கினார்கள்! கானமழையோடு அது ஞானமழையாகவும் வந்த ஆன்மாக்களுக்கு அமுதானது!

உபதேசம் புரிந்த வள்ளல் உலகருக்கு செயல்முறை விளக்கம் காட்டியருளினார்! இதுதான் ஒப்பற்ற செயலாகும்! 1872-ல் சத்திய ஞான சபையை கட்டி, அங்கே மனிதர்களின் அக அனுபவத்தை விளக்கும் விதமாக ஜோதி தரிசனமும் காட்டுவித்தார்!! அருள்வள்ளல்

இராமலிங்க சுவாமிகளின் சொல்லும் செயலும் ஞானமே! வாழ்க்கையே ஞானம்! ஞானத்தை தவிர வேறொன்றுமில்லை!

நம் வள்ளல் பெருமான் செய்த அற்புதங்களைப் பற்றி நிறைய கூறலாம்! அவர் ஆடியது அஷ்டமாசித்திகள் மட்டுமல்ல, “ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழுகோடியும்” இறைவன் அருளால் பெற்று சித்தருக்கெல்லாம் பெரும் சித்தராகவும், ஞானிகளுக்கெல்லாம் பெரும் ஞானியாகவும் விளங்கினார்? இறைவனே தன் பிள்ளை என அழைத்து கணையாளி, கங்கணம், செங்கோல் மகுடம் எல்லாம் அளித்து உலகம் தழைக்கச் செய்ய அருள் பாலித்தார் என்றால் வள்ளல் இராமலிங்கரின் மகத்துவத்தை என்னென்பது!?

“சத்திய ஞான சபையை என்னுள் கண்டனன்”.”சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்”. “பெற்றேன் என்றும் இறவாமை”. “தேவா நின் பேரருளை என்போல் பெற்றவர் எவ்வுலகில் யாருளர்”. “எல்லா உலகமும் என் வசம் ஆயின”. “அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு” என்று திருஅருட்பாவில் அவரின் உன்னத நிலையை அவரே மொழிந்துள்ளார். இது போதாதா? அவர் பெருமை கூறிட!!

வள்ளலார், ஒழிவிலொடுக்கம் (1851), தொண்டமண்டல சதகம் (1856), சின்மய தீபிகை (1857) என மூன்று நூற்களை பதிப்பித்தார்! பதிப்பாசிரியர் ஆனார்.

வள்ளலார், மனுமுறை கண்ட வாசகம் (1854) ஜீவகாருண்ய ஒழுக்கம் (1879) என இரு உரைநடை நூற்களை எழுதியுள்ளார்! நூலாசிரியர் ஆனார்!

வள்ளலார் அருளிய பாடல்கள் சுமார் ஆறாயிரம் பாடல்கள் ஆறு திருமுறைகளாக பல காலமாக வெளிவந்தது! ஒப்பற்ற கவியரசர் ஆனார்! 1867-ல் முதன்முதலாக வெளிவந்தது.

வள்ளலார் முதன்முதலாக திருக்குறள் வகுப்பு நடத்தினார்கள்! வள்ளலார் முதன்முதலாக முதியோர் கல்வியை ஏற்படுத்தினார்கள்! வள்ளலார் தமிழ்நாட்டின் முதல் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் ஆவார்!

சன்மார்க்கத்திற்கென்று சங்கம் நிறுவிய வள்ளல் பெருமான், ஒரு சன்மார்க்க கொடியும் உருவாக்கினார்! சத்திய தருமசாலை, சத்திய ஞானசபை, திருஅருட்பா மூன்றும் சன்மார்க்க விளக்கம்!

வள்ளல் அருளிய திருஅருட்பா சன்மார்க்க உபதேசம்! வள்ளலார் உருவாக்கிய சத்திய ஞானசபை சன்மார்க்க அனுபவ விளக்கம்! வள்ளலார் தான் அடைந்த மரணமிலா பெருவாழ்வையே

எல்லோரும் அறிய அருளினார்!

கருங்குழியிலே தண்ணீர் விளக்கெரித்த வள்ளல்பெருமான், தம் உடலில் கருங்குழியான கண் ஒளியை பெருக்க கண்ணீர் பெருக தவம் இயற்றினார்! அடைந்தார் பேரானந்த பரவச நிலை! நாமும் அந்த ஆனந்த அனுபவம் பெற அருட்பாவை அருளியிருக்கிறார்!

இன்றோ, அருட்பாவை அறிபவர் ஆவலுறின் தடுத்தாட்கொண்டு அறிவுறுத்தி உணர்த்தி ஆன்மநேய ஒருமைப்பாடு உணர்வு பெற வைத்துவிடுவார்! வடலூரில் தொடங்கி, உடலூரின் மெய்ப்பொருள் விளக்கி என்றென்றும் காத்து, நாமும் ஞானம் பெற அருள்பவரே நம் வள்ளலார்!

ஞானாசிரியர் வள்ளல் பெருமான் பன்முக ஞானமும் பெற்ற பெரும் ஞான பண்டிதர் ஆவார்! நித்திய கருமவிதி ஆகார ஒழுக்கம் தவமுறை தியானம் இப்படி ஒரு மனிதனை புனிதனாக்க எல்லாவற்றையும் கூறி அருளிய அருள்ஞானி! அருள்வள்ளல்!

சமுதாய சீர்திருத்தவாதியும் ஆவார் நம் வள்ளல் பெருமான்! மூடபழக்க வழக்கங்களை அகற்ற அரும்பாடுபட்டார்! சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளை களைந்து சன்மார்க்க நெறி பரவிட பெரும்பாடுபட்டார்!

ஒப்பற்ற மகனாக விளங்கிய நம் இராமலிங்க சுவாமிகள் எளிமையாக வாழ்ந்தார். வெள்ளை ஆடையே அணிந்தார். எளிய உணவையே கொண்டார். எல்லா உயிர்களிடமும் அன்பு பாராட்டினார். அதையே எல்லோருக்கும் உபதேசித்தார்!

என்னை கும்பிடாதே! எல்லாம் வல்ல இறைவனையே வணங்குங்கள்! அவர் அருளை பெற்றுய்யவே இந்த மானுடப்பிறவி! நான் உங்களுக்கு அதற்கு உதவுகிறேன் என்றார் வள்ளல் பெருமான்!

எவ்வித பேதமும் யாரிடமும் காணலாகாது என்றுரைத்த நம் வள்ளல் இராமலிங்கர் உலகத்து மாந்தரை இரண்டாக பிரிக்கிறார்! அகவினத்தார், புறவினத்தார் என்று! தீய ஒழுக்கமும் புலைகொலை புரிவோரும் புறவினத்தார் அவர்களுக்கு இறைவனருள் ஒருபோதும் கிட்டாது!? நல்லொழுக்கசீலராய் ஞானதவம் செய்வோரே அகவினத்தார் ஆவர்! அவர்கள் இறையருள் பெற்று ஞானம் பெறுவர். மரணமிலா பெருவாழ்வு பெறுவர்!

புறவினத்தார் தீய ஒழுக்கத்தை, புலை கொலையை விட்டுவிட்டால்?! அவர்களும் அகவினத்தார் ஆகலாம் ஞானம் பெறலாம். குருவான வள்ளலார் மற்றும் ஞானிகள் அருளால்!

நேற்றுவரை நீ புறவினத்தானாக இருந்தாலும் பரவாயில்லை!?

இன்று முதல் அகவினத்தானாக மாறு!? ஞானம் பெறலாம்!! கொள்ளைக்காரன் மகரிஷி ஆனாரல்லவா? மாபெரும் காவியம் படைத்தாரல்லவா! காமாந்தகன் ஞானி ஆனானல்லவா? பல்லாயிரம் இறையருள் பாக்களை பாடி குருவாய் குகனை பெற்றாரல்லவா?! எனவே யாரும் வரலாம் சன்மார்க்கத்துக்கு! யாரும் பெறலாம் ஞானம்! அருள்தர, காப்பாற்ற ஞானிகள் பலர் காத்திருக்கிறார்கள்!! குறிப்பாக வள்ளல் இராமலிங்கர் வழிமேல் விழிவைத்து நம்மை எதிர்நோக்கி காத்திருக்கிறார்! விழியாகிய வழியை காட்டிட!

நமது வள்ளல் பெருமான், “நான் பெற்ற நெடும்பேற்றை ஓதிமுடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே” என்று இறைவனிடம் வேண்டுகிறார்! ஆம், வள்ளலார் பெற்ற பெருமைகள் அடைந்த உன்னத ஞானநிலைகள் சொல்லி மாளாது! எனக்கு கிடைத்த பெரும் ஞானநிலை எல்லா மக்களும் பெற அருள்புரி இறைவா என நமக்காக இறைவனிடம் வேண்டுகிறார்!

நமது வள்ளல் பெருமான் கற்றது எல்லாமே இறைவனிடமே! நமது வள்ளல் பெருமான் பெற்றது எல்லாமே இறைவனிடமே! நமது வள்ளல் பெருமான் உற்றது ஒன்றியது உறைந்தது இறைவனிடமே! இந்த ஞானப்பிள்ளையை பெற்றது இறைவன் தானே!

இப்பேர்ப்பட்ட ஞானியை, அவர் பாக்களை அறியாமையால் தூஷித்தனர் சிலர்! நீதிமன்றமும் போயினர்! நீதிமன்றத்திலோ நடந்தது அற்புதம்! தூஷித்தவர் உட்பட அனைவரும் எழுந்து நின்று வணங்கினர் நம் வெள்ளாடை துறவி, இறைமகன் திருவருட் பிரகாச வள்ளலாரை!! வழக்கை தொடுத்தவரே வணங்கி மரியாதை செய்யும் இவர் பாடல்கள் நிச்சயம் புனிதமானது தான் என்று நீதிபதி தீர்ப்பளித்து அவரும் வணங்கினார்? நம் வள்ளலாரை தூற்ற நினைத்து செய்த செயல் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றும் செயலாக மாறிவிட்டது இறைவன் அருளாலே!

ஆதி காலந்தொட்டு நல்லவரும் கெட்டவரும், அகவினத்தாரும் புறவினத்தாரும் இவ்வுலகில் இருந்து வருகின்றனர். புறவினத்தார் பெருகும்போது பூபாரம் குறைக்க அவதரிக்கிறார் ஆண்டவன்! நம்மை ஆண்டவன்! ஆண்டுகொண்டு இருப்பவன்!

திருஅருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் இறைவனால் உலகுக்கு அருளப்பட்ட ஒப்பற்ற ஞானி! தமது 51-வது வயதில் 30-1-1874-ல் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்திருமாளிகைளினுள் அருட்பெருஞ்ஜோதியாகினார்கள்!! தமது ஊன உடலே ஒளியுடலாகி முத்தேக சித்தியும் பெற்று பரம்பொருளின் பேரொளியோடு கலந்தார்கள்!!

மேட்டுக்குப்பம் சித்தி வளாக திருமாளிகையின் உள் புகுமுன்

கடைசியாக கூறிய உபதேசம், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து மெய்ப்பொருள் உணர்ந்து தவம் செய்க! நம் கண்மணி ஒளியாக திகழும் இறைவனை இடைவிடாது தவம் செய்க! “இப்போது யாம் இங்கிருக்கிறோம், இனி எல்லோர் உள்ளத்திலும் புகுந்துகொள்வோம்” என்று கூறியருளியுள்ளார்!!

இதுதான் முக்கியமான ஞானஇரகசியம்! மேட்டுக்குப்பம் சித்தி வளாக திருமாளிகையின் உள் சென்று திருக்காப்பிட்டுக் கொண்டு ஒளிமயமாகிவிட்ட வள்ளல் பெருமான் எப்படி? எல்லார் உள்ளத்திலும் கலப்பார்?! சிந்தியுங்கள்! யாராயினும் உலக மாந்தரே நீவிர் முதலில் அகவினத்தார் ஆகுங்கள்! மெய்ப்பொருள் உணர்ந்த ஒரு குருவை நாடுங்கள்! மெய்ப்பொருளை உபதேசமாகவும், உணர்ந்தும் தீட்சை பெறுவீர்களானால், நீங்கள் தீட்சை பெறும்போது மெய்ப்பொருள் வழி வள்ளலார் உங்கள் உள்ளத்தில் புகுந்து கொள்வார்!! நம்முள் வள்ளலார் வரவழிதான் தீட்சை! விழிவழி! மெய்ப்பொருள் உபதேசிக்கும் சற்குரு மூலமாக!!

இப்படியொரு புண்ணியம் நீங்கள் பெற வேண்டாமா? உங்களின் இப்பிறவி புனிதம் பெற வேண்டாமா? வாருங்கள் கன்னியாகுமரிக்கு, அடியேன் குருவாக இருந்து வள்ளலார் உங்களுள் பிரவேசிக்க, அருள்தர உபதேசம் தீட்சை தருகிறேன்! இப்படி சொல்ல வைத்ததும் வள்ளலாரே! இப்படி எழுத வைத்ததும் வள்ளலாரே! இப்படி உபதேசம் தீட்சை கொடுப்பதும் வள்ளலாரே!

எம்முள்ளிலிருந்து எம்மை ஆட்டுவிக்கிறார் வள்ளல் பெருமான்! நம்முள் தங்கஜோதியாக துலங்கும் இறைவனை காண கன்னியாகுமரிக்கு தங்கஜோதி ஞான சபைக்கு வாருங்கள்! வடலூரில் சத்திய ஞானசபையில் காட்டிய ஜோதி தரிசனத்தை உங்களுக்குள் காண கன்னியாகுமரிக்கு வாருங்கள்!

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் பேர் சொல்ல அடியேன் நாக்கு கோடி புண்ணியம் செய்திருக்கவேண்டும்!! ஞான சூரியன் வெள்ளாடைத் துறவி வள்ளல் பெருமான் புகழ்பாடி 24 நூற்கள் எழுதி வெளியிட அடியேன் கைகள் கோடி புண்ணியம் செய்திருக்கவேண்டும்!! மரணமிலா பெருவாழ்வை உலகருக்கு உரைத்திட்ட ஒப்பற்ற ஞானி, மகான், வழங்கிய தீட்சையை அடியேன் கண்வழி வழங்கிட பாக்கியம் பெற்ற இந்த பிறவி என்ன புண்ணியம் செய்ததோ?!!!

குருவாய் வந்து அருள்கிறார் வள்ளலாரே! பார்த்தால்! அறிந்தால்! உணர்ந்தால்! அவனே பெரும் பாக்கியசாலி! பரிபூரண அருள்பெறுவான்!

திருவருட்பிரகாச வள்ளலாரை என்னுள் புகவைத்தவர் திருச்சி ஞானசித்தர் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள்! அவர் சமாதியாகும் போது அடியேனை குருபீடமேற்றி விட்டார்! வள்ளல் பெருமான் பரிபூரணமாக அடியேனை ஆட்க்கொண்டு வினைமாற்றி, மனிதனாக்கி, குருவாக்கி அருள்புரிந்தார்! என்னே அவர்தம் கருணை உள்ளம்!

வள்ளலார் பெயர் சொன்னாலே புண்ணியம் கிட்டும்! வடலூர் வந்து ஜோதி தரிசனம் கண்டாலே ஞானம்கிட்டும்! திரு அருட்பா படித்தாலே இறைஅருள்கிட்டும்! தங்கஜோதி ஞானசபை - கன்னியாகுமரிக்கு வந்தாலே தீட்சை கிட்டும்! நமக்கு தீட்சை கிட்டினாலே, மெய்ப்பொருள் உபதேசம் அறிந்து உணர்ந்தாலே பேரின்பம்கிட்டும்! ஞானதானம் அவசியம் செய்யவேண்டும்! அகவினத்தார் ஆகுங்கள் சன்மார்க்க சங்கத்தவர்களே! அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரை அடையலாம் வாருங்கள்!

கடவுள் ஒருவரே என்றுரைத்த வள்ளலார் அவர் அருள்மயமானவர் பெரும்ஜோதி வடிவானவர். அவரின் கருணைக்கு அளவேயில்லை என்று கூறி இறைவனின் இயல்பை வடிவத்தை அருள்திறத்தையே மந்திரமாக்கி நமக்கு வழங்கியுள்ளார்கள்! அது,

**“அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**

**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி”**

என்பதாகும். மந்திரங்களுள் நான் காயத்ரி என பகவத்கீதையில் கண்ணபிரான் கூறுகிறாரல்லவா? அதன்பொருள், “எவ்வுலகும் நிறைந்த பேரொளியான இறைவனின் ஒளியை தியானிக்கிறேன்” என்பது தானே! சமஸ்கிருதத்தில் சொன்ன அது, வள்ளல் பெருமானால் மந்திரங்களுள் சிறந்ததாக மகாமந்திரமாக அருட்பெருஞ் ஜோதி மந்திரமாக தமிழில் அருளப்பட்டது! இந்த மகா மந்திரத்தில் இறைவனின் வடிவம் குணம் இயல்பு எல்லாம் வெளிப்பட்டுள்ளது! இதுவே ஒப்பற்ற மந்திரமாம்! வள்ளல்பெருமான் உலகுக்கு வழங்கிய அருட்கொடையுள் இதுவும் ஒன்று! சிறப்பானது!

“வினையே உடலாய் உருவாகி அதற்குள்ளே
விழியே துலங்கு தலமாகி ஒளிர்பவனே
மனையே நானாகி மாய்கிறேன் தினமுமே
மணவாளா சேர்த்தணைக்க லாகாதா

# அ. NôLôd Lp®

சாவை தவிர்த்திடும் வழி! முடியுமா? முடியும்! மரணம் அடையாமல் சமாதி ஆன மகான்கள் எத்தனை எத்தனையோபேர்கள்! ஸ்ரீ ராகவேந்திரர் ஒரு உதாரணம்! இன்னும் நமக்கு தெரிந்து பல்லாயிரக்கணக்கானவர்கள்! நமக்கு தெரியாமல் பலகோடிபேர்கள்! இதுதான் இந்தியா! ஞானபூமி!

சமாதியைவிட உயர்ந்த ஞானநிலை ஒளியாவது?! பத்திரகிரியார் திருவிடை மருதூரில் ஒளியாகி சிவத்தோடு கணப்பொழுதில் மறைந்தது! ஆண்டாள் ஒளியாகி ஸ்ரீரங்கத்தில் பெருமாளோடு ஐக்கியமானது! சிதம்பரத்திலே மணிவாசகர் தில்லை நடராஜனோடு ஒளியாகி கலந்தது! இது எல்லாவற்றையும் விட மேலானது, திருஞான சம்பந்தர் கல்யாணத்தில் வந்த அனைவருமே ஜோதியானது! கூண்டோடு கைலாசம்!

ஒளியுடல் பெற்றவர்கள் ஒருவரா இருவரா கோடிகோடி பேர்கள்!! நாமறிந்து போன நூற்றாண்டிலே 1874-ல் வடலூர் மேட்டுக்குப்பத்தில் ஒளியாகி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடன் இரண்டற கலந்தது நமது திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்.

அரிதான மானிட தேகம் பெற்றவர்கள் சரியைகிரியை யோகம் ஞானம் என்ற நான்கு நிலைகளில் சாதனைகள் புரிந்து இறைவனை அடைய வழிகாட்டுகிறது வேத புராண இதிகாச ஞானநூற்கள்! சரியை - பக்தியால் ஞானம் பெற பலப்பல ஜன்மம் ஆகலாம்! அதி தீவிர பக்தியால் ஞானம் விளங்கும்! பின்னரே முக்தி நிலை கூடும்! கிரியை - பூஜை - யாகம் செய்து ஞானம் பெறவும் பலப்பல ஜன்மம் ஆகலாம்! அதி தீவிர பூஜையால் ஞானம் விளங்கும்! பின்னரே மோட்சம் கிட்டும்!

யோகம் - பிராணாயாமம் வாசியோகம் செய்வதாலும் ஞானம் பெற பலப்பல ஜன்மம் ஆகலாம்! அது தீவிர யோக சாதனைகளால் ஞானம் விளங்கும். பின்னரே பேரின்பம் கிட்டும்! ஞானமே - நான் யார் என அறிய முயலும் முயற்சியே விரைவில் ஞானம் கிட்டிட வகை செய்யும்! அது தீவிர ஞான சாதனையால் இப்பிறவியிலேயே ஞானியாகலாம்! பின்னரென்ன இறவா பெருநிலைதான்! சாகா

நிலைதான்!

பக்தியால் கர்மத்தால் யோகத்தால் சாதனைகள் பலகாலும் செய்து, பல ஜென்மமாக செய்தும் ஞானம் கிட்டுவது கடினமே! இம்மூன்றும் முடிவில் ஞானத்திற்கே கொண்டு சேர்க்கும். பின்னரே, ஞான சாதனை செய்தே பேரின்பம் பெற முடியும்!

“மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக ஆடினவர்க்கு வார்த்தை சொல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே” என தாயுமான சுவாமிகள் கூறியதை சிந்தியுங்கள்! புண்ணிய ஸ்தலம் போய் வருபவர்கள், புண்ணிய கைங்கர்யங்கள் செய்பவர்கள், அன்னதானம் செய்பவர்கள், பரோபகாரிகள் இவர்களுக்கெல்லாம் இறைவன் முதலில் நல்ல ஒரு குருவைத்தான் காட்டுவார்! அந்த குருமூலமாக ஞானஉபதேசம் தீட்சை பெற்று ஞானதானம் ஞானதவம் செய்பவரே இறைவனை அடைவர். மரணமதை வெல்வர்! குரு பெற்றே, இறைவனை அடைய வழியான சாகாகல்வி கற்று தேர்ந்து தவம் செய்பவரே ஞானம் பெறுவர்!!

சுருங்ககூறின், எங்கு போனாலும் எதை செய்தாலும் முடிவில் சற்குரு பாதமே கதி என வந்து சரணடைந்தாலே ஞானம்! குருமூலம் சாகாக்கல்வி கற்றாலே கிட்டும் மோட்சம்!

ஆக, சாகாக்கல்வியை கற்க ஒரு சற்குருவேண்டும்! குருவேண்டும்! ஒரு மனிதன் பூரணமாக, ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாக ஞானம் பெற, சாவை வென்றிட, இனி பிறவாமல் இருக்க சாகாக்கல்வி கற்றே ஆகவேண்டும்! சற்குருதான் சாகாக்கல்வி கற்பிக்கும் ஆசான்!

ஆச்சாரியார் மூலம் கல்வி கற்று தவம் செய்பவனே முதலில் மனிதனாகிறான். மனித உடல் எடுத்தவனெல்லாம் மனிதனல்ல! வினைவழி பிறந்த மானுடன் மாயையால் உந்தப்பட்டு அலைகழிக்கப்பட்டு வாழ்க்கை சக்கரத்தில், சம்சார சாகரத்தில் சிக்கி விடுகிறான்! மீள்வது கடினமே! சற்குரு கிட்டும் வரையில்!

சாகாமல் என்றுமிருக்க பாடம் நடத்தி நம்மை பக்குவப்படுத்துவதே சற்குருவின் வேலை! சாகாக்கல்வி ஒன்றும் கடினமானதல்ல! பக்தியை விட ஞானமே எளிது! கர்மாவை விட ஞானமே எளிது! யோகத்தை விட ஞானமே எளிது! தகுந்த சற்குரு கிட்டவேண்டும்!

சாகாக்கல்வி எது என முதலில் நாம் அறிந்திருக்கவேண்டும்! இப்போதெல்லாம் இங்கே இறந்தவர்களைப் பற்றிய பத்திரிகை

விளம்பரத்தில் அவர்கள் சிவலோக பதவி அடைந்தார் என்றும் வைகுண்ட பதவி அடைந்தார் என்றும் போடுகிறார்கள்? இறந்தால் நரகமோ! சொர்க்கமோ! மீண்டும் பிறக்க வேண்டும்! இறந்தவர் மீண்டும் பிறப்பார்! இது சத்தியம்!

எல்லா மகான்களும் இறைவனிடம் பிறவா வரம்தா பிறவா வரம்தா எனறே வேண்டினர்! வள்ளலார் பார்த்தார்! சிந்தித்தார்! நான் தான் பிறந்துவிட்டேனே! இப்பிறப்பு முடிந்தால் தானே, இப்பிறப்பில் இறந்தால்தானே மீண்டும் பிறப்பேன்!

பிறந்த நமக்கு இறப்பு என்ற ஒன்று நிகழ்ந்தால் தானே மீண்டும் பிறக்கும் நிலை உருவாகும்! பிறந்த நமக்கு இறப்பு என்ற ஒன்று நிகழாவிட்டால்! பிறந்த நாம் சாகாமல் இருந்தால்! இனி பிறப்பை பற்றி சிந்திக்கவே வேண்டாம் அல்லவா! வள்ளலார் இதைத்தான் சிந்தித்தார். நாம் தான் பிறந்தாயிற்றே அடுத்து வர இருக்கும் இறப்பை தவிர்த்தாலே அதன் பின் வர இருக்கும் பிறப்பை தவிர்க்கலாம்!

மீண்டும் பிறவாமல் இருக்க வேண்டுமானால் இப்போது பிறந்த நாம் முதலில் இறவாமல் இருக்க வேண்டும்! சாகாமல் இருக்கவேண்டும்! அதற்கு வழி என்ன என பார்க்கவேண்டும்! சாகாக்கல்வி யார் சொல்லித் தருவார்கள் என தேடி கண்டுபிடிக்க வேண்டும். கல்வி கற்பிப்பவர் குருதானே! சாகாக்கல்வி கற்பிப்பவர் தான் சற்குரு! எல்லோரும் சற்குரு ஆக முடியாது!

மாதா பிதா இல்லாமல் யாரும் பிறப்பதில்லை! மாதாவும் பிதாவும் ஸ்தூல உடலைத்தான் தருகிறார்கள்! ஸ்தூல உடலினுள் உயிராக துலங்குபவன் தான் இறைவன்! அந்த இறைவனை காண, அடைய மாதாவும் பிதாவும் ஒன்றிணைந்தவரான குருவை நாம் அவசியம் பெற்றே ஆகவேண்டும்! சற்குரு மூலமாகவே உபதேசம் தீட்சை மூலமாகவே நாம் மீண்டும் பிறக்கிறோம்! செத்து பிறக்காமலிருக்க, சற்குரு தீட்சை மூலம், பிறந்த நாம், மீண்டும் பிறக்கிறோம்!

தூங்கிக்கிடந்த ஆத்மாவை தட்டி எழுப்பி, நம்மை நாம் உணர வழிகாட்டுபவரே, விழிகாட்டி இறைவனோடு சேர்ப்பவரே சற்குரு! ஞானகுரு! மாதா, பிதா, இருவருமான குரு, பின்னரே இறைவன்! அம்மையப்பனான குருவை பெற்றவனே பாக்கியவான்! அவரே சாகாக்கல்வி கற்பிக்கும் ஒப்பற்ற ஆசான்!

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே”

திருமந்திரமே உலகத்துக்கே வழிகாட்டும் தமிழ் வேதமாகும்! நமது உடலாகிய ஆலயத்துள், கருவறையில் குடியிருக்கும் உயிரே சிவலிங்கம்! நம் ஐம்புலன்களையும் இணைத்து ஒளியை பெருக்கி, தவம் செய்து உடலாகிய கோவிலில் உயிராகிய இறைவனை காணலாம்!

“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கு உபாயம் அறிந்து
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”

எவ்வளவு பெரிய உண்மையை மிக எளிமையாக திருமந்திரம் கூறுகிறது பாருங்கள்! உயிர் ஒளி ஆற்றலை தவம் செய்து பெருக்கி நம் உடலைப் பேணிவளர்த்தால் உடலும் அழியாது, உயிரும் ஒளி மிகுந்து பேரொளியான இறைவனை அடையும்!

“உடம்பினை பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட ஈசனை தேடு”

ஔவை குறளிலேயும் உடம்பின் மகத்துவத்தை தெளிவாக கூறுவார் ஔவையார்! எல்லாமான இறைவன் நம் உடம்பில் கண்ணில் மணியில் ஒளியாக துலங்குவதை குரு உபதேசம் மூலம் அறிந்து குரு தீட்சை மூலம் உணர்ந்து தவம் செய்பவனே ஞானம் பெறுவான்! இது ஒன்றே ஞான மார்க்கம்!

இதுவே உயர்ந்த வழி! உன்னதமான பாதை! இறைவனை அடைந்து பேரின்பம் அருளும் ஞானநிலை! இவ்வழி விழிவழி தவம் செய்து மேன்மை பெற்றவர்களே இதுவரை இவ்வுலகல் தோன்றிய ஞானிகள் அனைவருமே! இதில் ஒன்றும் சந்தேகமே இல்லை! இது ஒன்றே இறைவனை அடையும் சத்திய வழி!

நித்திய ஜீவனை அடைய நிர்மலன், விமலன், விஸ்வேஸ்வரன், பரம்பொருள், பரமபிதா எல்லாம் வல்ல இறைவன் நம் உடலில் கண்ணில் மணியில் ஒளியாக துலங்குகிறான் என்பதை உணரவேண்டும்! இதுவே சாகாக்கல்வி!

நீங்கள் எதை அறிந்தவரானாலும் சரி! எந்த பயிற்சி, முயற்சி செய்பவராயினும் சரி! எல்லாம் விடுத்து, நம் உடலிலே உயிராக இருக்கும் இறைவனை காண, உணர மெய்ப்பொருளான கண்மணி ஒளியை அறியவேண்டும் தீட்சை மூலம் உணரவேண்டும் தவம் செய்யவேண்டும்! பின்னரே ஞானம் கிட்டும்! ஞானதானம் செய்ய

வேண்டும் பின்னரே பூரணத்துவம் கிட்டும்!

வேத புராண இதிகாச உபநிஷதங்களை உபதேசித்த ஞானிகள் பலகோடி பேர் இந்தியாவிலே! யுகம் யுகமாக ஞானப்பாடம் கேட்டவர்களோ கோடானுகோடிபேர்கள்! வாழையடி வாழையாக இன்றும் எத்தனையே சித்தர் பெருமக்கள் மெய்ப்பொருள் உபதேசம் கூறி, எல்லோரும் மெய்ஞ்ஞானம் பெற வழிகாட்டி வருகிறார்கள்! கடந்த 150 ஆண்டுக்கும் மேலாக நமது திருஅருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் உலகருக்கு ஞானம் வழங்குவதில் முதன்மையானவராக திகழ்கிறார்! புத்தர் பெருமான் நமது இந்தியாவில் பிறந்து உலகரை கவர்ந்தார்! இயேசுபெருமான், நபிபெருமான், குருநானக், மகாவீரர் போன்ற ஞானிகள் உபதேசத்தால் உலகின் பலகோடி மக்கள் ஈர்க்கப்பட்டனரே! இறைவனை அறியச்செய்தனர், உணரச் செய்தனர் இதுவே ஞானதானம்!

ஞானிகள் இயல்பு, தான் பெற்ற இறை அனுபவத்தை, மெய்ஞ் ஞானத்தை, உலகருக்கு அன்போடு கருணையோடு உபதேசித்து எல்லோரையும் நல்வழிப்படுத்துவது ஒன்றே!! அதற்காக அவர்கள் பட்டதுன்பம் ஒன்றா இரண்டா?! முட்டாள் உலகம் ஞானிகளை அவர்கள் வாழ்ந்த போது உணர்ந்ததேயில்லை!?

இயேசுவை சிலுவையில் அடித்தது இந்த முட்டாள் உலகந்தான்! முகமது நபியை கல்லால் அடித்து துரத்தியது இந்த முட்டாள் உலகம்தான்! சாக்ரடீசுக்கு விஷம் கொடுத்ததும் இந்த முட்டாள் உலகம்தான்! மகாத்மா காந்தியை துப்பாக்கியால் சுட்டு கொன்றது இந்த முட்டாள் உலகம்தான்! இன்னும் எவ்வளவோ சொல்லலாம்! ஏனெனில் உலகில் அதிகப்படியாக இருப்பவர்கள் முட்டாள்களே!? அறியாமையின் சிகரங்கள்!? ஆணவத்தின் பிரதிபிம்பங்கள்?!

உலகம் ஞானிகளுக்கு துன்பத்தையே கொடுத்தது! ஞானிகள் அதை ஏற்று உலகருக்கு அன்பாக, கருணையாக நல்லதையே செய்தனர்! ஞானதானமே புரிந்தனர்! மக்களின் அறியாமையை போக்க அரும்பாடுபட்டனர்! எந்த ஒரு ஞானியும் உலக மக்களிடையே எந்த வேற்றுமையும் கண்டாரில்லை! உலக மக்களை இறைவனின் குழந்தைகளாகவே கருதினர்! எல்லாரிடமும் அன்பு பாராட்டினர். கருணை மழையையே பொழிந்தனர்! இதுவே ஞானம் பெற்றவர் இயல்பு!

**“எங்கே கருணை இயற்கையில் உள்ளன**
**அங்கே விளங்கிய அருட்பெருஞ்ஜோதி”**

**“யாரே என்னினும் இரங்குகின்றார்க்கு**

**சீரே அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி''**

திருவருட்பிரகாச வள்ளலார் கூறிய ஞானிகளுக்குரிய இலக்கணம் - இலட்சணம் இதுவே! வாடிய பயிரை கண்டும் வாடுவர் அவர்கள்தான் உத்தம ஞானிகள்!

"உடம்பினை பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்"

இதுவே ஞானம்! இதை கற்பிப்பதே சாகாக்கல்வி!

கண்டு கொண்டவர்களை நினைந்து கைதொழு! கற்பிப்பவர்களை கண்டால் காலில் விழு! வள்ளலார் உரைத்த சன்மார்க்கமே சனாதன தர்மநெறி! மக்கள் மாக்களாக இல்லாமல் மக்களாக வாழ விழியே வழி என விழிப்புணர்வு ஊட்டுவதே சன்மார்க்க நெறி! வள்ளலார் உபதேசம்! இது ஒன்றும் புதியதொரு மார்க்கமன்று! இதுவரை இவ்வுலகில் தோன்றிய ஞானிகள் எல்லோரும் உபதேசித்ததே! எல்லா வேதமும் உரைத்த ஞானமே!

**''சாகாதவனே சன்மார்க்கி!''**

உண்மையான சன்மார்க்கி யார் என்பதற்கு வள்ளலார் கொடுத்த பதில் இதுவே! சாகாநிலை எல்லோரும் பெற வழிகாட்டுவதே சன்மார்க்க சங்கம்! சத்திய ஞானசபையில் வடலூரில் காட்டப்படும் தைப்பூச ஜோதி தரிசனம் மனிதர்களின் ஞான அகவிளக்கமே! ஞான தவ அனுபவ நிலையே! உணர உபதேசித்த வள்ளலார் விளக்கமாக செய்தும் காட்டியுள்ளார்! தோன்றாத்துணையாக துலங்கி விழி திறந்து வழிகாட்டியும் வருகிறார்! அறிவார் அறிவர்! அறிவால் அறிவர்! நம்பிக்கை உள்ளவரே பெறுவர் ஞானம்! நம்பிக்"கை" தொழுதாலே, காண்பர் கண் ஒளியை! கண்மணியை! கண்ணான கடவுளை!

'செத்தால் தெரியும் செட்டியார் நிலைமை' என்றொரு பழமொழி உண்டு! செட்டியார் உலகத்தில் வாழ்ந்தபோது செய்தது பாவச் செயல்களா புண்ணிய செயல்களா என்பதை செத்தபின் உலகம் பேசுவதை வைத்தே புரிந்து கொள்ளலாம்!

இது சாதாரண மனிதன் நிலை! ஆனால் அசாதாரணமான மனிதர்கள் செத்துப்போகாமல் ஜீவனை ஒடுக்கி விடுகிறார்களே! சாமாதியாகி விடுகிறார்களே?! உன்னதநிலை!

இன்னும் அசாதாரணமான ஒரு சிலர் தவத்தால், பஞ் சபூதத்தால் ஆன உடலை பஞ்சபூதத்தில் ஏதாவதொன்றில் மாற்றிக்கொள்கிறார்கள்! இது அதி உன்னத நிலை! பட்டினத்தார்

சிவலிங்க சொரூபமானார்! இராமன் சரயு நதியில் கரைந்தார்! அற்புதமல்லவா?

இவை எல்லாவற்றையும் தாண்டிய நிலையே ஒளியாவது!! பத்திரகிரியார், ஆண்டாள், நந்தனார், மணிவாசகர், திருஞான சம்பந்தர் உற்றார் சுற்றம் புடை சூழ கூண்டோடு ஒளியாகி கலந்தனர்! ஒளிநிலை பெற்ற ஞானிகள் நம் நாட்டிலே இன்னும் ஏராளம்! ஏராளம்! உதாரணத்திற்கு சிலரை மட்டும் இங்கே குறிப்பிட்டேன்! மகாவதார பாபாஜி கங்கை கரையில் ஒளியாக காட்சி கொடுத்தார் என்றுதானே கூறியிருக்கிறார்கள்!

இயேசுபெருமான் கல்லறையிலிருந்து மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார்! ஒளியாக!! இதுவும் சத்தியம் தானே! அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளால், "செத்தார் எழுவார் என்று கைத்தாளம்போடு" என்று வள்ளலார் கூறுகிறார்! பாடுகிறார்! அதற்கு உதாரணம் இயேசுபிரான் தானே!

உலக மாந்தரே! ஜாதி, மதம், இனம், மொழி, நாடு என பிரித்துப் பார்க்காதீர்கள்! எல்லா ஞானிகளின் உபதேசத்தையும் உற்றுநோக்குங்கள்! உண்மை ஒன்றே என்று உணர்வீர்! கடவுள் ஒருவரே! அருள்மயமான பேரொளியாக எங்குமாய் துலங்குபவர்! ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்! நம் உடலிலும் கண்ணில் மணியில் ஒளியாக துலங்குகிறார்! அன்பாக, கருணையோடு நட! உன் ஜீவனை இரட்சிக்க நீ தவம் செய்! இறை இரகசியத்தை எல்லோருக்கும் எடுத்துக் கூறு இதுவே ஞானதானம்! செய்! செய்! அல்லது செத்துவிடுவாய்!

"என்மார்க்கம் இறப்பு ஒழிக்கும் சன்மார்க்கம் வம்மின் உலகியலீர் மரணமிலா பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்" என்று உலக மக்கள் அனைவரையும் கூவி அழைக்கிறார் வள்ளலார்!! வாருங்கள் மானிடரே, கன்னியாகுமரிக்கு! வள்ளல் உரைத்த சாகாக்கல்வியை அடியேன் உபதேசிக்கிறேன்! வள்ளல் அருளினாலேயே!!

கன்னியாகுமரியிலே இருந்து, ஞான உபதேசம் நல்கி, மெய்ப்பொருள் அறிவித்து மெய்ஞ்ஞான தீட்சை வழங்கிட "தங்கஜோதி ஞான சபை" உருவாக்கி உடனிருந்து வழிநடத்தி காத்து அருள்புரிகிறார் நம் வள்ளல் பெருமான்! "நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன்" என்று சொன்னதை கன்னியாகுமரியில் அடியேன் மூலம் செயல்படுத்திக் காட்டுகிறார்! நம் வள்ளல்பெருமான்! தீட்சை பெற்ற அன்பர்கள் காணிக்கையாக கட்டித்தந்ததுதான் "தங்கஜோதி ஞானசபை!" வாருங்கள்!

கண்ணின் மணியில் ஒளியை கண்டு தவம் செய்வதே ஞானநிலை! மோனநிலை! “சும்மா இரு” என ஆதிகுரு தட்சிணாமூர்த்தி மோனமாக இருந்து உணர்த்திய நிலை! “சும்மா இரு” என அருணகிரி நாதருக்கு தகப்பன்சாமியான முருகப் பெருமான் நேரில் தோன்றி உபதேசித்த ஞானநிலை! இதுவரை இவ்வுலகில் தோன்றிய தோன்றியருளிய அனைத்து ஞானிகளும் சித்தர்களும் உபதேசிக்கும் ஞானநிலை! இதுவே சாகாக்கல்வி! திருவருட்பிரகாச வள்ளல் இராமலிங்க சுவாமிகள் உலகில் தோன்றியதே உலகருக்கு இந்த சாகாக்கல்வியை உபதேசிக்கத்தான்! இதைத்தான் அடியேன் செய்கிறேன்!

அடியேனை, நாயினேனை, பாவியினை ஒரு பொருட்டாக கருதி வலிந்து வந்து ஆட்கொண்டு திருவடி உபதேசம் தீட்சை தந்து மெய்ப்பொருள் உணரச்செய்து நல் அனுபவங்கள் தந்து அடியேனின் பொல்லா வினையகற்றி அடித்து துவைத்து சீர்செய்து பின் குருவாக்கி நல்ல அன்பர்களை தந்து கன்னியாகுமரியிலே தங்கஜோதி ஞானசபையையும் தந்து சாகாக்கல்வியை உலகருக்கு வழங்கிட அருள்பாலித்திருக்கிறார் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்!! கூடவே இருந்து காத்து வழிநடத்துவது நம் வள்ளல் பெருமானே!! வாருங்கள்!! கன்னியாகுமரிக்கு!! வாழவே!!

அருள்மழையென திருஅருட்பாவை உலகுக்கு அருளிய அருட்பிரகாச வள்ளல்பெருமான், சாகாக்கல்வியை உபதேசித்தார்! சாகாக்கல்வியை உணர வடலூரில் சத்திய ஞானசபையை உருவாக்கினார்! ஜோதி தரிசனம் கண்டு அகவழிபாடு செய்ய வழிகாட்டினார்! மானஸபூஜையே சும்மா இரு என ஆதிகுரு உபதேசித்ததையே நாமும் உணர்ந்து பேரின்பம் பெற அழைக்கிறார் வள்ளலார்! ஆன்மீக புரட்சியாளர் அருள்பிரகாச வள்ளலே!

நீங்கள் “மனிதன்” என்ற தகுதியே சாகாக்கல்வி கற்கப் போதுமானது! மனிதனுக்குரிய நல்லொழுக்க சீலனாக இருப்பதே தகுதி! எந்தவித பேதமுமில்லை!

**“குருவை வணங்க கூசி நின்றேனோ”**

**“குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ”**

என வள்ளல் பெருமான் மனுமுறை கண்ட வாசகத்தில் தெளிவாக கூறியருளியுள்ளார்கள்! குருவை பணிந்து சாகாக்கல்வி கற்றுக்கொள்ளுங்கள்! ஞானதானம் செய்யுங்கள்! சாகாக்கல்வி உபதேசத்தை நன்றாக அறிந்து தெளிந்து உணர்ந்து ஞானதவம் செய்க! கிட்டும் வள்ளல் அருள்! துணை சற்குருவே!

அம்மையப்பனான குருவை பணிந்து தலை வணங்கி காணிக்கை கொடுத்து சாகாக்கல்வியை உபதேசம் பெறுக! தீட்சை பெறுக!

இந்த சாகாக்கல்வியை, மெய்ப்பொருள் உணர்த்தும் ஞான நிலையை, குருமூலம் உபதேசம் பெற்று குருவிழிவழி உணர்த்தப் பெற்று ஞானதவம் செய்பவனே வணக்கத்திற்குரியவன்!

“கண்ணின் மணியில் கருத்தின் தெளிவை
விண்ணில் நின்று விளங்கும் மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்தொழும் தெய்வமே”

தாயுமான சுவாமிகள், நான் இறைவனை வணங்குகிறேன், எனக்கூறவில்லை!? விண்ணில் நிறைந்து விளங்கும் பேரொளியை மெய்ப்பொருளை யார் ஒருவர் தன் கண்ணில் மணியில் அறிந்து உணர்ந்து கருத்தை அதில் வைத்து தெளிவாக, சும்மா இருந்து இரவு பகலாக சதாகாலமும் தவம் செய்கின்றார்களோ அவரே நான் வணங்கும் தெய்வம் என்கிறார்!

நாம் சொல்லும் சாகாக்கல்வியை கற்றவரே, தவம் செய்பவரே! வணக்கத்துக்குரியவர்! என ஞானிகளும் போற்றுகின்றாரெனில் யாம் சொல்லும் இந்த சாகாக்கல்வி எவ்வளவு உயர்நிலை! ஒப்பற்ற ஞானநிலை என்பதை உணரலாம்! இதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஞானம் பெற வேண்டாமா? வாருங்கள்!

இதுவரை பலரும் ஞானத்தை விளக்குகிறேன் என்று நூல் பல எழுதி வெளியிட்டுள்ளனர். அடியேன் உரைத்தது போன்று ஞான இரகசியங்களை இதுவரை யாருமே வெளிப்படுத்தவில்லை!? வள்ளல் பெருமான் வழிகாட்டுதலே, விழிகாட்டியதாலேயே, அடியேனை எழுத வைத்ததாலேயே அடியேனால் இதுவரை 24 நூல்கள் எழுதி வெளியிட முடிந்தது!!

ஆன்மீக புரட்சியாளர் வள்ளலாரின் அடியவன் யான்! அவர் கொடுத்த ஊக்கம்தான், அடியேனால், இதுவரை மறைக்கப்பட்ட ஞான இரகசியங்களை வெளிப்படுத்த முடிந்தது!

ஆஸ்ரமம் நடத்தும் ஆன்மீக குருமார்களே அடியேன் நூற்களை கண்ணுற்ற பிறகாவது அறிவுதெளிந்து உண்மை ஞானத்தை, மெய்ப்பொருளை சாகாக்கல்வியை கண்ணில் மணியில்தான் ஒளியாக இறைவன் துலங்குகிறான் என்பதை கூறலாமல்லவா? கூறுங்கள்! மக்கள் உணரட்டும்! எல்லோருக்கும் ஞானம் கிட்டட்டும்!

இராகதுவேஷாதிகளை விடுத்து ஆன்மநேய ஒருமைப்பாடு

உணர்வுடன் அனைவரும் நடந்து கொள்ளுங்கள்! பரந்த மனப்பான்மையுடன் திறந்த உள்ளத்துடன் ஞானத்தை சொல்லுங்கள்! நீங்கள் முதலில் உண்மையை உணருங்கள்! நாடி வருபவருக்கெல்லாம் நல்லநெறியை மட்டுமே உபதேசியுங்கள்!

எப்படி வேண்டுமானலும் இருக்கலாம் தவம் செய்தால் போதும் என்றுரைக்காதீர்கள்! ஒரு போதும் இது கூடாது! இப்படித்தான் இருக்க வேண்டும் என சன்மார்க்கத்தை போதியுங்கள்! அப்படி வாழ்ந்தால் மட்டுமே ஞானம் கிட்டும்! ஞானம் துன்மார்க்கிகளுக்கு ஒருபோதும் கிட்டாது! தீய பழக்கவழக்கங்கள் உள்ளவன் உடல் கெடும்! உள்ளம் கெடும்! பாவச்சுமை கூடும், எப்படி ஐயா ஞானம்கிட்டும்? வேஷம் போட்டு ஏமாற்றும் போலி ஆசாமிகளிடம் உஷாராக இருங்கள்! கபட நாடகமாடும் ஆசாமிகள் பலர் உலாவுகிறார்கள் ஜாக்கிரதை! பாழாய் போய் விடாதீர்!

ஏதோ ஒரு சில தெரிந்துகொண்டு நானும் குரு என நிறையபேர் கிளம்பியிருக்கிறார்கள்!? ஏதோ ஒரு குருவிடம் இருக்கும் சீடன் குரு இறந்த பின் நான்தான் குரு என சீடர்கள் பலரும் கிளம்பிவிடுகிறார்கள்! “குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி குழி விழுந்தமாறே” என திருமந்திரம் போலி குருமார்கள் பற்றி நமக்கு எச்சரிக்கை செய்கிறது!

இன்னும் சிலர் குருவுக்கே புத்தி சொல்பவராயிருக்கிறார்கள்! குரு அறியாததா?! நான் சொல்வதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும் என குருவுக்கு கட்டளைபோடும் மடையர்களும் உள்ளனர்! இவர்களெல்லாம் ஞானம்பெற அருகதையற்றவர்கள்!

குருவே தெய்வம்! குரு வார்த்தையே வேதம்! குரு தரிசனம் பாவவிமோசனம்! குருவின் திருவடியே பரமபதம்! குருவின் வார்த்தையே மந்திரம்! குருசேவையே உன்னத இறைபணி! குருவை பணிந்தவனே ஞானம் பெறுவான்! குருவை போற்றுபவனே அறிவு பூரணமாக பெறுவான்! சர்வமும் குருவே! சகலமும் குருவே! என்று சும்மா இருப்பவனே இறைவனை அடைவான்!

சாகாக்கல்வியே சாகாக்கலையாம்! இதுவே இறவாமல் வாழுங்கலையாம்! சாகாமல் இருந்தாலே பிறவா பெருநிலை கைக் கூடும்! இதைத்தான் எல்லா ஞானியரும் கேட்டனர் இறைவனிடம்! அதையே இறவா பெருநிலை என்று எல்லா வேதங்களும் கூறுகிறது! இந்த சாகாக்கல்விதான் மரணமிலா பெருவாழ்வை

# ஞான சற்குரு சிவசெல்வராஜ் அருளிய நூற்கள்

| | |
|---|---|
| ஆன்மீகப் புரட்சி ஆரம்பம் | கண்மணி மாலை |
| ஆன்மீக தெளிவு அளித்தது | அருள்மணி மாலை |
| ஆன்மா உணர்த்திய அன்னைக்கு | ஸ்ரீபகவதி அந்தாதி |
| ஆன்ம நேயத்துக்கு ஒரு | அருட்பெருஞ்ஜோதி அந்தாதி |
| சன்மார்க்க நெறியை அறிய | சன்மார்க்க தெய்வம் |
| சன்மார்க்க நெறி நின்ற சற்குரு | கோவிந்த சுவாமிகள் |
| சன்மார்க்க குருக்களுக்கு சாற்றினேன் | அஷ்டமணி மாலை |
| சன்மார்க்கி இவன்என சாற்றுமே | செல்வமே சீர் தாருமே |
| ஞானம் அருள்வான் ஞானபண்டிதன் | செந்திலாண்டவன் பாமாலை |
| ஞானம் வேண்டின் ஞாலம் உணர | அன்பு உதய மலர் |
| ஞானம் தருவார் ஞானவள்ளல் | வள்ளலார் விழியே |
| ஞானம் பூரணமாக ஞான நூல் | ஜோதிமணி மாலை |
| சித்தம் தெளிந்த சித்தர்களுக்கு | ஜோதி ஐக்கூ அந்தாதி |
| சித்தர் இவரும் சிறந்தவரே | சற்குரு ஜக்கி வாசுதேவ் |
| சித்தர் இவர் சிறப்பு சீரியதே | சத்திய சாயி பாபா |
| சித்தர் வழியில் சிவசெல்வராஜ் | சனாதன தர்மம் |
| சனாதன தர்மம் உரைப்பது | வள்ளல் யார் |
| சனாதன தர்ம நெறி வழியில் | இயேசு எழுபது |
| சனாதன தர்மம் இதுவே | ஞானக்கடல் பீர்முஹம்மது |
| சனாதனதர்மமே சன்மார்க்கம் | திருவருட்பா மெய்ஞான உரை |




நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : 233853